
ராணி
முத்து
கலைவாணி
ரூ. 6
கண்ணிலே
ஒரு வெண்ணிலா

# கண்ணிலே ஒரு வெண்ணிலா



## கலைவாணி சொக்கலிங்கம்



**1**

கனவுகள் பூக்கும் நேரம்
கவலைகள் மறக்கும் நேரம்
இதயத்தை பூட்டி வைக்காமல்

***இமைகளை மட்டும் பூட்டி வைப்போம் விடியும் வரை!***

ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் அன்பரசி. விடிவதற்கு இன்னும் நேரமிருக்க- படுக்கையில் ஒருக்களித்து சுகமாய் தூங்கிக்கொண்டிருந்தாள். சின்னஞ்சிறு நிலவு முகம். தூக்கத்திலும் புன்னகையோடு இருக்கும் மென்மை ததும்பும் அழகு முகம். முன்நெற்றி வரை இருந்த கூந்தல்கற்றைகள் காற்றில் நடனமாடிக்கொண்டிருக்க, அவளது படுக்கையைச் சுற்றி அவர்கள் நின்றனர்.

அவளின் உடன்பிறப்புக்களான தமிழரசி, கோபி கிருஷ்ணன், கடைக்குட்டி இளவரசி. அவர்களது கையில் சில பொருட்கள்!

விடிவிளக்கு அணைக்கப்பட்டிருக்க... அறை முழுக்க கும்மிருட்டு.

தமிழரசி மெதுவாய் கிசுகிசுத்தாள்.

"கோபி! 'டைம்' என்ன?"

"மூணு மணி, பதினாலு நிமிஷம்"

ரேடிய முட்கள் பதித்த தனது கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே அவன் சொல்ல, இளவரசி அவசரப்படுத்தினாள்.

"எழுப்பிடலாமா?"

"இன்னும் ரெண்டு நிமிஷம் இருக்கு. பொறு" என்றவன், முழுதாய் இரண்டு நிமிடங்களானதும், கிசுகிசுப்பாய் குரல் கொடுத்தான்.

"ம்... இப்ப எழுப்பு!" என்றதும், இளவரசி உற்சாகமாய் இருட்டில் துழாவி... அன்பரசியின் காதை நெருங்கி ரகசியமாய் அழைத்தாள்.

"அக்கா! அக்கா"- காதோரம் ஒலித்த மென்குரலில் அன்பரசியின் உறக்கம் லேசாய் கலைந்தது. மெல்லிய முனகலோடு புரண்டு படுத்தாள். இப்போது மூவரும் சேர்த்து அழைக்க, 'திடுக்'கென விழித்தாள்.

அறை முழுக்க இருட்டாய் இருக்க- கண்களை விரித்துப் பார்த்தாள். 'கரண்ட்' போய்விட்டதா? யாரோ அழைத்தார்களே!'

"தமிழ்... கோபி... யாருடா என்னை எழுப்பினது?"- மெல்ல குரல் கொடுத்தவாறே கைகளால் துழாவ, தனக்கு வெகு அருகே தீக்குச்சி உரசும் ஓசை கேட்டது. திகைப்பாக எழுந்து அமர்ந்தாள்.

மெல்லிய வெளிச்சத்தில் மூவரும் புலப்பட, நிம்மதியாய் நிமிர்ந்தவளின் முகம் மலர்ந்தது. கோபி கிருஷ்ணன், மெழுகுவர்த்தியை ஏற்ற... அதை வாங்கி வட்ட வடிவமான 'கேக்' மீது செருகினாள் தமிழரசி.

"ஹேப்பி பர்த்டே டூ யூ. ஹேப்பி பர்த்டே டூ அக்கா. ஹேப்பி பர்த்டே



டூ யூ"- மூவரும் ஒருமித்த குரலில் பாட, உறக்கம் முற்றிலும் கலைந்து உற்சாகமாய் புன்னகைத்தாள். மனமும், உடலும் புல்லரித்தது.

"ஹேய்! என்னடா இதெல்லாம்?"

"எங்க அக்காவுக்கு இன்னியோட இருபத்தி நாலு வயது முடிஞ்சி, இருபத்தி அஞ்சு பொறக்கிறதால இந்த இனிய பொன்னாளை நாங்க விழித்திருந்து கொண்டாடுகிறோம்"- என உடலை வளைத்து பணிவாய்ச் சொன்ன இளவரசியைக் கட்டிக்கொண்டாள் அன்பரசி.

"நன்றிடா. நான்கூட மறந்தே போயிட்டேனே... கோபி, 'லைட்'டை போடுடா."

"போட்டாச்சு" என்றவாறே உள்ளே நுழைந்திருந்த கோபி, 'ஸ்விட்'சைத் தட்ட... அறை முழுக்க வெளிச்சம் பரவியது; கடிகாரத்தைப் பார்த்தவள் வியந்தாள்.

"என்னடா இது? மணி மூணரைதான் ஆகுது. இப்பவே 'கேக்'கோட வந்திருக்கீங்க?"

"அக்கா! மூணு மணி பதினாறு நிமிஷத்துலதான் நீ பொறந்தியாம். அதான் அதே நேரத்தில் கொண்டு வந்தோம். எப்படி?"

"ம். இதெல்லாம் நல்லாத்தான் இருக்கு. ராத்திரி முழுக்க முழிச்சிட்டு, விடிஞ்சதும் 'காலேஜ்'ல போய் தூங்குவியா? ஏய்! சின்னக்குட்டி! நீயும் இவங்ககூட சேர்ந்து ஆட்டம் போடுறியா? பள்ளிக்கூடம் போய் தூக்கம் வந்தா என்ன பண்ணுவியாம்?"

"அக்கா! நம்ம எல்லாருக்குமே 'லீவு'க்கா!"

"என்ன... லீவா? இன்னிக்கு வெள்ளிக்கிழமைதானே? இன்னிக்கு என்ன லீவு?"

"நாமதான் 'லீவு' போடுறோம்."

"எதுக்கு?"

"உன் பிறந்த நாளை ஜாலியா கொண்டாடப் போறோம்."

"உதை வாங்கப் போறீங்க! இது என்னடா புதுப் பழக்கம்?"

"போக்கா! இத்தனை வருஷமா நீ மட்டும்தான் வேலைக்குப் போவ? அதனால எளிமையாக ஒரு பால் பாயசத்தோட கொண்டாடி முடிச்சிடுவோம். இப்பத்தான் நானும் வேலைக்குப் போறேனே"- என்ற தமிழரசியை முறைத்தாள் மூத்தவள்.

"அதுக்கு?"

"அதான்... கொஞ்சம் பெரிய அளவுல கொண்டாடலாம்னு 'ஐடியா' பண்ணினோம்.

"தப்பு! இந்த சின்ன விஷயத்துக்காக எல்லாம் 'லீவு' எடுத்து, படிப்பை வீணாக்கக்கூடாது. முதல்ல படிப்பு. அப்புறம்தான் இதெல்லாம். சரியா...?"

"ம்ப்ச்! என்னக்கா நீ! இன்னிக்கு கணக்கு பரீட்சை இருக்குக்கா. அதுல இருந்து தப்பிக்கலாம்னு பார்த்தா..."– என செல்லமாய் சிணுங்கிய இளவரசியின் காதை வலிக்காமல் திருகினாள் அன்பரசி.

"வாலு! கணக்குல 'வீக்'கா இருக்கேன்னு நான் 'டியூஷனுக்கு' அனுப்பினா... நீ கணக்கு பரீட்சை அன்னிக்கே 'கட்' அடிக்கிறியா? பிச்சுப்புடுவேன்."

"போக்கா! நீ எப்பவும் இப்படித்தான். தமிழக்கா! அடுத்த மாதம் உன் பிறந்த நாள் வருமில்லே. அப்ப நாம எங்கேயாவது வெளியே போகலாம். சரியா...?"

"அதை அப்பப் பார்க்கலாம். இப்போ நீ பரீட்சைக்குப் படி. ம்... போ சீக்கிரம்...!"

"முதல்ல 'கேக்' வெட்டுக்கா. மெழுகுவர்த்தி கரையப் போகுது."

"அம்மா– அப்பா எல்லாம் எழுந்துக்கட்டும்டா."

"அப்பா இன்னிக்கு நிறைய வேலை இருக்குன்னு நேத்து ராத்திரியே போன் பண்ணி சொல்லிட்டாங்க. அம்மாவை நாங்களே எழுப்பி விட்டுட்டோம். பல் துலக்கிட்டு இப்ப வந்திடுவாங்க."

"என்ன கோபி! அம்மாவை ஏன் இப்படி அர்த்த ராத்திரியில எழுப்பிவிட்டீங்க? பாவம்டா!"

"நல்லாச் சொல்லும்மா! கழுதைங்க வளர வளர குழந்தையா ஆகிக்கிட்டு போகுதுங்க"– என்றவாறு சேலைத் தலைப்பால் முகத்தை ஒற்றிக்கொண்டே உள்ளே வந்தாள் அம்பிகை.

அரைகுறை உறக்கம் கலைந்த நிலையிலும் அழகான –களையான முகம். சுறுசுறுப்பும், கனிவும் குடிகொண்டிருக்கும் நடமாடும் தெய்வம். அந்தக் குடும்பத்தின் மொத்த உறுப்பினர்களுக்கும் தந்தை வாசுதேவனையும் சேர்த்து அம்பிகை மட்டுமே ஆதாரம்.

அம்பிகைக்கு கணவனும், குழந்தைகளும் மட்டுமே உலகம். அவர்களுக்கு அம்பிகை மட்டுமே உலகம்! தாயைக் கண்டதும் கட்டிலைவிட்டு இறங்கி, பாதம் தொட்டு வணங்கினாள் அன்பரசி.

"ஆசிர்வாதம் பண்ணுங்கம்மா."

"மகராசியா இருடா கண்ணு. இந்தப் பிறந்தநாள் உனக்கு சந்தோஷமா அமையட்டும்"– என மகளின் நெற்றியில் முத்தமிட்டு வாழ்த்தினாள்.

"சரி... சரி. சீக்கிரம் வந்து 'கேக்'கை வெட்டுக்கா."



"நான் இன்னும் பல்கூட தேய்க்கலையே!"

"நீ 'பர்த்டே பேபி'. பல்லு தேய்க்காட்டி தப்பில்லை. வாக்கா."

"அப்பா?"

"அப்பா வர 'மிட் நைட்' ஆகிடும்க்கா. அப்புறம் பிறந்த நாள் முடிஞ்சிடும்."

"ஆமாம்மா! அப்பாவுக்கு ரெண்டு நாள் முழுக்க வேலை இருக்குதாம். நீ 'கேக்'கை வெட்டு. பாவம்! இவ்வளவு நேரம் முழிச்சிட்டு இருந்தாங்களே. வயிறு பசிக்கும்."

"பார்த்தியா! அம்மா அம்மாதான். நம்ம பசியை சரியா கண்டுபிடிச்சிட்டாங்க பாரு"– தமிழரசி, தாயை மெச்சினாள்.

"சரி... சரி. அக்கா 'கேக்' வெட்டப் போறா! எல்லோரும் 'பர்த்டே' பாட்டு பாடுங்க"– என்றதும், அனைவரும் கைதட்டி வாழ்த்த– 'பிளாஸ்டிக்' கத்தியால் 'கேக்'கை வெட்டினாள் அன்பரசி.

கோபி ஏதோ ஒன்றை வெடிக்க, ஜிகினாத் தாள்கள் பூத்தூறலாய் பறந்து பரவ– அன்பரசியின் இதயம் சிலிர்த்தது. அனைவருக்கும் 'கேக்'கை ஊட்டிவிட, அவர்களும் அவளுக்கு ஊட்டி விளையாட... கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது.

"போதும் விளையாடியது. போய் அவங்கவங்க வேலையைப் பாருங்க. அம்மாவுக்கு நிறைய வேலை இருக்கு. அன்பு! நீ போய் முதல்ல குளிச்சிட்டு வா. அரசி! நீ போய்ப் படி. தமிழ்! நீ அம்மாவுக்கு கொஞ்சம் பாத்திரம் கழுவித்தாம்மா"– என அனைவருக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்தாள் அம்பிகை.

"அப்போ அண்ணனுக்கு மட்டும் வேலை கிடையாதா? அவன் மட்டும் உங்க செல்லமா?"– இளவரசி பொய்க் கோபமாகக் கேட்டாள்.

"யார் சொன்னது? அவனுக்கும் வேலை இருக்கு."

"அம்மா"– சிணுங்கினான் கோபி.

"இந்த அறையைக் குப்பையாக்கினது நீதானே? நீயே இதை சுத்தம் பண்ணணும்."

"ம்... நல்ல வேலை" என்ற தங்கையின் தலையில் 'நறுக்'கெனக் குட்டினான்.

"வாயாடி! என்னை மாட்டி விடலைன்னா உனக்கு தூக்கம் வராதே?"

"கோபி! அங்கே என்ன சத்தம்?"

"ஒ... ஒண்ணுமில்லம்மா! அரசிய... படிக்கச் சொன்னேன்."

அன்பரசி புன்னகையோடு குளியறைக்குள் நுழைந்தாள். துணிகளை துவைத்துக் குளித்து வெளியே வந்தபோது, நெய் மணம் கமழ, கேசரி தயாராகிக்கொண்டிருந்தது.

"ம்மா! கேசரி வாசம் மூக்கைத் துளைக்குதே."

"வந்திட்டியா! இரு... வர்றேன்" என்றவள், மர அலமாரியைத் திறந்து ஒரு 'கவரை' எடுத்து வந்து நீட்டினாள்.

"என்னம்மா இது?"

"புதுச் சேலை! ஜாக்கெட் எல்லாம் தெச்சு வெச்சுட்டேன். சரியா இருக்கா... பாரு. சேலையைக் கட்டிட்டு விளக்கேத்தி சாமி கும்பிடு. நான் சட்னி வெச்சிடுறேன்."

"நன்றிம்மா."

"அக்கா... ஒரு நிமிஷம்" என ஓடி வந்தாள் தமிழரசி.

"என்னடி?"

"இந்தா! இது என்னோட பரிசு"– என 'பார்சலை' நீட்டினாள்.

"என்னடி வாங்கினே?"– ஆர்வமாகக் கேட்டாள்.

"உன்னோட 'யூனிபார்ம்' ரொம்ப பழசாகிப் போச்சே! அதான் புதுசு வாங்கினேன்."

"எதுக்குடி இவ்வளவு செலவு பண்றே?"

"அப்பாகிட்ட காசு கறந்துதான் வாங்கினேன்."

"அக்கா! இது என்னோட சின்ன பரிசு"– என இரு வெள்ளை 'சாக்ஸை' பரிசளித்தான் கோபி. அன்பரசியின் கண்கள் கசிந்தன.

"என்னோட 'பாக்கெட் மணி'யில இதைத்தான் வாங்க முடிஞ்சது. எனக்கு வேலை கிடைச்ச பிறகு, உனக்கு பெரிய பரிசா வாங்கித் தர்றேங்க்கா."

"போதும்ப்பா! நீ சொன்னதே போதும்."

"எல்லாரும் நகருங்க. நான் எங்க அக்காவுக்கு 'கிப்ட்' கொடுக்க வேண்டாமா?"– என மற்றவர்களை விலக்கிவிட்டு முன்னே வந்த இளவரசியைப் பார்த்து கேலியாய் புன்னகைத்தான் கோபி.

"ஆமா! பெரிய பரிசு... இந்த வருஷம் என்ன? ரப்பரா... கைக்குட்டையா?"

"நான் ஒண்ணும் உன்னை மாதிரி 'கஞ்சூஸ்' இல்ல. என் அக்காவுக்கு புது 'லஞ்ச் பேக்' வாங்கி இருக்கேன். இந்தாக்கா... பிடிச்சிருக்கா?" என அவள் நீட்டியை 'பேக்'கை ஆவலாய் வாங்கிக்கொண்டாள் அன்பரசி.



"வாவ்! நானே புதுசு வாங்கணும்னு இருந்தேன். பழசுல வார் அறுந்து போச்சு."

"அதான்க்கா. அம்மாவும், நானும் போய் வாங்கிட்டு வந்தோம்."

"நன்றி குட்டி. எல்லாருக்கும் நன்றி."

"சரிம்மா! வேலைக்கு நேரமாகுதே. எல்லாரும் சாப்பிட வாங்க, சீக்கிரம். அன்பு...!"

"என்னம்மா?"

"நீ சாப்பிட்டுட்டு, போற வழியில அப்பாவுக்கு சாப்பாட்டை கொடுத்துடுறியா?"

"சரி..."

"சீக்கிரமா தலை வாரிட்டு வா! நான் 'கேரியர்'ல எடுத்து வைக்கிறேன்.

"சரிம்மா!"

"அப்படியே... 'பிரிட்ஜ்'ல பூ இருக்கு. ஆளுக்கு கொஞ்சம் வெச்சுக்கங்க. மதியத்துக்கு சாம்பார் சாதம் வெச்சிடலாமா?"

"ம்... சரிம்மா" என மொத்தமாய் பதில் வந்ததும், அம்பிகை சமையல் அறைக்குள் நுழைந்துகொள்ள– நால்வரும் அவசரமாய் தங்களது பணிக்கு புறப்பட்டனர்.

ஆடை மாற்றி தலைவாரி அம்மா தந்த பூவைச் சூடிக்கொண்டு நான்கு இட்லிகளை சாப்பிட்டுவிட்டு இளவரசி, கோபிகிருஷ்ணனின் சைக்கிளில் தொற்றியவாறே பள்ளிக்கூடத்துக்கு கிளம்பிவிட...தமிழரசியும் அவசரகதியில் தன் ஆசிரியை பணிக்கு புறப்பட்டுச் செல்ல– கடைசியாய் அன்பரசி தயாரானாள்.

"அன்பு! இது, உனக்கு மதிய சாப்பாடு. அது அப்பாவுக்கு. மறக்காம சாப்பிடச் சொல்லும்மா."

"சரிம்மா."

"பஸ்சுக்கு சில்லறை இருக்கா?"

"இருக்கும்மா. போயிட்டு வர்றேன்" என்றவாறே தன் தோள்ப் பையினுள் 'டிபன் பாக்ஸை' திணித்து தோளில் மாட்டிவிட்டு, தந்தையின் சாப்பாட்டுக் கூடையை கையில் எடுத்துக்கொண்டு பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அப்பா இருந்தால் தன் இருசக்கர வாகனத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டு, தனது அலுவலகத்துக்கு செல்வதுண்டு. இன்று அப்பா 'ஓ.டி.' பார்ப்பதால், தனக்கு பேருந்து பயணம். எவ்வளவு கூட்டத்தோடு

வருமோ? வருகிற பேருந்து, நிறுத்தத்தில் நிற்க வேண்டுமே!

நடையை எட்டிப் போட்டாள். போகிற வழியில் ஒரு நிறுத்தம் முன்னமே இறங்கி தந்தைக்கு சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு, ஒன்பது மணிக்குள் மருத்துவமனைக்குள் நுழைந்தாக வேண்டும்.

நடந்துகொண்டிருந்தபோதே சுற்றிலும் ஏதோ பரபரப்பு தென்பட, பார்வையைத் திருப்பினாள். தனக்கு எதிரே வந்து கொண்டிருந்தவர்களின் பார்வை பீதியால் விரிய, தானும் குழப்பமாய் பின்னால் திரும்பினாள்.

'தபதப'வென சத்தத்தோடு மூச்சிரைக்க ஒருவன் ஓடி வந்துகொண்டிருக்க- நான்கைந்து ஆண்கள் அவனை விரட்டியபடி வந்தனர்.

'ஏதேனும் அடிதடியோ?'- அன்பரசியின் உடல் நடுங்கத் தொடங்கியது.

## 2

*உன்னைக் காணும் வரை*
*சொர்க்கத்தைப் பார்த்ததில்லை!*
*உன்னைக் கண்ட பின்பு*
*சொர்க்கமே தேவையில்லை!*

**க**னத்த உடம்போடும், பரட்டைத் தலையோடும் உயரமாய் ஓடி வந்தவனை- தொடர்ந்து விரட்டிக்கொண்டு வந்தவர்களில் ஒருவன் அன்பரசியைப் பார்த்து குரல் கொடுத்தான்.

"மேடம்! அவனைப் பிடியுங்க... அவனைப் பிடியுங்க! ஹலோ... ஊதாச் சேலை! அவனைப் பிடியுங்க"- கணீரென்ற குரலில் அவன் கத்திக்கொண்டே ஓடி வர, அவள் அதிகம் திகைத்தாள்.

'ஊதாச் சேலையா? ஐயோ! என்னைத்தான் சொல்கிறானா? யார் இவன்? எதற்காக இவனை விரட்டுகிறார்கள்? இந்த ரவுடிக் கூட்டத்தோடு என்னையும் சேர்த்துவிடுவான் போலிருக்கிறதே!'

"ஹலோ... உங்களைத்தான். பிடியுங்க! இல்லாட்டி அவனைக் கீழேயோவது தள்ளிடுங்க! பிளீஸ்!"

அன்பரசி திகைப்பாய்- முன்னே ஓடி வந்தவனைப் பார்த்தாள். அசுர வேகத்துடன் ஓடிக்கொண்டிருந்தான் அவன். மானை விரட்டும்



சிங்கத்தின் ஓட்டம் அல்ல, அது. வேங்கையிடம் இருந்து தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடும் மானின் பய ஓட்டம்.

'இவனைப் பிடிப்பதா? ஒருவேளை இவனைக் கொல்லத்தான் விரட்டுகிறார்களோ? ஒரு உயிர் போக, நாம் ஏன் காரணமாக வேண்டும்? பேசாமல் போய்விடலாம்'- எனத் திரும்பிய நொடியில் அது நடந்தது.

'தொம்ம்' என அவளது வலது தோளில் பலமாய் மோதினான் அவன். மோதிய வேகத்தில் அன்பரசியின் வலது கையிலிருந்து சாப்பாட்டுக் கூடை தூரமாய்ப் போய் விழுந்து சிதறியது. திடீரென மோதிய அதிர்ச்சியில்- வேகத்தில் நிலை தடுமாறிப் போனாள்.

பம்பரம் போல் ஒரு சுற்று சுழன்று தடுமாறிக் கீழே விழப்போனபோது, ஓர் ஆணின் வலிய கரம் அவளைப் பற்றி நிறுத்தியது.

என்ன நடக்கிறது என அவள் உணர்வதற்குள், அதே கணீரென்ற குரல் மீண்டும் கேட்டது.

"ஹலோ! உங்களுக்கு ஒண்ணும் இல்லையே...?"

குரலுக்குரியவனின் இரும்புக்கரம்தான் தன்னைப் பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்து பதறி, அவனிடமிருந்த தன் கரத்தை விலக்கிக்கொண்டே நிமிர்ந்தாள்.

தன்னை இடித்துக்கெண்டு ஓடியவன் வெகுதூரமாய் போயிருக்க, இப்போது ஏழெட்டு பேர் அடங்கிய கும்பல் அவனைத் துரத்திக்கொண்டிருந்தது. தன் அருகே நின்றவனும் ஓடத் தயாரானபடியே கேட்டான்.

"மேம்! உங்களுக்கு ஒண்ணும் ஆகலையே!"

"இ... இல்ல."

"சரி, உங்க பொருட்கள் எல்லாம் கீழே கிடக்குது பாருங்க. அதை எடுத்துக்குங்க"- என்றவாறே அவன்- விட்ட ஓட்டத்தைத் தொடர, அன்பரசி கடுப்பாய் திட்டினாள்.

"பொறுக்கிப் பசங்க. இவங்க ரவுடித்தனத்துக்கு அளவே இல்லாமப் போச்சு. போலீஸ்காரங்க எல்லாம் என்ன பண்ணிட்டு இருக்காங்களோ...?"- அவள் சத்தமாகவே திட்ட, ஓடியவன் மூச்சுவாங்க நின்று திரும்பினான்.

அன்பரசிக்கு உடல் பலமாய் நடுங்கிற்று. பயமாய் எச்சில் விழுங்கியவாறே அவனைப் பார்த்தாள்.

ஒரு கணம்... ஒரே கணம்... அவளைப் பர்த்துவிட்டு மிக மெலிதான புன்னகையை சிந்திவிட்டு, தன் பலத்தையெல்லாம் திரட்டிக்கொண்டு

மறுபடி ஓடத் தொடங்கினான்.

அவன் தன் கண்ணைவிட்டு மறைந்ததும், சற்று நிம்மதியாய் கீழே பார்த்தாள். காலையில் அம்மா அவசரமாய்– ஆசையாய் சமைத்த கேசரியும், இட்லிகளும், சாதமும் சிதறிக் கிடந்தன. கண்களில் நீர் சுரந்தது.

'இது அப்பாவுக்கான சாப்பாடு ஆயிற்றே! வெளியில் சாப்பிட்டால் ஒத்துக்கொள்ளது என்பதால், அவர் கூடுதல் நேரம் உழைக்கும் நாட்களில் உணவைத் தானே கொண்டுபோய் கொடுத்துவிடுவாள் அன்பரசி.

மனம் கொதிக்க, குனிந்து பாத்திரங்களை சேகரிக்கையில் வலது தோள்பட்டை பலமாய் வலித்தது. 'இரும்பைப் போல் மோதினானே... எருமை மாடு! ஒதுங்கிப் போனால் என்ன?' மனதுக்குள் சபித்துக்கொண்டே இடது கையால்– வலித்த இடத்தை அழுத்திவிட்டுக்கொண்டாள்.

'அடடா... சாப்பாடெல்லாம் சிந்திப் போச்சே! ஏம்மா, இது மதிய சாப்பாடா?"– சாலையில் நின்றவர்கள் கேட்க, தலையை ஆட்டினாள். "ஆமா."

"உன் வீடு எங்கேம்மா?"

"இங்கேதான் பக்கத்துல..."

"அப்போ வீட்ல போய் வேற சாப்பாடு எடுத்துட்டு போம்மா" என்றார் ஒருவர்.

"காலம் கெட்டுப்போச்சு! இப்பல்லாம் பட்டப்பகல்லகூட பெண்கள் நடமாட முடியுறதில்ல."

"அதானே! அந்தத் தடிமாட்டுப் பய எப்படி இடிச்சிட்டு போனான் பார்த்தியா?"

"நல்ல வேளை... அந்தப் புள்ளையாண்டன் புடிச்சிக்கிட்டான். இல்லன்னா இந்தப் பொண்ணு ரோட்ல விழுந்திருக்கும்."

"சாப்பாடு போனாப் போகுது... விடும்மா. உனக்கும் ஒண்ணும் ஆகலையே! அதுவரைக்கும் சந்தோஷம்"– ஒருவர் ஒருவராய் ஆறுதல் சொல்ல, அமைதியாய் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

'நல்ல வேளை... அந்தப் புள்ளையாண்டான் புடிச்சிக்கிட்டான்.'

அவன் தொட்ட இடக்கரம் குறுகுறுத்தது. பார்வை இயல்பாய் அந்த இடத்துக்கு போக, இடது முழங்கைக்கு சற்று கீழே அவன் பற்றிய பகுதி லேசாய் கன்றி இருந்தது.

'முரட்டுப் பிடி... இரும்புக்கரம்! நிச்சயமாய் அவன் ஒரு ரவுடிதான். ச்சே! பிறந்தநாளும் அதுவுமாய் ரவுடியின் முகத்தில் விழிக்கும்படி ஆயிற்றே!– மனதுக்குள் அவனைத் திட்டித் தீர்த்துக்கொண்டே வீட்டை



அடைந்தாள்.

தாயிடம் முழு விபரத்தையும் சொன்னால் பயந்துவிடுவாள் என்று, 'கால் இடறியதில் சாப்பாட்டுக் கூடை கீழே விழுந்துவிட்டது' எனக் கூறி நம்ப வைத்தாள்.

அம்பிகை பதறிப் போனவளாய் மகளது தலையில் சிறிது திருநீரைத் தூவி– நெற்றியில் பூசிவிட்டு, பாத்திரங்களைக் கழுவி, மீண்டும் உணவை அடைத்து வழியனுப்ப...

ஓட்டமும், நடையுமாய் பேருந்தைப் பிடித்து ஏறி– கூட்ட நெரிசலில் நசுங்கி– கம்பெனிக்குச் சென்று சாப்பாட்டைக் கொடுத்தாள்.

தந்தையிடம் நின்று பேச நேரமின்றி மூச்சுவாங்க, ஓடி ஓடி வந்து திருவல்லிக்கேணி அரசு மருத்துவமனைக்குள் நுழைந்தபோது, மணி பத்தரை ஆகிவிட்டிருந்தது.

நில்லாமல் ஓடி, தங்களது உடை மாற்றும் அறையை அடைந்து, அலமாரியில் தனது உடமைகளை வைத்து பூட்டிவிட்டு, வெண்மை நிற செவிலியர் ஆடையோடு வெளியேறி, கூந்தலைக் கொண்டையாக்கியபோது, சக நர்ஸ் சந்தியா வந்தாள்.

"என்ன சிஸ்டர்... இவ்வளவு 'லேட்'டாக்கிட்டீங்க?"

"ஸாரி சந்தியா! வர்ற வழியில ஒரு சின்ன விபத்து... அதான் நேரமாகிப் போச்சு"– பேசிக்கொண்டே புறநோயாளிப் பகுதிக்கு விரைந்தார்கள்.

"விபத்தா... அடிப்பட்டிருச்சா?"

"இல்ல. சும்மா லேசான அடிதான். 'சீப் டாக்டர்' வந்தாச்சா?"

"உங்க நல்ல நேரம். இன்னும் வரல. 'ரிஜிஸ்டர்'ல கையெழுத்து போடுங்க."

"நன்றி சந்திய்யா! என்னால உனக்குத்தான் சிரமம். நான் ஒன்பது மணிக்கு வந்திருக்கணும்" என்றவாறே மருத்துவர் அறையை அடைந்து, மேசை மீதிருந்த வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட்டாள்.

"சரி, சந்தியா! இனி நான் பார்த்துக்கிறேன். நீ கிளம்பு."

"சரி சிஸ்டர்! நோயாளிகள் பெயர்கள் எல்லாம் இதுல எழுதி வெச்சிருக்கேன்."

"சரி."

"சிஸ்டர்! உள்ளே 'டிரஸ்ஸிங் ரூம்'ல ஒரு 'பேஷண்ட்' இருக்கார். கால்ல அடிபட்டிருக்கு. கட்டு போட்டுடுங்க. 'இன்ஜெக்ஷன்' போட்டுட்டேன்."

"சரி, நான் பார்த்துக்கிறேன். நீ போயிட்டு வா. என்னாலதான் உனக்கு தாமதமாகிடுச்சு. ஸாரிப்பா."

"பரவாயில்ல சிஸ்டர்! இன்னிக்கு பிறந்தநாள்ன்னு சொன்னீங்களே! கோவிலுக்கு போயிட்டு வந்திங்களா?"

"இல்லப்பா! சாயங்காலம்தான் போவோம். நான் எப்பவும் போல சீக்கிரமா வீட்ல இருந்து கிளம்பிட்டேன். வர்ற வழியில, சில ரவுடிங்க, ரோட்ல சண்டை போட்டுக்கிட்டாங்க. ஒருத்தனை ஏழெட்டு பேர் விரட்டிட்டுப் போனாங்க. அதுல ஒருத்தன் என்னை இடிச்சித் தள்ளிட்டு போயிட்டான்."

"ஐயோ! அப்புறம்...?"

"சாப்பாடெல்லாம் கீழே கொட்டி வீணாப் போச்சு. திரும்ப வீட்டுக்குப் போயி சாப்பாடு எடுத்துட்டு, அப்பாகிட்ட கொடுத்திட்டு வர 'லேட்'டாகிப் போச்சுப்பா."

"இருக்கட்டும் சிஸ்டர்! எப்பவும் எட்டே முக்காலுக்கு வந்திடுவீங்க. இன்னிக்கு வரலைன்னதும் 'லீவு' எடுத்துட்டீங்களோன்னு நினைச்சேன்."

"இல்ல... இல்ல. சொல்லாம நான் லீவு எடுக்கறதில்ல."

"ம்... ஹேப்பி பர்த்டே சிஸ்டர்"– சந்தியா, அன்பரசியின் கையைப் பற்றிக் குலுக்க... புன்னகையோடு லேசாய் முகம் சுருக்கினாள்.

"ஸ்ஸ்... தேங்க்யூ!"

"அந்த எருமை வந்து இடிச்சதுல தோள்பட்டை ரொம்ப வலிக்குதுப்பா."

"மருந்து போடவா சிஸ்டர்?"

"வேணாம். நீ கிளம்பு. நான் வீட்ல போய் போட்டுக்கிறேன். ஆமா! அந்த 'பேஷண்ட்' எங்கே இருக்கார்?"

"இதோ... இங்கேதான்"– அறையின் குறுக்கே போடப்பட்டிருந்த பச்சை நிறத் திரையைக் காட்டினாள் சந்தியா.

"அச்சோ! 'பேஷண்டை' வெச்சிக்கிட்டா இவ்வளவு நேரம் பேசிட்டு இருந்தோம்? போச்சு! நீ போ. நான் பார்த்துக்கிறேன்" என அவளை வெளியே அனுப்பிவிட்டு, மருந்துகள் அடங்கிய 'டிரே'யோடு திரையை விலக்கிவிட்டு உள்ளே நுழைந்தவள் பலமாய் அதிர்ந்தாள்.

மருத்துவமனையில் நோயாளிகளை பரிசோதிக்க படுக்க வைக்கும் உயரமான இரும்பு மேசை மீது உட்கார்ந்து, வலக்காலை மட்டும் நீட்டிக்கொண்டிருந்தான் அவன்– காலையில் அவளது கரத்தைப் பற்றியவன்.



அன்பரசிக்கு உடல் வியர்த்தது. 'ஐயோ! இவனா? இவனை வைத்துக்கொண்டா இவனைப் பற்றி பேசினோம்? என்ன சொல்வானோ? கடவுளே! டாக்டர்கூட இன்னும் வரலையே! இவனிடம் தனியே வந்து மாட்டிக்கொண்டோமே!'

இளமாறனின் முகமோ புன்னகைத்தது. 'காலையில் பார்த்த இலவம் பஞ்சு கைகளுக்கு சொந்தக்காரியா இவள்? என்ன மென்மை! சிறு குழந்தையின் பிஞ்சுக் கரத்தைத் தொட்டதைப் போல் சிலிர்த்ததே!!'

மீண்டும் அவளைப் பார்த்ததில் அவன் மனம் குதூகலித்தது. கையில் மருந்துகளோடு அவள் பயந்து நின்ற கோலம் மேலும் சிரிப்பை வரவழைக்க... மென்மையாய் சிரித்தான்.

"ஹலோ! என்னைப் பார்த்தா ரவுடி மாதிரியா இருக்கு?"– அவன் அதே கணீர் குரலில் கேட்க, பதற்றமாய் மறுத்தாள்.

"இ...இல்...லையே!"

"பின்னே? இப்ப அந்த சிஸ்டர்கிட்ட என்ன சொன்னீங்க?"

"ஒட்டுக் கேட்கிறது தப்பு."

"அது அடுத்தவங்க பேசுற ரகசியத்தை! நீங்கதான் ஒலிபெருக்கி இல்லாமலேயே ஒலிபரப்புனீங்களே! இதை ஒளிஞ்சிருந்து ஒட்டுக் கேட்கணுமாக்கும்?"

"அது... நான் உங்களைப் பற்றி பேசலை."

"வேற? ஓ! உங்கள் மேல மோதியதே... அந்த எருமையைப் பற்றி பேசினீங்களா?"

"ம்... ம்."

"அடி பலமோ?"– என்றவனிடம் விறைப்பாய் நிமிர்ந்தாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. உங்களுக்கு எங்கே காயம்?"

"அவனோட எடை நூத்தி இருபது கிலோ. அவன் மோதினால் வலிக்காமல் இருக்குமா? மறக்காம மருந்து போடுங்க"– அவன் இயல்பாய் பேச... பயமும், தயக்கமும் விலகிவிட.... மருந்தோடு போனாள்.

"என்ன காயம் சார்... காட்டுங்க..."– மருந்துகளை மேசை மீது வைத்துவிட்டு, பஞ்சுத் துண்டோடு அவனை நெருங்க, வலது காலை நீட்டினான். பேண்ட்டை லேசாய் மடித்துவிட– முழங்காலுக்கு அருகே சதை பிய்ந்து போயிருக்க, ரத்தம் உறைந்து போயிருந்தது.

"அச்சச்சோ! எப்படி ஆச்சு?"– அவள் பதறியதை ரசித்தான்.

"ரோட்ல விழுந்ததில் அடிபட்டிருச்சு."

"விழுந்திட்டீங்களா? அச்சோ! காயம் ஆழமா இருக்கும் போலிருக்கே!"

என்றவாறு ஒரு கரத்தால் அவனது காலைப் பற்றிக்கொண்டு, பஞ்சால் காயத்தை சுத்தப்படுத்தினாள் .

"ஸ்... ஆ..."

"காலை அசைக்காதீங்க. கொஞ்சம் வலிக்கும். பொறுத்துக்கங்க."

"ம்..."- புன்னகையோடு தலையாட்டினான்.

"இப்ப மருந்து வெக்கப்போறேன், எரியும். இங்கே பார்க்காதீங்க."

"சரி" என்றவன், அவளது முகத்தையே பார்த்தான். மென்மையும், கனிவும் ததும்பிய வெண்மை முகம். அவள் மருத்துவம் செய்த முறையும், பேசிய தன்மையும் ரசிக்க வைத்தது.

மயிலிறகால் வருடியது போல்... பனித்துளியை தெளித்தது மாதிரி... அவன் தன்னை மறந்து லயித்துப் போயிருக்க- அன்பரசி மருந்தை வைத்து, காயத்தை கட்டுப்போட்டுக்கொண்டே கேட்டாள்.

"ஏன் சார்... யார் சார் அவன்?"

"எவன்?"

"அதான்... ஒருத்தனை விரட்டிட்டு போனீங்களே...?"

"அவனா? அவன் ஒரு திருடன்."

"திருடனா? அப்போ நீங்க போலீசா? திருடன்- போலீஸ் விளையாட்டு விளையாடுனீங்களாக்கும்?"

"என்ன கிண்டலா?"

"பின்னே? நீங்க சொல்றது அப்படித்தானே இருக்கு?"

"ஏன்? என்னைப் பார்த்தால் போலீஸ் மாதிரி தெரியலையா?"- அவன் கேட்க, கேலியாய் சிரித்தாள்.

"வெள்ளை சட்டையும், நீல ஜீன்சும்தான் உங்க 'யூனிபார்மா?'"

"ஹலோ! போலீஸ்காரன்னா எப்பவுமே காக்கி உடையோடத்தான் இருக்கணுமா? நாங்கள்லாம் 'கலர் டிரஸ்' போடக்கூடாதா?"- இளமாறன் சீரியஸாகக் கேட்க, அப்போதுதான் அவனை நிதானமாக பார்த்தாள்.

ஒட்ட வெட்டப்பட்ட 'கிராப்', அளவாய் கத்தரித்த மீசை லேசாய் முறுக்கப்பட்டிருந்தது. பளபளப்பாய் சவரம் செய்த முகம். திடகாத்திரமான உடல். உட்கார்ந்திருந்த நிலையிலும் நிமிர்வான தோற்றம். முறுக்கேறிய கரங்கள். சராசரிக்கும் சற்று கூடுதலான உயரம். கண்களில் கழுகின் கூர்மை.

பயமாய் எழுந்தாள். அவள் கண்களில் தெரிந்த மிரட்சியைக் கண்டு புருவம் உயர்த்திக் கேட்டான் இளமாறன்.

"என்ன... நம்பிக்கை வந்துடுச்சா?"



"ஸா...ர்! நீங்க... நிஜமாகவே போலீஸா?"

"இன்னும் நம்பலையா?"

"இ...ல்ல சார்! நான்... நிஜ போலீஸை... இதுவரை இப்படி பக்கத்துல பார்த்ததில்லை. சி...னி...மாவுலதான் பார்த்திருக்கேன். அதான்..."

"சரி! என்னை நல்லா பார்த்துக்கங்க."

"எ...ன்...னது?"

"பக்கத்துல பார்த்ததில்லைன்னு சொன்னீங்களே...?"

"எக்ஸ்யூஸ் மீ சார்" என்ற பவ்வியமான குரல் கேட்டதும் திரும்பினாள். காக்கி உடையில் சற்று பெரிய மீசையோடு காவலர் ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

"சொல்லுங்க ராமையா! அவன் என்ன சொல்றான்?"

"அந்த அம்மாவோட தாலி அவன்கிட்டதான் இருந்தது சார். வாங்கிட்டோம். அவன் இப்ப 'லாக்- அப்'லதான் இருக்கான்."

"அந்த அம்மாகிட்ட செயினை கொடுத்தாச்சா?"

"இன்னும் இல்ல சார்! நீங்க வந்துட்டா 'ஸ்டேட்மெண்ட்' எழுதிட்டு..."

"இதோ வர்றேன்" என்றவாறு பேண்ட்டால் காயத்தை மூடிவிட்டு இளமாறன் கீழே இறங்க, பதறித் தடுத்தாள் அன்பரசி.

"ஐயோ! காலை ஊன்றாதீங்க."

"ஏன்... என்னாச்சு?"

"இப்பத்தானே கட்டுப் போட்டிருக்கு. டாக்டர் வந்ததும் காட்டிட்டு..."

"ஏங்க! இது ஒரு சாதாரண காயம். இதுக்கு இந்த 'டிரீட்மெண்டே' ஜாஸ்தி. எனக்கு நிறைய வேலை இருக்கு. வரட்டுமா...?"

"ம். பார்த்து போங்க சார்" என கூடவே வந்தாள். காவலர் வேகமாய் வெளியேறி காவல்துறைக்கான வாகனத்தில் ஏறி அமர்ந்து வண்டியைக் கிளப்ப, வாசல் வரை சென்றவன் திரும்பினான். தயக்கமாய் நின்றவளைப் பார்த்தான்.

"ஹலோ மேடம்."

"சொல்லுங்க சார்."

"இப்ப நான் போலீஸ்"ன்னு..."

"நம்புறேன் சார்."

"நல்லது. நான் இளமாறன். திருவல்லிக்கேணி போலீஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர்."

"ஓ..."

"உங்க பேர் என்னன்னு சொல்லவே இல்லையே!"

"எ...ன்... பேர் அன்பரசி."

"வாவ்! ரொம்பப் பொருத்தமான பேர். உங்க அன்பான கவனிப்புக்கு நன்றி. வரட்டுமா...? அப்புறம் பிறந்தநாள் வாழ்த்துகள்."

"ம்..." வியப்பாய் விழிகளை விரித்தாள்.

"வாய்ப்பு இருந்தால் மறுபடி பார்க்கலாம். 'பை... பை'" என்றவாறே அவன் வண்டியில் ஏறி அமர்ந்து கையசைக்க, வாகனம் சிறிப் புறப்பட்டது.

அன்பரசி வாசலிலேயே அசைவற்று நின்றுகொண்டிருந்தாள்.

## 3

*நீ தேடும்போது உன் அருகில்*
*நானில்லை– ஆனால் நீ*
*நினைக்கும்பொழுது உன் மனம்*
*முழுக்க நான் நிறைந்திருப்பேன்!*

**ப**ம்மிய வயிற்றோடு தன் முன் அமர்ந்திருந்த பெண்ணின் இரத்த அழுத்தத்தை பரிசோதித்துக்கொண்டிருந்தாள் அன்பரசி. எங்கோ வெறித்துக்கொண்டு அமர்ந்திருந்தாள் அந்தப் பெண். கண்கள் உலர்ந்து போயிருக்க... வற்றிய தேகமும், வருத்தம் தோய்ந்த முகமுமாய் அவளைப் பார்க்கையில் மனம் கனத்தது.

"சாந்தி!"

"அ... அம்மா..."

"உன் புருஷனைப் பத்தி ஏதாவது தகவல் கிடைச்சுதா?"– பரிவாய்க் கேட்டவளைப் பார்த்து விரக்தியாய் புன்னகைத்தாள் அப்பெண்.

"அவர் என்ன தொலைஞ்சா போனார்? விட்டுட்டு ஓடினவன்... எப்படிம்மா கண்லபடுவான்?"

"என்னது?"

"அவன் வரமாட்டாம்மா. வரவே மாட்டான். விரட்டி விரட்டி விரும்பினாம்மா. நான் ஒரு பைத்தியக்காரி! அவன் விரும்பினது இந்த உடம்பைத்தான்னு புரிஞ்சுக்காம... என்னைப் பெத்தவங்க– கூடப்



பிறந்தவங்க எல்லாத்தையும் பரிதவிக்க விட்டுட்டு... அவனை நம்பி வந்துட்டேன்."

"என்ன சாந்தி! உன்னை மாதிரி பொண்ணுங்க தெரிஞ்சே இந்த மாதிரி தப்பு பண்ணலாமா?"

"தப்புதாம்மா! அவன் மேலே இருந்த கண்மூடித்தனமான அன்பு, மத்ததையெல்லாம் மறக்க வெச்சிடிச்சு. அவனுக்கு நான் அலுத்துப் போயிட்டேன். தூக்கி எறிஞ்சிட்டு போயிட்டான்.

நான் இப்படி வயித்துல சுமையோடு... வாழவும் வழி தெரியாம... சாகவும் முடியாம... நடுத்தெருவுல நிக்கிறேன்"– அவள் முகத்தை மூடிக்கொண்டு அழ, அன்பரசியின் கண்கள் கலங்கின.

சாந்தியின் முகத்தை பரிவாய் வருடினாள். "ஷ்! அழக்கூடாது. இப்படி நீ அழுதா... அது உன் குழந்தையைத்தான் பாதிக்கும். அழாதேம்மா."

"நர்சம்மா! எ... எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?"

"என்ன செய்யணும்... சொல்லு!"

"இதை இனிமே... ஒண்ணும் செய்ய முடியாதாம்மா?"– தன் வயிற்றைத் தொட்டுக் காட்டி அவள் கேட்க, துடித்துப்போனாள் அன்பரசி.

"ஏய்! என்ன சொல்ற நீ?"

"எனக்கு இது வேண்டாம்மா. இது வேண்டாம்."

"ஐயோ! என்ன இது? இத்தனை நாளா இல்லாம... இப்ப என்ன...?"

"நானும் இன்னிக்கு வருவான்... நாளைக்கு வருவான்னு ஏதோ ஒரு நம்பிக்கையில காத்திருந்தேம்மா. ஆனா... இனி அவன் வரவேமாட்டான்."

"ஏன்?"

"அவனுக்கு... வேற கல்யாணம் ஆயிடுச்சாம்மா"– சாந்தி தேம்பியழ, திகைத்துப் போனாள் அன்பரசி.

"சாந்...தி! என்ன சொல்ற?"

"ஆமாம்மா! இனிமே அவனைத் தேடக்கூடாதாம். கல்யாணம் பண்ணிட்டு, புதுப் பொண்டாட்டிகூட வேற ஊருக்கே போயிட்டானாம்."

"இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?"

"அவனோட நண்பன். எங்க கல்யாணத்தப்பக்கூட அவன் இருந்தான்."

"ஆமா! உங்க கல்யாணம் எந்த 'ரிஜிஸ்டர் ஆபீஸ்'ல வெச்சு

நடந்தது?"

"அங்கெல்லாம் கூட்டிட்டுப் போகலம்மா. ரோட்டோரமா இருக்கிற பிள்ளையார் கோவில் வெச்சுத்தான் தாலி கட்டினான்."

"என்ன சாந்தி... இப்படியா ஏமாளியா இருப்ப?"

"இல்லம்மா! நானும் கேட்டேன். அதுக்கு அவன்தான், 'வீட்ல அண்ணனை வெச்சிக்கிட்டு நான் கல்யாணம் பண்ணிட்டு போய் நின்னா நம்மை எப்படி வீட்ல சேர்ப்பாங்க? அதனால அண்ணன் கல்யாணமாகிற வரைக்கும் பொறுத்துக்க. அப்புறம் வீட்ல சொல்லி, நம்ம கல்யாணத்தை 'ஜாம்ஜாம்'னு ஊரே பார்க்கிற மாதிரி வெச்சுக்கலாம்'னு சொன்னான்."

"இப்ப அண்ணனுக்கு கல்யாணமாயிடுச்சா?"

"தெரியர்தும்மா! இவன் போயி நாலு மாசம் தாண்டிப் போச்சே!"

"நர்சம்மா! எவ்வளவு நேரமா உட்கார்ந்திருக்கோம்? ஊசியப் போட்டு அனுப்பும்மா"– அறைக்கு வெளியே இருந்து குரல் கேட்க, சாந்திக்கு போட வேண்டிய தடுப்பு ஊசியை எடுத்தாள் அன்பரசி.

"சேலையை இறக்கி விடு சாந்தி! ஊசி போடணும்" என்று மருந்தை ஏற்றிக்கொண்டு பஞ்சோடு வந்தாள். ஊசி போட்டுவிட்டு பஞ்சால் அழுத்திவிட்டாள்.

இதோ பாரு சாந்தி! கண்டதையும் போட்டு மனசைக் குழப்பிக்காதே. இப்ப எனக்கு பேச நேரமில்ல. அடுத்த வாரம் புதன்கிழமை 'செக்–அப்'புக்கு வா. பேசுவோம்... சரியா?"

"இதை ஒண்ணும் செய்ய முடியாதாம்மா?"

"இப்ப ஏழு மாசம். குழந்தை முழு உருவமா வளர்ந்திருக்கு. இப்பப் போய்... இப்படி கேட்கலாமா? இது உன் குழந்தை சாந்தி."

"அந்த சண்டாளனோட வித்தும்மா."

"உன் உதிரமும், உயிரும் கலந்து பொறக்கப் போகுற குழந்தை! உன்னை மாதிரியே இருக்கும்."

"வேண்டாம்மா! என்ன மாதிரி ஏமாளியா பொறந்து, சங்கடப்பட வேண்டாம். என் கஷ்டம் என்னோட போகட்டும். இது எனக்கு வேண்டாம்."

"சரி... அழாதே. இப்ப வீட்டுக்குப் போ. அடுத்த வாரம் ஒரு பன்னிரண்டு மணிக்கா வா. நிதானமா பேசலாம்."

"சரிங்கம்மா."

"அப்புறம்... உன் புருஷன்கூட எடுத்த 'போட்டோ' எதுவும்



இருக்கா?"

"கல்யாணத்துக்கு முன்னால எடுத்தது இருக்கும்மா."

"அதையும் எடுத்துட்டு வா."

"எதுக்கும்மா?"

"நானும் தெரிஞ்ச இடத்துல தேடிப் பார்க்கிறேன்."

"இனிமே தேடி என்னம்மா ஆகுது?"

"முதல்ல அவன் கிடைக்கட்டும். பிறகு, என்ன செய்யலாம்னு முடிவு பண்ணுவோம். மறக்காம 'போட்டோ'வை எடுத்துட்டு வா."

"சரிம்மா"– சேலையை சிராக்கியவாறே சாந்தி வெளியேற, தன் பணியில் மூழ்கினாள் அன்பரசி. மதிய உணவு இடைவேளை வரை உட்கார நேரமின்றி உழைப்பு.

எத்தனையோ நோயாளிகள்... விதவிதமான நோய்கள்! குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள் என யாரையும் விட்டு வைக்காத நோய்கள்.

நோயாளிகளோடும், மருந்து– மாத்திரைகளோடும் உழன்று ஒருவழியாய் மதியம் இரண்டு மணிக்கு மேல் சற்று ஓய்வு கிடைக்க... கை–கால்களை சுத்தமாக கழுவிவிட்டு சாப்பாடு பாத்திரத்தை எடுத்தபோது, மாடியில் இருந்து இரண்டு நர்ஸ்கள் ஓடி வந்தனர்.

"சிஸ்டர்! டாக்டர் போயாச்சா?"

"ஆமா! இப்பத்தான் போனார். என்னாச்சு?"

"நேற்று சாயங்காலம் ஒரு பெண்ணுக்கு பெண் குழந்தை பிறந்ததே. பேஷண்டோட பேர்கூட காமாட்சி."

"ஆமா! அவங்களுக்கென்ன?"

"குழந்தைய போட்டுட்டு போயிட்டா."

"என்னது?"– திடுக்கிட்டு எழுந்தாள் அன்பரசி.

"ஆமா சிஸ்டர்! 'பாத்ரூம்' போறேன்னு சொல்லிட்டு போயி, ரெண்டு மணி நேரமாச்சு. வரலை. 'பாத்ரூம்'லயும் இல்ல. குழந்தை வேற ரொம்ப அழுது சிஸ்டர்."

"கடவுளே"– சாப்பாட்டை அப்படியே வைத்துவிட்டு, மாடிக்கு ஓடினாள். முதல் தளம் முழுவதும் பிரசவ வார்டு. புத்தம் புதிதாய் பூமிக்கு வந்திறங்கிய குட்டி ஜீவன்கள் தாயின் மடியிலும், அணைப்பிலும் சுகமாய் பொதிந்திருக்க... அந்த ஒற்றைக் குழந்தை மட்டும் வீறிட்டுக்கொண்டிருந்தது. அழுது அழுது தொண்டை வற்றிப்போய் குரல் கம்மிப் போயிருந்தது.

உடலும், உள்ளமும் துடிக்க ஓடிச்சென்று அதைத் தூக்கி தன்

மார்போடு அணைத்துக்கொண்டாள் அன்பரசி. பிறந்து முழுதாய் ஒரு நாள்கூட ஆகாத பச்சைக் குழந்தை. குச்சி குச்சியாய் இருந்த கை–கால்களை அசைத்துக்கொண்டு அது கதறிய விதம் நெஞ்சைப் பிசைந்தது.

"ஏம்மா! அந்தப் பொண்ணு எப்போ போனா? ஏதாவது சொல்லிட்டுப் போனாளா?"– அருகே இருந்த பெண்மணியிடம் கேட்டாள்.

" 'பாத்ரூம்' போறேன்னுதாம்மா சொன்னா. வரவே இல்ல. பாவம்! குழந்தை ஒரு மணி நேரமா அழுதுட்டே இருக்கு."

"என்ன... ஒரு மணி நேரமா? ஐயோ! தொண்டை வற்றிப் போயிருக்குமே... ஏம்மா! யாராவது ஒருத்தர் இந்தக் குழந்தைக்கு பால் கொடுங்களேன்"– என்றதும் 'வார்டு' முழுக்க 'கப்சிப்'.

ஒருவரிடமும் பதில் இல்லை. முப்பது தாய்மார்கள் இருந்தும், ஒருவரும் பால் தர முன்வரவில்லை. குழந்தையின் கதறல் மட்டும் கேட்டுக்கொண்டே இருக்க, கசப்பாய் எழுந்தாள்.

அருகே நின்ற நர்சை அழைத்தாள். "காயத்திரி சிஸ்டர்! 'மெடிக்கல்'ல சொல்லி ஒரு பால் டப்பா வாங்கிட்டு வாங்க...சீக்கிரம்."

"நர்சம்மா! குழந்தைய இப்படிக் கொடுங்க" என்ற குரல் வந்த திசையில் திரும்பினாள். தரையை கழுவித் துடைக்கும் பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"பொன்னம்மா..."

"பால் டப்பா வாங்கி அதை கலக்கி கொடுக்கறதுக்குள்ள குழந்தைக்கு மூச்சடைச்சிடும். கொடுங்கம்மா! நானும் புள்ளைய பெத்தவதானே?" என்றவளிடம் கண்கள் கசிய குழந்தையை நீட்டினாள்.

பொன்னம்மா தரையில் அமர்ந்து குழந்தையின் பசியாற்ற, காலியாய்க் கிடந்த படுக்கையில் அமர்ந்து நெற்றியைப் பற்றிக்கொண்டாள் அன்பரசி. கண்கள் கலங்கி நீர் வழிந்தது.

'கடந்த இரண்டு ஆண்டுகளில் இது பதினேழாவது குழந்தை. அதெப்படி? பத்து மாசம் சுமந்து வலிக்க வலிக்கப் பெற்று இப்படி அநாதையாய் போட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள்? எப்படி முடிகிறது இவர்களால்...?

பிள்ளைச் செல்வம் இல்லையே என வருந்தி விரதம் இருந்து கோவில் கோவிலாய் ஏறி இறங்குபவர்களுக்கு கருவறையை நிரப்புவதில்லை இறைவன்!

ஆனால், பெற்ற பிள்ளைகளை பழங்குப்பையாய் தூக்கிப் போடுபவர்களுக்கு கேட்காமலேயே வாரி வழங்குகிறானே! இது என்ன



கொடுமை?

சில கண அற்ப சுகங்களுக்கு அடிமையாகி, தவறான வழியில் சென்று அதற்கான அடையாளத்தை அம்போவென்று கதற விட்டுச் சென்றுவிடுகிறார்களே! பிறந்தது பெண் என்றதால், ஓடிப்போனாளா? இல்லையென்றால், அவள் செய்த தவறுக்கான சாட்சியை விட்டுவிட்டு தப்பிச் சென்றாளா?

எதற்காக ஓடினாய் பெண்ணே! உங்களைப் போல் பெண்களால், பெண்ணினமே தலை குனிகிறதே!

பெண்களே கடவுள் என்றும், பொறுமையில் பூமாதேவி எனவும் சொல்வார்களே! இன்று ஏன் இந்த அவலம்? இனி இந்தக் குழந்தையின் கதி? வழக்கம்போல் ஆசிரமத்தில் ஒப்படைக்கப்படும்.

ஒழுங்கற்ற பெண்ணுக்கும், நயவஞ்சக ஆணுக்கும் பிறந்த ஒரே பாவத்துக்காக... காலம் முழுக்க இந்தக் குழந்தை அநாதை என்ற பட்டத்தை சுமந்துகொண்டு வாழ்ந்தாக வேண்டும்.

அதனால் மனக்காயப்பட்டு எத்தனை குழந்தைகள் குற்றவாளியாய் மாறுமோ? அவைகளின் மனநலம் கெட்டுப் போகுமே? இதை ஏன் யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை?'

"நர்சம்மா! இந்தாங்க"– பொன்னம்மா நீட்டிய குழந்தையை கைகள் நடுங்க பெற்றுக்கொண்டாள். வெகுநேரம் அழுத களைப்பில்– வயிறு நிறைந்த திருப்தியில்– பத்திரமான கைகளில் இருக்கிறோம் என்ற நிம்மதியில்– குழந்தை உறங்கிக்கொண்டிருந்தது.

இடையிடையே அதன் நெஞ்சு லேசாய் விம்ம, அது எவ்வளவு நேரமாய் அழுதது என்பதை உணர்ந்து மீண்டும் கண்கள் கசிந்தாள் அன்பரசி.

அதற்குள் தலைமை மருத்துவருக்கு செய்தி சென்று, அவர் மூலமாக வழக்கமாய் வரும் காவல்துறையும், அநாதை ஆசிரம நிர்வாகியும் வந்துசேர, குழந்தையை தன் மடியைவிட்டு இறக்கவே இல்லை அவள்.

வழக்கமான விசாரணை முடிந்து, சில காகிதங்களில் கையெழுத்து போட்டு... காவல்துறை அதிகாரியோடு ஆசிரமத்தின் பெண்மணியும் அன்பரசியை நெருங்கினார்.

"எக்ஸ்கியூஸ்மி சிஸ்டர்!"

"ம்..."– சட்டென நிமிர்ந்தாள். கண்களில் நீரோடு இருந்தவளைக் கண்டு வியந்தான் இளமாறன்.

அவனை மீண்டும் பார்த்ததில் துணுக்குற்று, படுக்கையைவிட்டு கீழே இறங்கினாள் அன்பரசி.

"என்னாச்சு? ஏன் இவ்ளோ கண்ணீர்?"– மெல்லிய குரலில் அவன் கேட்க, பதில் சொல்ல முடியாமல் கையிலிருந்த குழந்தையைக் காட்டினாள்.

பிறந்து சில மணித்துளிகளே ஆன குழந்தையைப் பார்க்கையில் அவனது மனமும் கனத்துப்போனது. தான் அநாதை ஆகிவிட்டோம் என்று அறியாமல்... கைகளை இறுக மூடிக்கொண்டு அது தூங்கியவிதம் இதயத்தை அழுத்தியது.

சட்டென பெருமூச்சை இழுத்து விட்டுக்கொண்டே கண்ணை காட்டினான்.

"மேடம்! குழந்தையை வாங்கிக்கங்க."

"யெஸ் சார்! கொடுங்க சிஸ்டர்"– அந்தப் பெண்மணி கைகளை நீட்ட, தவிக்கும் மனதோடு கையிலிருந்த குழந்தையைப் பார்த்தாள். கண்களில் நீர் சுரக்க, உதடு கடித்து தன்னைக் கட்டுப்படுத்தினாள்.

நெற்றியில் மென்மையாய் முத்தம் ஒன்றை பதித்துவிட்டு, குழந்தையைக் கொடுத்தாள். நெஞ்சம் விம்மியது. க்தறி அழ வேண்டும் போல இருந்தது.

எவரையும் நிமிர்ந்து பாராமல் விடுவிடுவென வெளியேறி வாசலோரமாய் வரிசையாய் இருந்த கழிப்பறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினாள்.

அவளது செய்கையைப் பார்த்தும் பாராதது போல் வழக்கமான கடமைகளை முடித்துவிட்டு, டாக்டரிடம் விடைபெற்று வாசலை நோக்கி நடந்தான் இளமாறன். கழிவறையை நெருங்குகையில் அவனது நடை தானாய் தடைபட, உள்ளே அன்பரசியின் அழுகை ஒலி தெளிவாய்க் கேட்டது.

அந்த ஒலியில் அவன் மனமும் வலித்தது.

## 4

*நம் துன்பங்கள் துயரங்கள்*
*மனக்குமுறல்கள் அனைத்தும்*
*மறைந்துபோய்விடும்– தாயின்*
*மடியில் தலை வைக்கும் நேரம்!*

தாயின் மடியில் தலை வைத்து விசும்பிக்கொடிருந்தாள் அன்பரசி. பரிவாய் மகளின் தலை கோதியவாறே ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தாள் அம்பிகை.

"அன்பும்மா! என்ன இது... குழந்தையாட்டம்?"

"முடியலம்மா! என்னால அந்தக் குழந்தை அழுததை மறக்கவே முடியலம்மா. இன்னும் என் காதுல அந்தச் சத்தம் எதிரொலிச்சிட்டே இருக்கு."

"அதுக்கு அப்படி விதிச்சிருக்கான் ஆண்டவன். நாம என்ன பண்ண முடியும்?"

"இதெல்லாம் மனுஷங்க பண்ணுற தப்பும்மா. இதுக்கு கடவுள் மேலே பழி போடக்கூடாது."

"சரி, அந்தப் பொண்ணுக்கு என்ன கஷ்டமோ? எந்த சூழ்நிலையில பெத்தாளோ...?"

"எந்த சூழலா இருந்தா என்னம்மா? பெத்தப் பிள்ளையை இப்படி அநாதையா போட்டுட்டு போக அவளுக்கு எப்படி மனசு வந்தது... இது பாவமில்லையா?"

அறையின் ஓரமாய் போடப்பட்டிருந்த மேசை மீது பரீட்சை தாள்களை திருத்திக்கொண்டிருந்த தமிழரசி குரல் கொடுத்தாள்.

"பாவம்தான்! தினம் இப்படிப்பட்ட பாவச் செயல்கள் நடந்துட்டு இருக்கறதாலதான் அங்கங்க சுனாமி, நிலநடுக்கம்னு வருது. இதுக்கெல்லாம் அழுதா தினமும் அழ வேண்டியதுதான்."

"எனக்கு மனசு ஆறலை தமிழ்! இப்ப நினைச்சாக்கூட...."

"நினைக்காதேக்கா! ஆஸ்பத்திரி பிரச்சினையை அங்கேயே விட்டுட்டு வீட்டுக்கு வா. இல்லன்னா நிம்மதி பறிபோயிடும்."

"இதுக்குத்தான் இந்த வேலையே வேண்டாம்னு சொன்னேன். நீதான், 'சேவை செய்யுற பணி. இதுல கிடைக்கற அமைதியும், மன நிறைவும் வேற எதிலேயும் கிடைக்காது'ன்னு சொல்லி அடம்பிடிச்சி சேர்ந்தே.

இப்பப் பாரு! மாசத்தில பத்து நாள் இப்படித்தான் ஏதாவது ஒரு 'கேஸை' நினைச்சி அழுதுட்டு சாப்பிடாம பட்டினி கிடக்கிற. அன்பு! இளகின மனசு இருக்கலாம். ஆனா, இப்படி எல்லாத்துக்கும் அழக் கூடாதுடா."

"ஸாரிம்மா! நானும் தைரியமாகத்தான் இருக்கேன். சில நேரம் என்னையும் அறியாமல்..."

"ஏங்க்கா! இந்த நர்ஸ் வேலைக்கே இப்படின்னா, நீ ஒரு டாக்டராவோ... போலீஸாவோ ஆகியிருந்தா என்னாகி இருக்கும்?"– தமிழரசி கேலியாய்க் கேட்க, சட்டென எழுந்து அமர்ந்தாள்.

"ஏன்?"

"ஏனா? தினம் தினம் எத்தனை விபத்து, கொலை, கொள்ளைன்னு எவ்வளவு ரத்தம் பார்க்க வேண்டியது வரும்? அதுக்கெல்லாம் எவ்ளோ மனதைரியம் வேணும் தெரியுமா?"

அன்பரசிக்கு, தானாய் இளமாறனின் நினைவு வந்தது. 'அவனது முகமும் குழந்தையைக் கண்டு வருந்தியதுதான். ஆனால், தன்னைப் போல் அழவில்லையே! வெகுசுலபமாய் திடப்படுத்திக்கொண்டு கடமையில் இறங்கிவிட்டானே...

அதுதான் தைரியமா? அது என்னிடம் இல்லையோ? அவனுக்கு இத்தகைய கண்ணீரும், இழப்பும் பழகிப் போயிருக்கலாம். நானும் பழகிக்கொள்ள வேண்டியதுதான்!

இதற்காக பயந்து நானும் அழுது- அம்மாவையும் வருந்தச் செய்யலாமா? எல்லாவற்றையும் துணிவாய் எதிர்கொள்ள வேண்டாமா?'- கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

"என்னம்மா... சாப்பிட வர்றியா?"

"நீங்க போங்கம்மா! நான் முகம் அலம்பிட்டு வர்றேன்."

"தமிழ்... நீயும் வா! எல்லாரும் சாப்பிட்டுட்டா, என் வேலை முடிஞ்சிடும்."

"இதோ வர்றேம்மா" என்றதும், மகளின் அறையை விட்டு வெளியே வந்தாள் அம்பிகை. கூடத்தில் அமர்ந்து தொலைக்காட்சியில் செய்திகளை கேட்டுக்கொண்டிருந்த வாசுதேவன், மனைவியைக் கண்டதும் சத்தத்தைக் குறைத்தார்..

"என்ன சொல்றா உம் பொண்ணு?"

"வழக்கமாக நடக்கிறதுதான். எவளோ ஒருத்தி பெண் குழந்தையைப் பெத்து அப்படியே போட்டுட்டு ஓடிட்டாளாம். அதை நினைச்சி இவ ஒரே அழுகை."

"ஹும்! இதுக்கு எப்பத்தான் மனத் திடம் வருமோ?"

"நான் ஒண்ணு சொன்னா கேட்கிறீங்களா...?"

"என்ன?"

"பேசாம அவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை பாருங்க."

"என்ன... கல்யாணம் பண்ணிடலாம்னு சொல்றியா?"

"ஆமா... அவளுக்குத்தான் வயது இருபத்து அஞ்சாகுதே! இப்பப் பார்த்தாத்தானே சரியா இருக்கும். அவளுக்கு அடுத்து தமிழ் வளர்ந்து நிற்கிறா. எவ்வளவு காலம்தான் பொம்பளைப் பிள்ளைகளை வீட்டோட



வச்சிருக்க முடியும்?"

"சரி, பார்ப்போம்."

"சீக்கிரமாய் பாருங்க! இல்லன்னா இவ இப்படியே கண்டதையும் நினைச்சு கவலைப்பட்டு, உடம்பைக் கெடுத்துக்கப் போறா. ஏற்கெனவே நோஞ்சான் மாதிரி இருக்கா."

"சரி... சரி! நான் எனக்குத் தெரிஞ்ச இடத்துல சொல்லி வைக்கிறேன். நீ கொஞ்சம் சத்துள்ள ஆகாரமாக் கொடுத்து அவ உடம்பை தேத்து."

"சரிங்க! டி.வி.யை நிறுத்திவிட்டு வாங்க. சாப்பாடு எடுத்து வைக்கிறேன்."

"எடுத்து வை. வர்றேன்" என்றபோது, முகத்தைத் துடைத்துக்கொண்டே வந்தாள் அன்பரசி.

"அன்பு! இப்படி வாம்மா."

"என்னப்பா?"

"என்னடாம்மா இது? ஏன் இப்படி கண்டதையும் நினைச்சி வருத்தப்பட்டு உன் உடம்பைக் கெடுத்துக்கிற?"

"ஸாரிப்பா!"

"மனசைத் தைரியமா வெச்சுக்கம்மா. வாழ்க்கையில இன்னும் எவ்வளவோ இருக்கே! அதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டாம்?"

"ச...ரிப்பா."

"உனக்கு இந்த வேலை பிடிக்கலையாம்மா?"

"ஐயோ! ரொம்பப் பிடிச்சிருக்குப்பா. முழு மன நிறைவோடத்தான் இதை பண்றேன்."

"பிறகேம்மா இப்படி வருத்தப்படுற?"

"நானும் மனுஷிதானேப்பா! எத்தனையோ நோயாளிகளைப் பார்க்கிறேன். அவங்க வலியால துடிக்கும்போது, என் மனசு கஷ்டப்படுது. ஆனா, அந்தப் பிஞ்சுக் குழந்தை கதறி அழும்போது... என்னால... கட்டுப்படுத்த முடியலைப்பா."

"அதைத்தான் நாங்களே பேசி சரி பண்ணிட்டோமே! நீங்க ஏன் திரும்ப ஆரம்பிக்கிறீங்க?"- கணவரை அம்பிகை அதட்டியதும், அந்தப் பேச்சு முற்றுப்பெற்றது.

மறுநாள் காலையில் வழக்கம்போல் சுறுசுறுப்பாக தயாராகி, தந்தையின் இரு சக்கர வாகனத்தில் போய் மருத்துவமனை வாசலில் இறங்கியபோதே... காவல் நிலைய வாகனம் நின்றுகொண்டிருந்தது.



மனம் பரபரக்க, தந்தையிடம் கையசைத்து விடை பெற்றுவிட்டு உள்ளே நுழைகையில்... எதிரே சீருடையோடு மிடுக்காய் வந்தான் இளமாறன்.

அந்த உடை கச்சிதமாக பொருந்தி, அவனை இன்னும் கம்பீரமாய்க் காட்டியது. அவன் நேராய் தன்னை நோக்கி வந்ததும், தயக்கமாய் புன்னகைத்தாள்.

"கு... குட்மானிங் சார்."

"வெரி குட்மார்னிங்"– பளிச்சென புன்னகைத்தான்.

"என்ன சார்... காலையில இவ்வளவு தூரம்?"

"ஒரு சின்ன விசாரணை."



"எ... எதைப் பத்தி?"

"நேற்று நடந்த சம்பவத்தைப் பத்தி..."

"சார்! அந்தப் பொண்ணை கண்டுபிடிச்சிட்டீங்களா?"

"ம்ப்ச்! ஆஸ்பத்திரிக்கு தந்தது போலி முகவரி. பேர்கூட உண்மையான பேரா இருக்கும்னு தோணல."

"அப்போ... அந்தக் குழந்தை?"

"அது பத்திரமா இருக்கு. ஒண்ணும் பிரச்சினை இல்லை.

"ம்..."– மவுனமானாள்.

"மிஸ். அன்பரசி!

"சார்."

"உங்களை நினைச்சா பெருமையா இருக்கு."

"எதுக்கு சார்?"

"அடுத்தவங்களுக்காக கண்ணீர் சிந்துறது பெரிய விஷயம். அபூர்வமும்கூட. ஆனா...!"

"ஆனா..."

"மனசை இவ்வளவு இளக்கமா வெச்சுக்காதீங்க. எப்பவுமே தைரியமா இருக்கணும். குறிப்பா உங்களை மாதிரி பொண்ணுங்க கூடுதல் துணிச்சலா இருக்கணும்."

"ம்."

"இதை அறிவுரைன்னு நினைக்க வேண்டாம். உங்க மேலே உள்ள அக்கறையா எடுத்துக்கங்க"– என்றவனை வியப்பும், திகைப்புமாய் ஏறிட்டாள்.

"தப்பா நினைச்சுக்காதீங்க. நேற்று நீங்க அழுதது ரொம்ப கஷ்டமா இருந்தது."

"அது... நான்..."

"சரி, எனக்குப் புரியுது. உங்க வேலையில இந்த மென்மையும், கனிவும் தேவைதான். அதே நேரம் மனதிடமும் வேணும்."

"சரி சார்! எனக்கு வேலைக்கு நேரமாகுது."

**ராணி முத்து சந்தா விவரம்**

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

**வெளிநாடுகள்**

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.

"ஓ.கே. போய்ட்டு வாங்க... நான் கிளம்பறேன்"– அவன் வெளியே மென்மையான சிரிப்போடு மருத்துவமனைக்குள் நுழைந்தாள்.

வழக்கமான பணிதான். என்றாலும் உடலும், உள்ளமும் கடு உற்சாகமாக இருந்தது. அந்த உற்சாகம் முகத்தில் தெரிய, சந்திய புன்னகையோடு கேட்டாள்.

"என்ன சிஸ்டர்! ரொம்ப சந்தோஷமா இருக்கிங்க போலிருக்கு?"

"இ... இல்லையே!"

"முகமெல்லாம் இவ்வளவு பிரகாசமா இருக்கே?"

"அப்படியா?"

"யார் மேடம் அவரு?"

"ய... யாரு?"

"அதான்... 'காக்க காக்க' சூர்யா மாதிரி ஒருத்தர் வந்துட்டு போனாரே இந்த ஏரியா இன்ஸ்பெக்டராம்."

"அப்படியா... நான் பார்க்கலையே! எனக்குத் தெரியாது."

"ஆனா, அவர் உங்களைப் பத்தி கேட்டாரே?" என்றவளை திகைப்பாய் பார்த்தாள்.

"என்ன... என்னைப் பற்றிக் கேட்டாரா?"

"ம்."

"எ...ன்ன கேட்டார்?"

"அன்பரசி வரலையான்னு உரிமையாவே கேட்டார் சிஸ்டர்."

"அ...து...வா! அது... நேற்று ஒரு 'பேஷண்ட்', குழந்தைய விட்டுட்டு போயிட்டாள்ல. அதைப் பத்தி விசாரிக்க வந்திருப்பார்."

"அதையும் விசாரிச்சார். ஆனா, உங்களைத்தான் ரொம்ப நேரமாத் தேடினார். நான்கூட உங்களுக்குத் தெரிஞ்சவருன்னு நினைச்சேன்."

"அ...ப்படியெல்லாம் இல்ல."

"ஆள்... சும்மா 'ஹீரோ' மாதிரி அம்சமா இருக்கார் சிஸ்டர்... நீங்கக்கூட பார்த்திருக்கிங்க."

"நானா? எ...ப்போ?"–

'வெளியே நின்று பேசியதை பார்த்திருப்பாளோ?'

"அதான்... போன வாரம் உங்க பிறந்தநாள் அன்னிக்கு தாமதமாக வந்தீங்களே! நான்கூட, 'அவர் கால்ல அடிபட்டிருக்கு. கட்டு போடுங்க'ன்னு சொன்னேனே?"

நிம்மதியாய் மூச்சுவிட்டாள். "ஓ! அவரா?"



"அவரேதான்! அன்னிக்கு 'மப்டி'யில வந்திருந்தாரு. இன்னிக்கு காக்கியில வந்து அசத்திட்டாரு."

"சரி... சரி! நீ வீட்டுக்கு போக வேண்டாமா? 'சீப்' டாக்டர் வந்தா 'நைட் டூட்டி' பார்க்கிறவளுக்கு இன்னும் இங்கே என்ன வேலைன்னு கேட்பார். கிளம்பு."

"ஆமா! அவர் வர்றதுக்குள்ள கிளம்பிடணும். இல்ல... என்னை அப்பளமா பொரிச்சுடுவார். பை... சிஸ்டர்."

"பை"– புன்னகையோடு அன்பரசி தலையாட்ட, சந்தியா தன் உடைமைகளை சேகரித்துக்கொண்டு புறப்பட்டாள்.

தனிமையில் விடப்பட்டதும், இளமாறனின் நினைவு வந்தது. 'உங்களைத்தான் ரொம்ப நேரமாத் தேடினார்' என்ற வார்த்தைகள் காதில் எதிரொலிக்க, தனக்குள் புன்னகைத்தாள்.

## 5

*சத்தமின்றி அழும் உயிர்*
*எது தெரியுமா?*
*நேசிக்கும்*
*இதயம்தான்–*
*நீ நேசிப்பது*
*உண்மையென்றால் மட்டுமே*
*அது உனக்கு புரியும்!*

நோயாளியின் ரத்தத்தை பரிசோதனைக்காக ஊசி மூலம் எடுத்துக்கொண்டு இருந்தபோது, சாந்தியின் தயக்கமான குரல் கேட்டது.

"நர்சம்மா! உள்ளே வரலாமா?"

"வா சாந்தி!" என்றவள், ஊசியில் போதுமான ரத்தம் ஏறியதும் உருவிக்கொண்டு, ஒரு துண்டு பஞ்சை– ஊசி செருகிய இடத்தில் வைத்து அழுத்தினாள்.

"இதை கொஞ்ச நேரம் இப்படியே பிடிச்சிக்குங்க. நீங்க போய் டாக்டரைப் பாருங்க. 'ரிப்போர்ட்'... டாக்டர்கிட்ட போயிடும்."

"சரிங்கம்மா" என அவர் வெளியேற, ஊசியைப் பத்திரப்படுத்தியவாறே

அழைத்தாள்.

"வா சாந்தி! உட்காரு. டாக்டரைப் பார்த்தியா?"

"இல்லம்மா! இப்பத்தான் நேரே வர்றேன்."

"சொல்லு..."

"போட்டோ கேட்டீங்களேம்மா. கொண்டு வந்திருக்கேன்."

"போட்... ஓ! உம் புருஷன் படமா? கொண்டா... பார்ப்போம்."

சாந்தி தன் கையிலிருந்த மஞ்சள் நிறப் பையை திறந்து மருந்து அட்டையோடு வைத்திருந்த புகைப்படத்தை எடுத்து நீட்டினாள்.

"இந்தாங்கம்மா."

வாங்கிப் பார்த்தாள் அன்பரசி. கடல் அலைகள் பின்னணியில் தெரிய, சுடிதாரில் இருந்த சாந்தியின் தோளில் கைபோட்டு 'போஸ்' கொடுத்திருந்தான் அவன்.

உயரமாய்– நாகரீக உடையுடன் பணக்கார தோரணை. வெகு அலட்சியமாய் நின்றவனுடன் எவ்வித அலங்காரமும் இன்றி மிக எளிமையாய்– சங்கோஜமாய் நின்றிருந்தாள் சாந்தி.

"இது எப்போ எடுத்தது?"

"ஏழெட்டு மாசம் இருக்கும்மா" என்றவளை வியப்பாய் பார்த்தாள்.

"ஒரு வருஷம்கூட ஆகவில்லையா?"– படத்தை மீண்டும் பார்த்துவிட்டு எதிரில் நின்றவளை ஏறிட்டாள்.

இந்த சில மாதங்களுக்குள் எப்படி மாறி இருக்கிறாள்? கொழு கொழு கன்னங்கள் வற்றிப்போய் எலும்புகள் துருத்திக்கொண்டிருக்கின்றன. இளமைப் பொலிவு, பல நாட்கள் அழுததில் மங்கிப் போயிருந்தது.

புன்னகை மறைந்துவிட்டிருந்தது. எதிர்காலத்தைப் பற்றிய பயமோ, நிகழ்கால மிரட்டலோ அவளைத் தூங்கவிடாமல் செய்ததில் கண்கள் ஒளி இழந்து குழிக்குள் விழுந்திருந்தன.

"என்ன சாந்தி? இப்படி அடையாளமே தெரியாம மாறி போயிட்டே?"

"அழகும், இளமையும் இருந்தப்ப வேற எதுவும் பெரிசாவே தெரியலம்மா. கல்யாணமான பிறகுதான் வறுமை தெரிஞ்சது. பட்டினி கிடந்து வயிறு காந்தினதும் சாப்பாடோட அருமை தெரியுது."

"அப்போ... உன்னோட புருஷன் எந்த வேலைக்கும் போகலையா?"

"இல்லம்மா! என் காதுல– கழுத்துல கிடந்ததை வித்து, இப்ப



குடியிருக்கிற வீட்டுக்கு 'அட்வான்ஸ்' கொடுத்தோம். மிச்ச பணம் செலவாகிற வரைக்கும் கஷ்டம் தெரியல. பிறகு அவன் நண்பர் சில நேரம் உதவி செய்வாரு."

"அவர் பேரு என்ன?"

"முழுப்பேர் தெரியலம்மா. ஆனா, இவன் வேதான்னு கூப்பிடுவான். எங்க கல்யாணத்துக்குக்கூட அவர் மட்டும்தான் வந்திருந்தார்."

"வேதன்... வேதாச்சலம்... இப்படி எதுவும் இருக்குமோ?"

"தெரியலைம்மா."

"சரி! இப்ப அந்த வேதா எங்கே இருக்கார்? அவர் வீடு தெரியுமா?"

"வீடு தெரியாதும்மா. போன வாரத்துல ஒரு நாள் வந்தாப்பல. அப்பத்தான், 'உம் புருஷனுக்கு கல்யாணமாகி வேற ஊருக்கு போயிட்டான். இதுக்கு மேலயும் அவனை நம்பி காத்திருக்காதே. வயித்தில பிள்ளையோட தனியா இருந்து கஷ்டப்படாதே. உன் பிறந்த வீட்டுக்கு போயிடு'ன்னு சொல்லிட்டுப் போனாரும்மா."

"நீ போனியா?"

– சாந்தி பதிலின்றி தலைகுனிந்தாள்.

"சொல்லு சாந்தி! போனியா... இல்லையா?"

"இ... இல்லம்மா."

"ஏன்?"

"தொடர்ந்து ஒரு மாசமா புருஷன் வரலைன்னதுமே நான் ஏமாந்துட்டேன்னு எனக்கு தெரிஞ்சுப்போச்சு. அக்கம் பக்கம் உள்ளவங்க கேட்கிற கேள்வியைத் தாங்க முடியாம என் அம்மா வீட்டுக்குப் போனேன்."

"என்ன சொன்னாங்க? உன்னை பார்த்ததும் திட்டினாங்களா? அன்பா பேசினாங்களா?"

"இல்லம்மா! எங்க வீட்ல யாருமே இல்ல"– என்றவாறே குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

"ஏன்... எங்கே போயிட்டாங்க?"

"நான் ஓடிப்போன துக்கத்துல அப்பா தூக்குல தொங்கிட்டாராம்."

"ஐ...யோ..."

"அதுக்குப் பிறவு எங்க அம்மா, என் தம்பி– தங்கச்சியைக் கூட்டிட்டு ஊரைவிட்டே போயிட்டாங்களாம். இப்ப எங்கே இருக்காங்கன்னே

தெரியாதும்மா"- சாந்தி தொடர்ச்சியாய் அழ, உறைந்து போனா அன்பரசி.

"போச்சு! என்னோட கேடுகெட்டத்தனத்தால குடும்பமே சிதைஞ் போச்சி"- தலையில் அடித்துக்கொண்டு அழுதாள்.

"இப்ப அழுது என்ன புண்ணியம்? அந்தந்த வயசுல மனசை அடக் வாழ்ந்திருக்கணும்! நம்ம பெத்தவங்க நமக்கேத்த துணையைத் தேடி தருவாங்கன்னு பொறுமையோட இருந்திருக்கணும்.

உன் வயசுக்கு பார்க்கிறவனெல்லாம் சினிமா கதாநாயகன் மாதி தெரிஞ்சிருப்பான். இவன் முகரையைப் பார்த்தாலே தெரியுதே! 'கல கலரா' உடை போட்டுக்கிட்டு, உன் பின்னால சுத்தினதும் ஏமாந்துட் இல்ல?"

"இப்போ தெரியுது. அப்பத் தெரியலையேம்மா."

"பெத்தவங்க விட்ட கண்ணீர்தான் உன்னை இப்படி பந்தாடுத சாந்தி! சரி... அழாதே. போனது போகட்டும். இனி நடக்கறதைப் பார்ப்போம். முதல்ல இவன் பேர் என்ன? அதைச் சொல்லு."

"நாகராஜன்."

"வீடு எங்கே இருக்கு?"

"தெரியாதும்மா."

"என்ன... வீடே தெரியாதா?"

"தெரியாதும்மா. சொன்னதே இல்ல."

"பிறகெப்படி இவனை விரும்பினே?"

"எங்க வீட்டுக்கு பக்கத்துல இவனோட நண்பர்கள் நாலஞ்சி பேர் தங்கி இருந்தாங்க. அவங்கக்கூட எப்போதும் அந்த வீட்லதான் இருப்பான். அப்பத்தான் பார்த்தோம்... பழகினோம்."

"பைத்தியக்காரி. ஒருத்தனை விரும்பி- அவன் கையால தாலியையும் வாங்கிட்டு- இதோ இப்ப... பிள்ளையையும் வாங்கி இருக்கே. ஆனா, அவன் வீடுகூட தெரியாதுங்கறியே! உன்னை மாதிரி ஒரு முட்டாளை எவன்தான் ஏமாத்தமாட்டான்?"

"நான் கேட்கும்போதெல்லாம் வேற ஏதாவது பேசி மழுப்பிடுவான். அவங்க அம்மா - அப்பா வீடு... ஊரு எதுவுமே தெரியாதும்மா. ஒரு 'பைக்'லதான் வருவான். அதுலகூட செவப்பு வண்ணத்துல மண்டை ஓடு படம் வரைஞ்சிருக்கும்."

"இந்த நகரத்துல எத்தனை லட்சம் பேர் 'பைக்' வெச்சிருப்பாங்க? இந்த அடையாளத்தை வெச்சு எப்படி கண்டுபிடிக்க முடியும்?"



"வே...ற எதுவும் எனக்கு தெரியலம்மா"

"அவன் உன்னை தெளிவா ஏமாத்தி இருக்கான். நீதான் முட்டாள்தனமா இப்படி வந்து நிற்கிற... பெண்களுக்கே உரிய சாபக்கேடு. நாளைக்கு உன் பிள்ளை பொறந்து, தகப்பனைக் கேட்குமே! அதுக்கு என்ன பதில் சொல்லுவே?"

"அது கேட்கும்போது, நான் உசுரோட இருக்கமாட்டேம்மா."

"சாந்தி!"

"எப்பவோ போயிருக்கணும். வயித்தில புள்ளையோட போக மனசு வரலம்மா. அதான்... இது பொறக்கறதுக்காக உசிரைக் கையில பிடிச்சிட்டு இருக்கேன்."

"ஏய்! என்ன உளர்றே?"

"இப்பவே ஊர்- உலகம் தப்பு தப்பாப் பேசுது. இது பொறந்த பிறகு, இதுக்கும் அந்த அவமானம்தானே கிடைக்கும்?"

"அதுக்கு...?"

"நான் கண்ணை மூடிட்டா, என் புள்ள அநாதையாகிடும். அப்புறம் அதை வழுக்கி விழுந்தவளோட பிள்ளைன்னு யாரும் சொல்லமாட்டாங்க. அப்பன் பேர் தெரியாததுன்னு சொல்லமாட்டாங்க. அநாதைங்கற பேர் மட்டும்தான்..."

"சாந்தீ"- பலமாய் வீறிட்டாள் அன்பரசி. அவளது முகம் கோபத்தால் சிவக்க, சாந்தி லேசாய் திடுக்கிட்டாள்.

அவள் பார்த்தவரை இதுமாதிரி அன்பரசி கோபப்பட்டதில்லை. அது ஏன்...? அதிர்ந்துகூட பேசியதில்லை!

அதனாலயே அவள் பணியில் இருக்கும்போது மட்டுமே 'செக்-அப்'புக்கு வருவாள் சாந்தி. ஆனால், இன்று இந்தக் கோபத்தைக் கண்டதும் உடல் நடுங்கியது.

"ந...ர்சம்மா."

"வாயை மூடுடி! நீ செய்த முட்டாள்தனமான காரியத்துக்கு உன் பிள்ளை பழி ஏற்கணுமா?"

"........."

"நீ புத்திகெட்டுப் போய்- நம்பக்கூடாதவனை நம்பி ஏமாந்தது தப்பு. அதுக்கு உன் பிள்ளை, தண்டனையை அனுபவிக்கணுமா? பெத்தவ இல்லாம ஒரு குழந்தை வாழுறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? இதுக்கு... இந்தப் புள்ள உருவான அன்னிக்கே அழிச்சிருக்கலாமே?"

"அம்மா! என்னை வார்த்தையால கொல்லாதீங்க. எனக்கு மட்டும்

ஆசையா... இதை அநாதையாக்கிட்டு போகணும்னு."

"பிறகு ஏன் வாயில அந்த வார்த்தை வந்தது?"

"நான் என்ன பண்ணுவேன்? இப்பவே வீட்டுக்காரர், எப்ப வீட்டை காலி பண்ணப்போறேன்னு கேட்கிறார்."

"ஏன்?"

"வாடகை கொடுக்கணுமே! அவன் போனப் பிறகு எனக்கு ஏதும் வருமானம்? இதுவரைக்கும் 'அட்வான்ஸ்' பணத்துல கழிச்சாச்சு. இ மாசத்துல இருந்து அதுக்கும் வழியில்லை.

இந்த லட்சணத்தில நான் புள்ளை பெத்துட்டு எங்கே போவேன்... அது வயித்துக்கு யார்கிட்ட போய் கையேந்துவேன்? என் பிரசவத்தை பார்க்கக்கூட யாரும் இல்லேயேம்மா. நான் என்ன செய்ய முடியும்?" சாந்தி மார்பில் அடித்துக்கொண்டு அழ, விக்கித்துப் போனாள் அன்பரசி.

'இதையெல்லாம் எப்படி யோசிக்காமல் விட்டேன்? இவ வயிற்றுக்கே உணவின்றி வாடும்போது, பிறக்கும் குழந்தையை இவளா எப்படி வளர்க்க முடியும்? பிரசவத்தின்போதுதானே தாயின் துணை எத்தனை முக்கியம் என்று தெரியும்!

யாருமே இல்லாமல் இவள் எப்படி பிள்ளையைப் பெற்று... கடவுளே பிரசவத்தில் இவள் பிழைக்க வேண்டுமே! போதிய உணவின்றி உட வற்றிப்போய்- தேவையான உதிரம் இல்லாமல் இருக்கிறாளே! முதலி இவள் பிழைத்து எழ வேண்டும்.

பிறகு, நல்லபடியாய் குழந்தையை வளர்க்க வேண்டும். அதற்குள் இவனைக் கண்டுபிடிக்க வேண்டும். இவன் ஏற்றுக்கொள்ள மறுத்தால் இவனது குடும்பத்தாரிடம் சென்று வாதாட வேண்டும். என்ன ஆனாலும் சரி! இன்னொரு சிசுவை நம் கண்முன்னே அநாதை ஆ விடக்கூடாது.'

உறுதியான முடிவோடு தன் கைப்பையை திறந்தாள். சம்பளம் வாங்கிய பணம் கத்தையாய் இருக்க, அதில் இருந்து ஆறு ஐநூறு ரூபாய் நோட்டுகளை எடுத்தாள். இன்னும் அழுதுகொண்டிருந்த சாந்தியின் முகத்தைத் துடைத்துவிட்டாள்.

"அழாதே! போனதை நினைச்சி அழுறதைவிட, நடக்கப்போறதை பத்தி பேசுவோம்."

"அம்மா!"

"உன் வீட்டுக்கு வாடகை எவ்வளவு?"

"ரெண்டாயிரம்மா."



"இந்தா! இதுல மூவாயிரம் இருக்கு. முதல்ல வாடகையைக் கொடுத்துட்டு, மிச்ச பணத்தை வெச்சு மளிகைச் சாமான் வாங்கிக்க."

"இ... இல்லம்மா! எனக்கு எதுக்கு...?"

"இது உனக்கில்லை... உன் பிள்ளைக்கு. இனி நீ குழந்தைக்காக வாழ்ந்துதான் ஆகணும்."

"நர்சம்மா."

"ஏற்கெனவே உடம்பு ரொம்ப பலவீனமா இருக்கு. வேளாவேளைக்கு ஒழுங்கா சாப்பிட்டாத்தான் 'டெலிவரி' சுலபமா இருக்கும். புரியுதா...?"

"சரிங்கம்மா."

"இனி எதைப் பத்தியும் கவலைப்படாதே! இது உனக்கு ஏழாம் மாசம். ஒன்பதாம் மாசம் சீமந்தம் பண்றதுக்கு, உன் மாமியார் வீட்ல உன்னைச் சேர்க்கிறது என் பொறுப்பு."

"அ...ம்...மா! இ... இதெல்லாம் நடக்குமா?"

"நடக்கும்... நடக்க வெப்பேன். குழந்தை பிறக்கும்போது, நீ தனியாளா இருக்கமாட்டே! உன்னைச் சுத்தி உன் குடும்பம் இருக்கும்."

"அம்மா! அவனுக்கு வேற கல்யாணமாகி..."

"ஷ்! அது உண்மையோ... பொய்யோ! உண்மையாகவே இருந்தாலும், உனக்கு அவங்க ஒரு வழி சொல்லித்தானே ஆகணும். பேசிப் பார்ப்போம். ஒத்துவரலைன்னா போலீஸ் மூலமா போவோம்."

"ஐயோ... போலீசா?"

"ஏன் பதறுற? எனக்கு தெரிஞ்சவர் போலீசா இருக்கார். அவர்கிட்டயும் இந்த படத்தைக் காட்டி இவனைத் தேடச் சொல்றேன். எப்படியும் கிடைச்சிடுவான்... பயப்படாதே."

"இதெல்லாம் நடக்குமோ என்னவோ! ஆனா, நீங்க சொல்றதைக் கேட்கும்போது, ரொம்ப தைரியமா இருக்கும்மா."

"இதே தைரியத்தோட வீட்டுக்கு போ. உம் புருஷனைப் பத்தி யார் கேட்டாலும் தைரியமாச் சொல்லு... வேலைக்காக வெளியூர் போயிருக்காருன்னு. யார் முன்னாலயும் கோழை மாதிரி அழாதே!"

"சரிம்மா."

"நம்மை மாதிரி பொண்ணுங்களுக்கு மனதிடம் வேணும். அது இருந்தா எதையும் சமாளிச்சிடலாம்."

"சரிம்மா."

"இனிமே பைத்தியக்காரத்தனமா முடிவைப் பத்தி யோசிக்காதே.

ஒழுங்கா சாப்பிட்டு, மருந்து– மாத்திரையைப் போட்டுட்டு ஓய்வு எ... எந்த உதவி வேணும்னாலும் தயங்காம எங்கிட்ட கேளு."

"கேக்கறேன் நர்சம்மா. நீங்க என் சாமி... குலசாமி."

"பெரிய வார்த்தை எதுக்கு... காலையில சாப்பிட்டியா?"

"இன்னும் இல்லம்மா."

"மணி ஒண்ணாகுது. இப்படி சாப்பிடாம இருந்தா, உடம்பு என்னாகும்? ஒரு நிமிஷம் இரு" என்றவள், மேசை மீதிருந்த தன் சாப்பாட்டு பையை எடுத்து வந்தாள்.

"சாந்தி! இதுல வெஜிடபிள் புலவு இருக்கு. எங்க அம்மா பண்ணினது ரொம்ப சுவையா இருக்கும். சாப்பிடு."

"வேணாம்மா. இது உங்க சாப்பாடு."

"ம்ப்ச்... சாப்பிடு! நான் 'கேண்டீன்'ல சாப்பிட்டுக்கிறேன்."

"என்னம்மா நீங்க... சொன்னாக் கேளுங்கம்மா."

"அதோ அந்த ஜன்னல்கிட்ட உட்காரு. பேசாம சாப்பிடு. நான் 'லேப்' வரைக்கும் போயிட்டு வர்றேன்."

"சரிம்மா"– சங்கோஜமாய் வாங்கிக்கொண்டாள் சாந்தி. பரிசோதனைக் கூடத்துக்கு கொண்டுசெல்ல வேண்டிய பாட்டில்களை சேகரித்துவிட்டு புறப்பட்டபோது, மேசை மீதிருந்த புகைப்படம் கண்ணில்பட்டது.

'முதலில் இதை பத்திரப்படுத்த வேண்டும். மாலையில் வீட்டுக்குச் செல்லும் முன் இதை நான்கைந்து பிரதிகள் 'பிரிண்ட்' போட்டுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் ஆளுக்கொன்றாய் கொடுக்க முடியும்.'

புகைப்படத்தைப் பார்த்தாள். வெகு அலட்சியமாய் புன்னகைத்துக்கொண்டிருந்த அந்த நாகராஜனை பார்க்கையில் ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. பற்களை கடித்தவாறே அவனை வெறித்தாள்.

## 6

***அன்பு என்பது கல்லுக்குள்***
***இருக்கும் சிற்பம் போல்...***
***உணர்ந்தவனுக்கு அது சிற்பம்***
***உணராதவனுக்கு வெறும் கல்!***

அம்பிகை, மகளின் சம்பளப் பணத்தை மீண்டும் எண்ணிப்



பார்த்தாள். குழப்பமாய் மகளை அழைத்தாள்.

"அன்பு."

"என்னம்மா?"

"சம்பளம் வாங்கும்போது எண்ணிப் பார்த்தியா?"

"ஸ்... மறந்தே போயிட்டேம்மா. நான் கொஞ்சம் பணம் எடுத்தேம்மா."

"என்ன செலவும்மா?"

"அம்மா! சாந்தின்னு ஒரு பொண்ணைப் பத்திச் சொன்னேனே. அவளுக்குக் கொடுத்தேம்மா. பாவம்! வீட்டு வாடகை கொடுக்க முடியாம... சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாம கஷ்டப்படுறா."

"அதுக்காக மூவாயிரம் ரூபாயா தூக்கிக் கொடுப்ப?"

"பாவம்மா! வயிற்றுப் பிள்ளைக்காரி. பசியில கஷ்டப்படுறா. நம்மால முடிஞ்ச உதவி பண்ண வேண்டாமா?"

"அது சரிதாங்க்கா. ஆனா... இது உன் கல்யாணத்துக்காக போடுற சீட்டுப் பணமாச்சே?"– இரவு உணவுக்காக சப்பாத்தி தட்டிக்கொண்டிருந்த தமிழரசி கேட்டாள்.

"எப்பவோ நடக்கப்போற கல்யாணத்துக்காக சேமிக்கிறதைவிட, கண் முன்னால கஷ்டப்படுற ஒரு கர்ப்பஸ்திரிக்கு உதவுறது பெரிய விஷயமில்லையா?"

"உண்மைதான். இருந்தாலும்..."

"அம்மா! அவ பாவம்மா. அவளுக்குன்னு யாருமே இல்ல. எங்கிட்ட ரொம்பப் பிரியமா இருப்பா. எனக்கும் அவ மேல ரொம்ப அன்பு."

"சரி விடு. நான் சமாளிச்சிக்கிறேன்."

"அப்பா! ஒரு நிமிஷம் டி.வி.யை நிறுத்திட்டு வாங்களேன். கோபி நீயும்தான்."

"என்னக்கா?"– படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு வந்தான். வாசுதேவனும் எழுந்து வர, அலமாரியில் இருந்த தன் கைப்பையைத் திறந்து புகைப்படம் அடங்கிய உறையை எடுத்தாள்.

"என்னக்கா இது?"

"சொல்றேன்! அப்பா, இதுதான் அந்த சாந்தியோட புருஷன்" என்றவாறே அவரிடம் ஒரு புகைப்படத்தை எடுத்து நீட்டினாள். தாயிடமும், தங்கையிடமும், தம்பியிடமும் ஒவ்வொன்றை நீட்ட... அனைவரும் குழப்பமாய் வாங்கிக்கொண்டனர்.

"எதுக்கும்மா இது எங்களுக்கு?"

"அப்பா! இந்த படத்துல உள்ளவனை நல்லா பாருங்கப்பா
ாங்கேயாவது பார்த்திருக்கீங்களா?"– அன்பரசி ஆர்வமாய
கேட்க, புகைப்படத்தைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினா
பாசுதேவன்.

"இல்லையேம்மா."

"இந்த போட்டோ உங்ககிட்டயே இருக்கட்டும்ப்பா. ஒருவேளை
இவனை எங்கேயாவது பார்த்தா... மெதுவா பேச்சுக் கொடுத்து உங்ககூட
வெச்சிக்கிட்டே எனக்கு போன் பண்ணுங்கப்பா."

"உனக்கா... எதுக்கும்மா?"

"இவனை எப்படியாவது கண்டுபிடிச்சி, சாந்திகிட்ட
சேர்க்கணும்ப்பா."

"ஏய்! என்னடி இதெல்லாம்... உனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம்?–
ம்பிகை லேசாய் பதறினாள்.

"பாவம்மா சாந்தி! இவனை நம்பி வந்து வாழ்க்கையையே
தாலைச்சிட்டு நிக்கிறா. நம்மால முடிஞ்ச உதவியை..."

"அது அவ தலையெழுத்து. அதுக்கு நாம என்ன பண்ண
டியும்?"

"அம்மா!"

"உனக்கு பரிதாபமா இருந்தா இப்ப மாதிரி ஏதோ பணமோ...
ாருளோ கொடுத்து உதவு. அதை விட்டுட்டு கண்டவனையும் தேடிப்
டிக்கணும்னு அலையாதே!"

"அம்மா! இப்ப அவ வயித்துல பிள்ளையோட தனியா நிக்கிறாம்மா.
வளை இப்படி விட்டுட்டு ஓடினவனை சும்மா விடலாமா?"

"என்னங்க... இவ ஏதேதோ சொல்றா?"

"அதானே! அன்பு, நமக்கேம்மா இந்த வேலை?"

"என்னப்பா நீங்க? நான் அவகிட்ட எவ்வளவு நம்பிக்கையோட
ால்லிட்டு வந்திருக்கேன். இவனைக் கண்டுபிடிச்சு கொடுக்கலன்னா,
வாழ வழி தெரியாம செத்திடுவாப்பா."

ஐயோ."

அப்புறம் அந்தக் குழந்தை அநாதை ஆகிடும்ப்பா. அப்படி எதுவும்
கக் கூடாது. தப்பு செய்தது அவனும்தானே? அவன் மட்டும்
க்கலாமா?"

ஏய்! இதெல்லாம் அவ பிரச்சினைடி. இதுல நீ ஏன்
யிடணும்?"



"இப்படி அடுத்தவங்க எப்படி போனா நமக்கென்னன்னு வாழுறது ஒரு வாழ்க்கையாம்மா? கண்ணு முன்னால ஒரு பொண்ணு கஷ்டப்படுறதப் பார்த்துட்டு, சும்மா இருக்கச் சொல்றீங்களா?"

"அன்பு! நீ சொல்றது சரிதாம்மா. ஒருவேளை இவன் நம்ம கண்லபட்டாலும், எப்படி அந்தப் பொண்ணோடு சேர்த்து வைப்ப?"

"பேசணும்ப்பா. அவ நிலமையை எடுத்துச் சொல்லி..."

"பைத்தியம் மாதிரி பேசாதடி. அவன் பேரைத் தவிர எதுவும் அவளுக்குத் தெரியாதுங்கற. கல்யாணத்தையும் ஏதோ கோவில்ல வெச்சு– யாருக்கும் தெரியாம பண்ணி இருக்கான். இப்படிப்பட்ட கேடிப் பய, நீ பேசினதும் மனசு மாறி அவகூட குடும்பம் நடத்த வந்துடுவானா?"

"அம்மா?"

"அவ வேண்டாம்னு தூக்கிப் போட்டவன், அவளை யாருன்னே தெரியாதுன்னு சொன்னா என்ன பண்ணுவே? அந்தப் பொண்ணுகிட்ட எந்த ஆதாரமும் இல்லையே!"

"ஆ...மா."

"பிறகெப்படி இது சரியா வரும்? தேவையில்லாம ஊர்ப் பிரச்சினையில தலையிட்டு மாட்டிக்காதே. சொல்றதைக் கேளு."

"அப்போ... சாந்தியோட நிலைமை?"– அன்பரசிக்கு தொண்டை அடைத்தது.

"நாம என்ன செய்ய முடியும்? பெத்தவங்களை கதற வெச்சிட்டு வந்திருக்காளே! அது எவ்வளவு பெரிய பாவம்? செய்த பாவத்தை தொலைக்கட்டும்."

"வேண்டாம்மா! பாவம் அவ. இதுவரைக்கும் ரொம்ப கஷ்டத்தை அனுபவிச்சிட்டா. இப்ப... தன் உயிரையே மாய்ச்சுக்கிற அளவுக்கு போயிருக்கா."

"அதான் அவ விதின்னா நாம என்ன செய்ய முடியும்?"

"இல்லம்மா. அப்படி விடக்கூடாது. நாம ஏதாவது செய்யணும்."

"ஏய்! நான் சொல்லிட்டே இருக்கேன்..."

"அம்மா"– கோபி இடைமறித்தான்.

"என்னடா?"

"அக்கா சொல்றதுல என்னம்மா தப்பு?"

"என்னடா சொல்ற?"

"ஆமாம்மா! 'நம்ம குடும்பம்– நம்ம வீடு'ன்னு எல்லாருமே சுயநலமா இருந்துட்டா எப்படிம்மா? நம்மால முடிஞ்ச உதவியைத்தானே செய்யச்

"அப்பா! இந்த படத்துல உள்ளவனை நல்லா பாருங்கப்பா எங்கேயாவது பார்த்திருக்கீங்களா?"– அன்பரசி ஆர்வமாய் கேட்க, புகைப்படத்தைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார் வாசுதேவன்.

"இல்லையேம்மா."

"இந்த போட்டோ உங்ககிட்டயே இருக்கட்டும்ப்பா. ஒருவேளை இவனை எங்கேயாவது பார்த்தா... மெதுவா பேச்சுக் கொடுத்து உங்ககூட வெச்சிக்கிட்டே எனக்கு போன் பண்ணுங்கப்பா."

"உனக்கா... எதுக்கும்மா?"

"இவனை எப்படியாவது கண்டுபிடிச்சி, சாந்திகிட்ட சேர்க்கணும்ப்பா."

"ஏய்! என்னடி இதெல்லாம்... உனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம்?- அம்பிகை லேசாய் பதறினாள்.

"பாவம்மா சாந்தி! இவனை நம்பி வந்து வாழ்க்கையையே தொலைச்சிட்டு நிக்கிறா. நம்மால முடிஞ்ச உதவியை..."

"அது அவ தலையெழுத்து. அதுக்கு நாம என்ன பண்ண முடியும்?"

"அம்மா!"

"உனக்கு பரிதாபமா இருந்தா இப்ப மாதிரி ஏதோ பணமோ... பொருளோ கொடுத்து உதவு. அதை விட்டுட்டு கண்டவனையும் தேடிப் பிடிக்கணும்னு அலையாதே!"

"அம்மா! இப்ப அவ வயித்துல பிள்ளையோட தனியா நிக்கிறாம்மா. அவளை இப்படி விட்டுட்டு ஓடினவனை சும்மா விடலாமா?"

"என்னங்க... இவ ஏதேதோ சொல்றா?"

"அதானே! அன்பு, நமக்கேம்மா இந்த வேலை?"

"என்னப்பா நீங்க? நான் அவகிட்ட எவ்வளவு நம்பிக்கையோட சொல்லிட்டு வந்திருக்கேன். இவனைக் கண்டுபிடிச்சு கொடுக்கலன்னா, அவ வாழ வழி தெரியாம செத்திடுவாப்பா."

"ஐயோ."

"அப்புறம் அந்தக் குழந்தை அநாதை ஆகிடும்ப்பா. அப்படி எதுவும் நடக்கக் கூடாது. தப்பு செய்தது அவனும்தானே? அவன் மட்டும் தப்பிக்கலாமா?"

"ஏய்! இதெல்லாம் அவ பிரச்சினைடி. இதுல நீ ஏன் தலையிடணும்?"



"இப்படி அடுத்தவங்க எப்படி போனா நமக்கென்னன்னு வாழுறது ஒரு வாழ்க்கையாம்மா? கண்ணு முன்னால ஒரு பொண்ணு கஷ்டப்படுறதப் பார்த்துட்டு, சும்மா இருக்கச் சொல்றீங்களா?"

"அன்பு! நீ சொல்றது சரிதாம்மா. ஒருவேளை இவன் நம்ம கண்லபட்டாலும், எப்படி அந்தப் பொண்ணோடு சேர்த்து வைப்ப?"

"பேசணும்ப்பா. அவ நிலமையை எடுத்துச் சொல்லி..."

"பைத்தியம் மாதிரி பேசாதடி. அவன் பேரைத் தவிர எதுவும் அவளுக்குத் தெரியாதுங்கற. கல்யாணத்தையும் ஏதோ கோவில்ல வெச்சு– யாருக்கும் தெரியாம பண்ணி இருக்கான். இப்படிப்பட்ட கேடிப் பய, நீ பேசினதும் மனசு மாறி அவகூட குடும்பம் நடத்த வந்துடுவானா?"

"அம்மா?"

"அவ வேண்டாம்னு தூக்கிப் போட்டவன், அவளை யாருன்னே தெரியாதுன்னு சொன்னா என்ன பண்ணுவே? அந்தப் பொண்ணுகிட்ட எந்த ஆதாரமும் இல்லையே!"

"ஆ...மா."

"பிறகெப்படி இது சரியா வரும்? தேவையில்லாம ஊர்ப் பிரச்சினையில தலையிட்டு மாட்டிக்காதே. சொல்றதைக் கேளு."

"அப்போ... சாந்தியோட நிலைமை?"– அன்பரசிக்கு தொண்டை அடைத்தது.

"நாம என்ன செய்ய முடியும்? பெத்தவங்களை கதற வெச்சிட்டு வந்திருக்காளே! அது எவ்வளவு பெரிய பாவம்? செய்த பாவத்தை தொலைக்கட்டும்."

"வேண்டாம்மா! பாவம் அவ. இதுவரைக்கும் ரொம்ப கஷ்டத்தை அனுபவிச்சிட்டா. இப்ப... தன் உயிரையே மாய்ச்சுக்கிற அளவுக்கு போயிருக்கா."

"அதான் அவ விதின்னா நாம என்ன செய்ய முடியும்?"

"இல்லம்மா. அப்படி விடக்கூடாது. நாம ஏதாவது செய்யணும்."

"ஏய்! நான் சொல்லிட்டே இருக்கேன்..."

"அம்மா"– கோபி இடைமறித்தான்.

"என்னடா?"

"அக்கா சொல்றதுல என்னம்மா தப்பு?"

"என்னடா சொல்ற?"

"ஆமாம்மா! 'நம்ம குடும்பம்– நம்ம வீடு'ன்னு எல்லாருமே சுயநலமா இருந்துட்டா எப்படிம்மா? நம்மால முடிஞ்ச உதவியைத்தானே செய்யச்

சொல்றா அக்கா. செய்வோமே!"

"கோபி! என்னடா நீயும் புரியாமப் பேசுற... அவன் யாரோ எவனோ ஒரு பொண்ணை ஏமாத்தி கல்யாணம் பண்ணி விட்டுட்டு போனவ எப்படி நல்லவனா இருக்க முடியும்? இவ பாட்டுக்கு அவனைத் தேடி கண்டுபிடிக்கிறேன்னு கிளம்பி ஏதாவது வம்பு இழுத்து வைக்க போறா."

"அம்மா! இது சாதாரண விஷயம். இதுக்குப் போய் ஏம்மா இவ்வே கற்பனை பண்ணுறீங்க?"

"டேய்! நான்..."

"நன்றி கோபி"– என்ற மூத்தவளை, புன்னகையோடு ஏறிட்டான்.

"எனக்கெதுக்குக்கா நன்றியெல்லாம்?"

"நீயாவது என்னை புரிஞ்சுகிட்டியே! அந்த சாந்தி ரொம் பாவம்டா! எப்படி அழுதா தெரியுமா? அவளுக்கு உதவி பண் யாருமே இல்லடா."

"அதான் நாம இருக்கோமே அக்கா. நீ ஒண்ணும் பயப்படாதே. நா இந்த படத்தை என் நண்பர்கள் எல்லார்கிட்டேயும் காட்டறேன். தம் நீ உன் பள்ளிக்கூடத்துல டீச்சர்ஸ்கிட்ட காட்டு.

அம்மா! நீங்ககூட வெளியே 'மார்க்கெட்', கோவில்னு போற இடத்து இவனைப் பார்த்தா சொல்லுங்கம்மா. நம்மால ஒரு பொண்ணோட வாழ்க்கைத் திரும்பக் கிடைச்சா சந்தோஷம்தானே?"

"நீங்க யாரோ ஒரு பொண்ணோட வாழ்க்கைக்காக பேசுறீங்க. நா எம் பொண்ணோட வாழ்க்கையை நினைச்சு பயப்படுறேன்."

"அக்காவுக்கு ஒண்ணும் ஆகாதும்மா. நான் இருக்கேனே!"

"நீ சின்னப் பயடா. உனக்கென்ன தெரியும்? நாங்க அவளுக் மாப்பிள்ளை பார்த்துட்டு இருக்கோம். இந்த நேரத்துல தேவையில்லா பிரச்சினையை இழுத்துட்டு வந்து நிக்கிறாளே! இது..."– அம்பிகை ஆற்றாமையாய் சொல்ல, திடுக்கிட்டாள் அன்பரசி.

"எ...ன்ன... மாப்பிள்ளையா? யாருக்கு?"

"உனக்குத்தான். இது என்ன கேள்வி?"

"எனக்கு இப்ப என்னம்மா அவசரம்? கொஞ்சநாள் போகட்டும்."

"இன்னும் எத்தனை வருஷம்தான் இப்படியே சொல்லுவே? உனக் அடுத்தவளுக்கும் கல்யாண வயசு வந்தாச்சி."

"அம்மா..."

"இதோ பாரு. இனிமே உன் பேச்சைக் கேட்கிறதா இல்ல. பேசா



நாங்க பார்க்கிற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டு."

"ஏம்மா! நான் என்ன கல்யாணமே வேண்டாம்னா சொன்னேன்? கொஞ்ச நாள் போகட்டும்னுதானே...?"

"போதும்... போதும். இவ்வளவு நாள் போனது போதும். இனிமேலாவது நாங்க சொல்றதைக் கேட்டு நட"– அம்பிகை உறுதியாய் நின்றாள்.

"சரிம்மா! எனக்கு ரெண்டு மாசம் அவகாசம் கொடுங்க."

"எதுக்கு?"

"சாந்தியோட புருஷனைக் கண்டுபிடிச்சி அவகிட்ட சேர்த்த பிறகு, நீங்க என்ன சொன்னாலும் கேட்கிறேன். அதுவரைக்கும் என்னை தொந்தரவு பண்ணாதீங்க."

"பார்த்தீங்களா...? நான் இவ்வளவு சொல்லியும், அவ சொன்னதையே சொல்லிட்டு இருக்கா பாருங்க. இவ மனசுல என்ன பெரிய சமூக சேவகிங்கற நினைப்பா?"

"அம்பிகை... கோபப்படாதே! அவ இவ்வளவு தூரம் இறங்கி வந்ததே பெரிய விஷயம்."

"என்னங்க... நீங்களும்..."

"அமைதியா இரு! நாம என்ன கையில தயாரவா மாப்பிள்ளை வெச்சிருக்கோம்? பொறுமையா அலசி– ஆராய்ந்து நாம ஒரு பக்கம் மாப்பிள்ளை தேடுவோம். அதுக்குள்ள அவ அந்தப் பொண்ணோட புருஷனைக் கண்டுபிடிக்கட்டும்"– என்ற தந்தையை நன்றியாய் பார்த்தாள் அன்பரசி.

"நன்றிப்பா. ரொம்ப நன்றி."

"ஆனா, ஒண்ணு அன்பும்மா! அவன் ஒருவேளை கிடைக்கலேன்னா... நீ அதைக் காரணம் காட்டி கல்யாணத்துல தடங்கல் பண்ணக்கூடாது."

"மாட்டேன்ப்பா. அவனைத் தேடுறது, மன திருப்திக்காகத்தான். என் கண்ணு முன்னால ஒரு கர்ப்பிணி கஷ்டப்படுறதைப் பார்த்துட்டு அவளுக்கு ஏதாவது உதவி செய்யணும். அவ புள்ள அநாதையா ஆகிடக் கூடாதுன்னுதான் இவ்வளவு முயற்சி பண்ணுறேன்.

இந்த முயற்சியில வெற்றியும் கிடைக்கலாம். தோல்வியும் அடையலாம். ஆனா, அதுக்காக உங்களைக் கஷ்டப்படுத்த மாட்டேன். எனக்கு நம்ம குடும்பமும் முக்கியம். சாந்தியும் முக்கியம்ப்பா. குறிப்பா அம்மாவை ஒரு நாளும் சங்கடப்பட விடமாட்டேன்."

மகளின் வார்த்தையில் அம்பிகையின் குழம்பிய முகம் லேசாய்த் தெளிந்தது. அன்பரசி, தாயை நெருங்கி அவளது முகத்தைப் பற்றி

தன்புறமாய்த் திருப்பினாள்.

"நான் சொன்னதுல உங்களுக்கு சம்மதமாம்மா?"

"ம்."

"இப்படி உம்முன்னு சொன்னா எப்படி? 'சரிடி'ன்னு சந்தோஷமாச் சொல்லுங்களேன்."

"சரிடி"– என்றாள் அம்பிகை, புன்னகையோடு.

"ம்... அம்மான்னா அம்மாதான்! என் செல்ல அம்மா."

"அடடா! என்ன இது வீடா... மீன் 'மார்க்கெட்'டா? இப்படி சத்தம் போட்டுட்டே இருந்தா எப்படி படிக்கிறதாம்?"– உள் அறையில் இருந்து புத்தகமும் கையுமாய் வெளியே வந்தாள் இளவரசி.

"ஏய்! நீ என்ன இவ்வளவு நேரம் படிச்சிட்டா இருந்தே? நாங்க பேசினதைத்தானே உட்கார்ந்து கேட்டே?"– என்றான் கோபி.

"இப்படி சத்தமா பேசினா... காதுல விழாதா? அடுத்த வாரம் எனக்கு பரீட்சை இருக்கு. என்னைப் படிக்க விடுங்க."

"சரிடி படிப்பாளினி. படி. 'ஸ்டேட் பர்ஸ்ட்' எடுக்கிறியா பார்ப்போம்."

"அதையெல்லாம் ஆயிரம் 'மார்க்'கூட எடுக்காத நீ சொல்லக்கூடாது. நீயே ஒரு மக்குப் பய."

"அடி... வாயாடிக் கழுதை. யாரை மக்குன்னு சொன்னே?"– கோபி கிருஷ்ணன் கையை ஓங்கியபடி துரத்த, தாயின் பின்னே போய் ஒளிந்துகொண்டாள் இளவரசி.

"ஆரம்பிச்சிட்டீங்களா? டேய்! நீ என்ன சின்னப்பிள்ளை மாதிரி விளையாட்டிட்டு. போ... போய் படி"– அதட்டிய அம்பிகையை முறைத்துக்கொண்டே அன்பரசி தந்த புகைப்படத்தை எடுத்துக்கொண்டு நகர்ந்தான்.

அன்பரசி புன்னகையோடு மீதமிருந்த புகைப்படங்களை எடுத்துக்கொண்டு எழ, அவளது கைப்பேசி அழைத்தது. 'இந்நேரத்துக்கு யார் போன் பண்றது?'– யோசனையாய் மேசை மீதிருந்த கைப்பேசியை எடுத்தாள்.

"ஹலோ."

"அன்பரசி சிஸ்டர்! நான் சந்தியா பேசுறேன்."

"என்ன சந்தியா... இந்நேரம் போன் பண்ற?"

"சிஸ்டர்! நீங்க கொஞ்சம் உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வர முடியுமா?"– சந்தியாவின் குரலில் இருந்த பதற்றம், அன்பரசியின் மனதில்



கலக்கத்தை உண்டாக்கியது.

"எ...என்ன சந்தியா? எதுவும் அவசரமா?"

"ஆமாம் சிஸ்டர்! அந்த சாந்திங்கற 'பேஷண்ட்' இங்கே 'அட்மிட்' ஆகிருக்கு. உங்களை உடனே பார்க்கணும்னு அழுவுது."

"எ...ன்...ன?"– அன்பரசியின் கையிலிருந்த புகைப்படம் நழுவியது.

"என்ன சொல்ற சந்தியா...? சாந்திக்கு என்னாச்சு? இன்னிக்கு மதியம்கூட பார்த்தேனே?"

"பிரசவ வலி போல இருக்கு சிஸ்டர்."

"இல்ல... இது ஏழாவது மாசம்தானே?"

"என்னன்னு தெரியலை. ரத்தப்போக்கு வேற ஆகிட்டுருக்கு. 'கிரிட்டிக்கல் பொஸிஸன்'னு டாக்டர் சொல்றார். அவ என்னன்னா உங்களைத்தான் பார்க்கணும்னு ரொம்ப அழறா. நீங்க..."

"இதோ... இப்பவே வர்றேன்" என இணைப்பை துண்டித்துவிட்டு உள் அறைக்குள் நுழைந்து கைப்பையை எடுத்துக்கொண்டே ஓடினாள்.

"போன்ல யாரும்மா?"– என்றாள் தாய்.

"அம்மா! நான் உடனே ஆஸ்பத்திரிக்கு போகணும். எல்லாம்... வந்து விபரமாச் சொல்றேன். 'லேட்'டானா தேடாதீங்க."

"ஏய்! என்னடி இது? மணி பத்தாகப்போகுது?"

"ம்மா... பிளீஸ். அங்கே சாந்தி ரொம்ப 'சீரியஸா' இருக்காளாம். என்னைப் பார்க்கணும்னு சொல்றாளாம். நான் உடனே போகணும். அப்பா! கொஞ்சம் வண்டிய எடுக்கறீங்களா?"– அவசரமாய் கேட்டுக்கொண்டே காலில் செருப்பை மாட்டினாள்.

"அடடா! வண்டிய 'பஞ்சர்' ஒட்டக் கொடுத்தேம்மா. ஒட்டிட்டானான்னு பார்த்துட்டு வர்றேன்."

"வேணாம்ப்பா. நேரமாகிடும். நான் ஆட்டோ பிடிச்சி போயிடுறேன்."

"அக்கா! இந்நேரத்துக்கு எப்படி தனியாப் போவ? இரு ... நான் வர்றேன்"– என கோபி கிருஷ்ணனும் சட்டையை மாட்டிக்கொண்டு புறப்பட, பதறும் மனத்தோடு தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கினாள் அன்பரசி.

"அன்பு! எதுவும் அவசரம்ன்னா போன் போடும்மா. கோபி! பார்த்துக்கப்பா"– அம்பிகை வாசலில் நின்று குரல் கொடுக்க, அன்பரசியின் காதில் அது விழவில்லை.

மனம் முழுக்க சாந்தியின் நினைவு ஆக்கிரமித்திருந்தது.

'என்ன ஆயிற்று? அத்தனை நம்பிக்கையாய் பேசிவிட்டுப் போனாளே! அதற்குள் என்ன நடந்திருக்கும்? அவளது கர்ப்பப்பை பலவீனமாய் இருப்பதாய் டாக்டர் சொன்னாரே! ஒருவேளை... குறை பிரசவம் ஏதேனும் ஆகிவிடுமோ? அவளது உயிருக்கு...'– அன்பரசியின் உடல் உதறியது.

## 7

*பிரிவு என்பது உறவின்*
*முடிவு அல்ல...*
*நினைவின் ஆரம்பம்!*
*அது, இறுதி வரை தொடரும்!!*

ஆட்டோ பிடித்து மருத்துவமனையை அடைந்தபோது, மணி பத்தரை ஆகியிருந்தது. கோபியிடம் பணம் கொடுத்து ஆட்டோவை அனுப்புமாறு சொல்லிவிட்டு பதறித் துடித்து ஓடியபோது,'வார்டுபாய்' எதிர்ப்பட்டான்.

"என்ன சிஸ்டர்! இப்படி ஓடி வர்றீங்க?"

"முத்து! சாந்திங்கற 'பேஷண்ட்...' "

" பிரசவ வார்டுக்கு கொண்டு போயிருக்காங்க..."– அவன் சொல்லி முடிப்பதற்குள் படிகளில் ஏறத் தொடங்கியிருந்தாள். தபதபவென ஏறி மூச்சிரைக்க, வராந்தாவின் கடைசியில் இருக்கும் பிரசவ அறையை நெருங்கியபோது இன்னும் திடுக்கிட்டாள்.

வாசலில் காக்கி சீருடை அணிந்த காவலர்கள் நிற்க, பதற்றமாய் அவர்களை நெருங்கினாள். அவள் மூச்சிரைக்க வந்து நின்றதில், கைப்பேசியில் பேசிக்கொண்டிருந்த இளமாறன் திரும்பினான்.

"நான்! அப்புறமாய் பேசுறேன்" என்றவாறே கைப்பேசியை துண்டித்துவிட்டு அன்பரசியை நெருங்கினான்.

"வாங்க! உங்களைத்தான் அந்தப் பொண்ணு பார்க்கணும்னு சொல்லிட்டு இருந்தா."

"சா...ர்! நீங்கள்லாம்... இங்கே..."

"இது தற்கொலை 'கேஸ்.' "

"என்ன?"– பலமான அதிர்ச்சியில் தள்ளாடினாள்.



"பிளீஸ்! அமைதியா இருங்க. முதல்ல அந்தப் பொண்ணைப் போய் பாருங்க. மத்ததை அப்புறம் பேசலாம்..." அவன் அவசரப்படுத்த, பிரசவ அறையின் கதவைத் தட்டினாள்.

உடனே திறக்கப்பட்டு– சந்தியா வெளியே தலை நீட்டி– அன்பரசியைக் கண்டதும், அவள் நுழையும் அளவுக்கு கதவைத் திறந்துவிட்டாள்.

உள்ளே சாந்தியின் ஓலம் கேட்க, பதறும் இதயத்தோடு அவளிடம் ஓடினாள். இரும்புப் படுக்கையைச் சுற்றி ஏழெட்டு நர்சுகளும், இரண்டு பெண் மருத்துவர்களும் குழுமி இருந்தனர்.

"டாக்டர்"– அன்பரசியின் மெல்லிய குரலில் அனைவரும் திரும்ப, சாந்தியின் அலறல் சட்டென நின்றது. உடல் முழுக்க வியர்த்திருந்தது. வலியால் முகம் சுருங்கிக் கிடந்தவளிடம் ஒரு அமைதி வந்தது.

"ந...ர்...சம்மா! வந்திட்டீங்களா... வந்திட்டீங்களா?" மற்றவர்களை விலக்கிக்கொண்டு முன்னே சென்றாள். வெள்ளமாய் வழிந்த வியர்வையை தன் சேலைத் தலைப்பால் ஒற்றியவாறே கண் கலங்கக் கேட்டாள்.

"சாந்தி! எ...என்னாச்சு?"

"அம்மா... நான்... அவனை... அந்தப் பாவியை... பார்த்தேம்மா"– – சாந்தி மூச்சிரைக்க பேச, அதட்டினாள் மருத்துவர்.

"ஏய்! 'ஆக்ஸிஜன்' கொடுக்கணும். அப்புறமா பேசு."

"இ...ல்...ல! நான் பேசணும். நர்சம்மாகிட்ட பேசணும்."

"அன்பரசி! என்ன பேசுறே?"– மருத்துவர் கடுகடுவென கேட்க, பவ்வியமானாள் அன்பரசி.

"ஸாரி டாக்டர்! ஒரு நிமிஷம் சாந்தி. முதல்ல உனக்கு 'டிரீட்மெண்ட்' பண்ணட்டும். அப்புறமா பேசலாம்."

"இல்லம்மா! நான் பொழைக்க மாட்டேன். அதுக்குள்ள உங்ககிட்ட அவனைப் பத்தி பேசணும். பேசியே ஆகணும்."

"இதோ பாரு! குழந்தையப் பெத்து முழுசா பொழைக்கணுங்கற எண்ணம் இருக்கா... இல்லையா?"

"டாக்டர்?"

"இவ இப்படியே பேசிட்டு இருந்தா, எங்களால ஒண்ணும் பண்ண முடியாது. முதல்ல இவளோட வலியை நிறுத்தியாகணும். இல்லேன்னா தாய்– சேய் ரெண்டு பேரையும் காப்பாத்த முடியாது."

"நோ... நோ"– வீறிட்டாள் அன்பரசி.

"சந்தியா! அந்த ஊசியைப் போடு. அப்பத்தான் அவ அமைதியா

இருப்பா"– டாக்டர் சொல்ல, சந்தியா மஞ்சள் நிற திரவத்தை ஊசியில் ஏற்றி, சாந்தியின் நரம்போடிய கையில் பச்சை நரம்பைத் தேடி ஊசியைச் செருக, வலியால் கண்ணை மூடிக்கொண்டாள்.

ஒரு சில கணங்களில் சுற்றி இருந்தவர்களின் பிம்பம் புகை போல் காட்சி அளிக்க, தன் அருகே நின்ற அன்பரசியின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

"அவனைப் பார்த்தேன்... நர்சம்மா. அவன்... என்னை பார்த்துட்டு ஓடிட்டான். நான்... அவன் பின்...னால... போய்... ஒரு... கார்ல... மோ...தி... கீ...ழே..."– அதற்கு மேல் பேச இயலாமல் சாந்தியின் கண்கள் செருகிக்கொள்ள, அந்த அறை அமைதியானது.

மருத்துவர் மேலும் இரண்டு மருந்துகளை ஊசியில் ஏற்றி 'டிரிப்ஸ்' ஏறிக்கொண்டிருந்த 'டியூப்'பில் செருக, மவுனமாய் நின்றிருந்தாள் அன்பரசி.

சாந்தியின் முகத்தில் 'மாஸ்க்'கை மாற்றி, 'ஆக்ஸிஜன்' கொடுக்கப்பட்டது.

அவளது நாடித்துடிப்பை பரிசோதித்துவிட்டு, வயிற்றையும் தொட்டு சோதித்துவிட்டு நர்ஸிடம் திரும்பினார் பெண் மருத்துவர்.

"நர்ஸ்! இன்னும் அரை மணி நேரத்துல இந்த மருந்தை செலுத்திடு. அவ மயக்கத்திலயே இருக்கட்டும். விழிச்சா என்னை வந்து கூப்பிடு."

"சரி டாக்டர்."

"அன்பரசி."

"டாக்டர்?"

"இவ... உன்னோட உறவுக்காரப் பெண்ணா?"

இல்ல டாக்டர். நம்மகிட்ட வர்ற 'ரெகுலர் பேஷண்ட்.' "

"ஓ! உன்னைத்தான் பார்க்கணும்னு கத்திட்டே இருந்தா. அவளோட நாடித் துடிப்பு குறைஞ்சதாலத்தான் பேசவிடலை."

"புரியுது டாக்டர்."

"அவ இரவு முழுவதும் ஓய்வு எடுக்கட்டும். நீ வேணா வீட்டுக்கு போயிட்டு காலையில வந்துடு."

"சரி டாக்டர்! டாக்டர்..."

"சொல்லும்மா."

"சாந்தியோட.... உடம்புக்கு என்ன?"

"ஏற்கெனவே ரொம்ப சோர்வா இருக்கா. இதுல அவளோட கர்ப்பப்பையும் பலவீனமா இருக்கு. முழுமையா 'பெட் ரெஸ்ட்'



எடுக்கணும்னு சொல்லி இருந்தேன்."

"ஆ...மா."

"இவ என்னன்னா 'மெயின் ரோட்'டுல 'டிராபிக்' நடுவுல ஓடி போலீஸ்காரங்க ஜீப்ல போய் விழுந்திருக்கா."

"ஐயோ..."

"அவங்கதான் வந்து 'அட்மிட்' பண்ணி இருக்காங்க. ரோட்ல விழுந்த அதிர்ச்சியில 'டெலிவரி மூவ்மெண்ட்' ஆரம்பிச்சுடுச்சு. இந்த நேரம் குழந்தை பொறந்தா... ம்ப்ச்! இரண்டு உயிருக்கும் உத்திரவாதமில்ல."

"டாக்...டர்."

"இப்ப வலி நிற்கிறதுக்கு ஊசி போட்டிருக்கு. இவ உடம்பு அசையாம பார்த்துக்கங்க. 'பாத்ரூம்' போகக்கூட படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூடாது. மீறி நடந்து திரும்பவும் வலி வந்துட்டா... ஒண்ணும் பண்ண முடியாது.

சிஸ்டர்ஸ்! இவளுக்கு படுக்கை ஏற்பாடு பண்ணுங்க. ஒரு பத்து நாட்கள் ஆஸ்பத்திரியிலதான் இருக்கணும். சரியா...?"

"சரி, டாக்டர்."

"அன்பரசி! நீ வீட்டுக்கு போறதா இருந்தா போகலாம்" என்றவாறு இரு மருத்துவர்களும் வெளியேற, இரண்டு நர்சுகளைத் தவிர மற்றவர்களும் வெளியேறினர்.

அன்பரசி தொய்ந்து போனவளாய் அங்கு கிடந்த இரும்பு நாற்காலியில் அமர்ந்தாள். கண்கள் உலந்து போய் சாந்தியையே வெறித்துக்கொண்டிருந்தன. சந்தியா மெல்லிய குரலில் அழைத்தாள்.

"சிஸ்டர்."

"ம்..."

"நீங்க வேணா வீட்டுக்கு..."

"இல்ல... இருக்கட்டும். சந்தியா! சாந்தி வேற ஏதாவது சொன்னாளா?"

"உங்களைப் பார்க்கணும்னுதான் சொன்னா சிஸ்டர்! 'ஒருவேளை பிரசவத்துல நான் செத்துட்டா... எம் புள்ளைய அன்பு நர்சம்மாகிட்ட கொடுத்திடுங்க. அவுக அதை அதோட அப்பன்கிட்ட சேர்த்திடுவாங்க'ன்னு சொன்னா சிஸ்டர்."

அன்பரசி வேதனையாய் கண்களை மூடிக்கொண்டாள்.

'என் மேல் உனக்கு இத்தனை நம்பிக்கையா? பிறகு ஏன் அவசரப்பட்டாய் சாந்தி? தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்கு இல்லை... இவன்

தற்கொலை செய்துகொள்ளவில்லை.

அந்த நயவஞ்சகனைக் கண்டு அவன் பின்னே ஓடி இருக்கிறாள்? அப்போது எதிர்பாராத விதமாக போலீஸ் ஜீப்பில் மோதி இருக்கிறாள்... ஆமாம்! சாந்தி இப்படித்தானே சொன்னாள்? ஆம்! இதை உடனே சொல்ல வேண்டும்'- பதறியவாறே எழுந்து அறைக் கதவை திறந்துகொண்டு வெளியே வந்தாள்.

அவளது வருகைக்காகவே காத்து நின்ற இளமாறன், வேகமாய் அவளை நெருங்கினான்.

"அந்தப் பொண்ணுக்கு எதுவும் ஆகலையே...?"

"இல்ல. மயக்கத்துல இருக்கா."

"பயப்படும்படியா எதுவும்..."

"இல்லைன்னு டாக்டர் சொன்னாங்க."

"ஓ! தேங்க் காட்"- நெஞ்சில் கைவைத்து நிம்மதியாய் மூச்சுவிட்டான் இளமாறன்.

"ஹோ! எத்தனையோ விபத்துகளை- கொலை வழக்கை நேர்ல பார்த்திருக்கேன். ஆனா, இந்தப் பொண்ணு... வயித்துல குழந்தையோட வந்து கார்ல விழுந்ததும்... ஒரு நிமிஷம் ஆடிப் போயிட்டேன்."

"சார்..."

"சொல்லுங்க."

"அவ தற்கொலை பண்றதுக்காக கார்ல வந்து விழல."

"என்ன?"

"ஆமா சார்! அவளை ஏமாத்திட்டு ஓடிப் போன புருஷனைப் பார்த்திருக்கா. இவளைப் பார்த்ததும், அவன் தப்பிச்சி ஓடி இருக்கான். அதான் அவளும் பின்னாலயே ஓடிப் போய்... உங்க வண்டியில..."

"அப்போ... இந்தப் பொண்ணோட புருஷன்?"

"ம்ப்ச்! வயசுக் கோளாறுல எவனையோ நம்பி வந்திருக்கா. அவன் தன் தேவைக்கு பயன்படுத்திட்டு, தூக்கிப் போட்டுட்டான்"- அன்பரசி கசப்பாய்ச் சொல்ல, முகம் மாறினான் இளமாறன்.

"என்ன சொல்றீங்க?"

"ஆமா சார்! இந்தப் பொண்ணோட பேர் சாந்தி" எனத் தொடங்கி, அவளைப் பற்றிய முழு விபரத்தையும் சொல்ல... குறுக்கிடாமல் அமைதியாய் கேட்டுக்கொண்டான்.

"இன்னிக்கு மதியம்தான் தைரியமா பேசி அனுப்பினேன். அதுக்குள்ள இப்படி... ம்ப்ச்! கஷ்டமா இருக்கு."



"இப்ப அந்தப் பொண்ணோட உடல் நிலை எப்படி இருக்கு?"

"கட்டாயம் முழு ஓய்வு எடுக்கணும்னு டாக்டர்கள் சொல்லி இருக்காங்க. திரும்பவும் வலி வரலைன்னா பயமில்லை."

"சரி, நீங்க பத்திரமா பார்த்துக்கங்க. அவனை நான் கண்டுபிடிக்கிறேன்."

"சார்?"- அன்பரசியின் முகம் மலர்ந்தது.

"அந்தப் பொண்ணு சொன்னதை வெச்சுப் பார்த்தா, அவன் இந்த பகுதியிலதான் எங்கேயோ இருக்கான்னு தெரியுது. அப்படின்னா அவனை கண்டுபிடிக்கிறது ஒண்ணும் பெரிய சிரமமில்லை."

"ஓ... தேங்க்யூ சார்! நானே இது விஷயமா உங்ககிட்ட உதவி கேட்கணும்னு இருந்தேன். நல்லவேளை... உங்களை நேர்ல பார்க்க வாய்ப்பு கிடைச்சிருக்கு" என்றவளைப் பார்த்து வியப்பாய் புருவம் உயர்த்தினான்.

"ஆச்சரியமா இருக்கு."

"எது சார்?"

"நீங்க என்னிடம் உதவி கேட்கணும்னு நினைச்சது."

"அது... உங்களை நேர்ல பார்த்தா கேட்கலாம்னு..."

"பரவாயில்ல... எந்த வழியிலாவது நன்றி. இப்ப அந்த போட்டோ உங்ககிட்டதானே இருக்கு?"

"ஆமா சார்."

"எங்கிட்ட ஒண்ணு கொடுங்க. நான் அதை எல்லா ஸ்டேஷனுக்கும் அனுப்பி, அவனை உடனடியாக கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுறேன்."

"ரொம்ப நன்றி சார்" என்றவாறே தோளில் கிடந்த கைப்பையை எடுத்து அவசரமாய்த் திறந்தவள், ஏமாற்றமாய் நிமிர்ந்தாள்.

"என்னாச்சு?"

"ஸாரி சார். வீட்ல எல்லார்கிட்டேயும் போட்டோவைக் காட்டிட்டு இருக்கும்போதுதான், ஆஸ்பத்திரியில இருந்து போன் வந்தது. அந்த பதற்றத்தில... வீட்லயே வெச்சிட்டு வந்துட்டேன்."

"அது சரி. உங்களுக்கு இனிமே எப்ப வேலை?"

"நாளைக்கு காலையில."

"சரி. இப்ப வீட்டுக்கு போங்க. நாளைக்கு வரும்போது மறக்காம போட்டோவை கொண்டு வாங்க."

"வந்து... உங்களை எங்கே பார்க்கிறது?"

"ஸ்டேஷன்ல பாருங்க."

"ஐயோ"- பதற்றமாய் மறுத்தாள் அன்பரசி.

"ஏன்... ஸ்டேஷன்னா பயமா?"

"ஸாரி சார். எனக்கு அங்கெல்லாம் வந்து பழக்கமில்ல. அதோட நான் சாந்திக்காக இந்த 'ரிஸ்க்' எடுக்கறதே அம்மாவுக்கு பிடிக்கல. இதுல போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் வந்தா... அவ்வளவுதான்"- பயமாய் கண்களை விரித்துச் சொன்னவளைப் பார்த்து மெலிதாய் புன்னகைத்தான்.

"சரி... சரி. நானே ஆஸ்பத்திரியில வந்து வாங்கிக்கிறேன். சரியா?"

"இங்கேயா!"

"ம். அந்தப் பொண்ணுகிட்டயும் கொஞ்சம் விசாரிக்கணும். அதனால பத்து, பதினொரு மணிக்கெல்லாம் வர்றேன்."

"சரி சார்"- உற்சாகமாய் தலையசைத்தாள்.

"சரி, மணியாகிப் போச்சே. இப்ப வீட்டுக்கு எப்படிப் போவீங்க?"

"ஆட்டோவுலதான்."

"ஆட்டோவுல... தனியாவா போவீங்க?"

"இல்லையே! என் தம்பி வந்திருக்கான்" என்றவளுக்கு அப்போதுதான் கோபியின் நினைவு வர, அவசரமாய் அவனைவிட்டு விலகி, பார்வையை சுழற்றியவாறே தம்பியைத் தேடினாள். இளமாறனும் அவளுடனே வந்தான்.

"என்னாச்சு... யாரைத் தேடுறீங்க?"

"அது... எங்கூட என் தம்பியும் வந்தான். ஆட்டோவை அனுப்பச் சொல்லிட்டு நான் பாட்டுக்கு உள்ளே வந்துட்டேன். அதான்..." என்றவாறே படிக்கட்டில் இறங்க, அவனும் இறங்கினான்.

"தம்பின்னா... ஒரு பத்து வயசு இருக்குமா?"- என்றவனை முறைத்தாள்.

"என்ன... கிண்டலா?.அவன் 'காலேஜ்' படிக்கிறான்."

"அப்போ பயப்பட வேண்டாம். எங்கேயாவது உட்கார்ந்து உங்களுக்காக காத்துக்கிட்டிருப்பார்."

"ச்சே! என்னைத் தேடி எங்கெல்லாம் அலையுறானோ... தெரியலையே. கோபி... கோபி!" குரல் கொடுத்தவாறே கீழ்த்தளம் முழுக்கத் தேடினாள்.

"அன்பரசி! உங்கள் வீட்டில் மொத்தம் எத்தனை பேர்?"

"ஏன் சார்! இப்ப இந்த விசாரணை தேவையா?"

"இல்ல... ரொம்ப பதற்றமா இருக்கீங்களே! அதான் கொஞ்சம்



'ரிலாக்ஸா' பேசலாம்னு..."

"வேண்டாம். நீங்க கிளம்புங்க. நான் என் தம்பியைக் கூட்டிட்டு வீட்டுக்குப் போயிடுவேன்."

"உங்க தம்பி எப்படி இருப்பான்?"

"ஏன் கேட்கிறீங்க?"

"சொன்னால் நானும் கூடச் சேர்ந்து தேடுவேன்."

"உங்க உதவிக்கு ரொம்ப நன்றி சார். உங்களுக்கு எவ்வளவோ வேலை இருக்கும். நீங்க புறப்படுங்க."

"காணாமல் போனவங்களை கண்டுபிடிக்கறதுகூட எங்க வேலைதான்."

"என்ன?"

"உங்க தம்பி கொஞ்சம் ஒல்லியா- உயரமா- மிடுக்கா இருப்பானா?"

"ஆ...மா"- வியப்பாய் தலையாட்டினாள்.

"ஊதா நிற சட்டை போட்டிருந்தானா?"

"ம்..."

"அதோ அந்த சிமெண்டு இருக்கையில உங்களுக்காக காத்திட்டிருக்கார் பாருங்க..." என அவன் கைகாட்ட, ஆச்சரியமாய் முகம் மலர்ந்தாள்.

## 8

*நீ மட்டும் என் கனவில்*
*வருவதாக இருந்தால்- என்*
*வாழ்நாள் முழுவதும் கண்களை*
*மூடிக்கொண்டே இருப்பேன்!*

இளமாறன் கைகாட்டிய திசையில் திரும்பினாள் அன்பரசி. மருத்துவனையில் வெளிவளாகத்தில் போடப்பட்டிருந்த சிமெண்டு இருக்கை ஒன்றில் கைகளைக் கட்டிக்கொண்டு சாய்ந்து அமர்ந்திருந்தான் கோபி கிருஷ்ணன்.

சுவரோரமாய் நின்ற கம்பத்தின் குழல்விளக்கு ஒளி விழுந்த பகுதியைத் தவிர மற்ற இடங்களில் இருள் சூழ்ந்திருக்க, ஆள் நடமாட்டமின்றி அமைதியாய் இருந்தது சூழல்.

"கோபி" குரல் கொடுத்தவாறே தம்பியை நெருங்க, அவன் எழுந்தான்.

"வாக்கா! அந்த 'பேஷண்ட்' எப்படி இருக்காங்க?"

"சிகிச்சை பண்ணின பிறகு பரவாயில்ல. ஸாரிடா! நான் உன்னை கூப்பிடாம மேலே போயிட்டேன்."

"பரவாயில்லக்கா. வேலைதான் முதலில்..."

"ஆமாண்டா! அப்ப இருந்த பதற்றத்தில..."

"ஹலோ! நடுசாமம் ஆகிப் போச்சு. ரெண்டு பேரும் இப்படியே உட்கார்ந்து பேசிட்டு இருக்கப் போறீங்களா... வீட்டுக்குப் போக வேண்டாம்?"- இளமாறன் சற்றே மிரட்டலாய்க் கேட்க, இருவரும் திரும்பினர்.

போலீஸ் உடையில் நின்றவனைக் கண்டதும், முகம் மாறினான் கோபி.

"அக்கா! இது... யாரு?"- மெதுவாகவே கேட்டான்.

ஆனாலும், காக்கி காதில் விழாமல் இருக்குமா?

"ஹலோ கோபி! நான் இளமாறன். இன்ஸ்பெக்டர்" என அவனது கையைப் பற்றி குலுக்கினான். கோபியின் முகம் பளிச்சென மலர்ந்தது.

"சார்... நீங்களா? என்ன ஆச்சர்யம்? ஐயோ! உங்களை இவ்வளவு பக்கத்துல பார்ப்பேன்னு நினைச்சுக்கூடப் பார்க்கல. நன்றி சார்" என அவனது கைகளை அழுத்தமாய் பற்றிக்கொண்டான்.

"என்னைத் தெரியுமா உனக்கு?"

"என்ன சார் இப்படிக் கேட்கிறீங்க? நான் உங்க ரசிகன்... தீவிர ரசிகன்."

"ஏய்... என்னப்பா! நான் ஒன்றும் சினிமா நட்சத்திரம் இல்ல."

"நீங்க நிஜ நட்சத்திரம் சார். உங்க துணிச்சலைப் பார்த்து, எங்க நண்பர்கள் எல்லாரும் உங்க ரசிகர்கள் ஆகிட்டோம்."

"என்னை எங்கே பார்த்தீங்க?"

"சார்! போன மாதம் எங்க காலேஜ் ரோட்ல ஒரு கலாட்டா நடந்ததே! ஏதோ கண்டன ஊர்வலம்னு தண்ணி அடிச்சுட்டு அடிதடி பண்ணிட்டு இருந்தாங்களே!"

"ஓ! பீச் ரோட்ல..."

"ஆமா சார்! அப்ப வந்து எல்லாரையும் பின்னி எடுத்தீங்க பாருங்க. சூப்பர் சார். அதுவரைக்கும் நான் வக்கீல் ஆகணும்னுதான்



ஆசைப்பட்டேன். உங்களைப் பார்த்தபிறகு போலீசாத்தான் போகணும்னு முடிவே பண்ணிட்டேன்."

"கோபி! அப்ப நீ சொன்ன 'ஹீரோ' இவர்தானா?"

"ஆமாங்க்கா! நானும் இவரை மாதிரி போலீசாகணும்னு ஆசைப்படுறேன்."

"அப்போ எனக்கு போட்டியா இன்னொரு அதிகாரி உருவாகிறார்."

"சேச்சே! போட்டியா இல்ல சார். உங்க 'ஜெராக்ஸா' உருவாகணும்."

"குட்... உன் உயரம் ஓ.கே.! உடம்பைத்தான் கொஞ்சம் தேத்திக்கணும். நல்லா முட்டையும், மீனும் சாப்பிடு. காலையில எழுந்து உடற்பயிற்சி பண்ணு. 'ஜாகிங்' போ. படிப்போட சேர்ந்து உடம்பையும் 'டெவலப்' பண்ணு."

"கண்டிப்பா சார்."

"அப்புறம்..."

"ம். எங்களைச் சொல்லிட்டு இப்ப நீங்க ரெண்டு பேரும் பேசிட்டு நிற்கிறீங்களா? எப்போ வீட்டுக்கு போறதா உத்தேசம்?"- அன்பரசி இடுப்பில் கை ஊன்றிக்கொண்டே மிரட்ட, இருவரும் போலியாய் பயந்தனர்.

"கோபி... வா! மிச்சத்தை ஆட்டோவுல போகும்போது பேசுவோம். போகலாமா?"

"சார்! நீங்களும் எங்கக்கூடவா வர்றீங்க?"

"ஆமா! உங்களை எப்படி தனியா அனுப்புறது? 'கமான்... லெட்ஸ் கோ' " என முன்னே நடக்க, அவனைப் பின்தொடர்ந்து கொண்டே தயக்கமாய்க் கேட்டாள்.

"உங்களுக்கு எதுக்கு சார் வீண் சிரமம்? நாங்க..."

"நான் சிரமம்னு சொல்லவே இல்லையே!"

"அதுக்கில்ல. இருந்தாலும்..."

"அன்பு! நீங்க ஏன் தயங்குறீங்க? நாம ஒண்ணும் ஜீப்ல போகல. ஆட்டோவுலதான் போறோம். அதனால யாரும், எதுவும் நினைக்க மாட்டாங்க."

"அப்போ உங்க ஜீப்?"

"அதை அப்பவே அனுப்பிட்டேனே! எங்கூட வந்தவங்க எடுத்துட்டு போயிட்டாங்க" என்றவாறே மருத்துவமனையைவிட்டு வெளியேறி

வரிசையாய் நின்ற ஆட்டோவை நெருங்கினான்.

"கோபி."

"சார்..."

"உங்க வீடு எங்கே இருக்கு?"

"டி.வி.எஸ். நகர் ரெண்டாவது குறுக்குத் தெருவுல இருக்கு."

"ஓ.கே." என்றவாறு ஆட்டோவை நெருங்கி குரல் கொடுத்தான். உள்ளே தூங்கிக்கொண்டிருந்த டிரைவர் சட்டென விழித்துக்கொண்டான். சீருடையைக் கண்டதும் பவ்வியமாய் கீழே இறங்கினான்.

"சார்."

"டி.வி.எஸ். நகர் போகணும். ஆட்டோ வருமா?"

"போலாம் சார். உட்காருங்க" என- கதவைத் திறந்துவிட, இருவரையும் ஏறச் சொல்லிவிட்டு டிரைவர் அருகே அமர்ந்துகொண்டான்.

ஆட்டோ உறுமிக்கொண்டு புறப்பட... இளமாறனும், கோபியும் விட்ட இடத்தில் இருந்து தங்கள் பேச்சைத் தொடர்ந்தனர். தம்பியின் ஆர்வமான கேள்விகளுக்கு சற்றும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டே வந்தவனை லயிப்போடு பார்த்துக்கொண்டே இருந்தாள் அன்பரசி.

சாலையில் கடந்து செல்லும் வாகனங்களும், சலையோர விளக்குக் கம்பங்களும் மாறி மாறி ஒளி வீச, அவனது முகம் வர்ணஜாலமாய் தெரிந்தது. கோபியிடம் பேசுவதற்கு வாகாய் அவன் பின்பக்கம் திரும்பியவாறே அமர்ந்திருக்க, அன்பரசி இருக்கையில் சாய்ந்தவாறே ரசனையில் ஆழ்ந்திருந்தாள்.

அவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டே... அவனைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது. இமைக்காமல் அவள் பார்த்துக்கொண்டிருக்க, புன்னகையோடு கோபியைப் பார்த்தே பேசினான் இளமாறன்.

தங்கள் வீடு வந்து ஆட்டோ நின்ற பிறகும்கூட அன்பரசி அசையாமல் அமர்ந்திருக்க, அவளது முகத்தின் முன்னே சொடுக்கிட்டான். திடுக்கிட்டு நிமிர்ந்தாள். கோபி இறங்கி இருந்தான்.

"ஹலோ! என்ன... தூக்கமா?"

"இ... இல்லையே!"

"உங்க வீடு வந்தாச்சு?"

"ஓ... ஸாரி! ஏதோ... நினைப்புல..."

"என்னோட நினைப்புலயா?" அவன் மெல்லிய குரலில் கேட்க, திடுக்கென நிமிர்ந்தாள்.



"எ...ன்...ன?"

"போலீஸ்காரனுக்கு முதுகுலகூட கண் இருக்கும்."

"என்ன சொல்றீங்க...?"– திணறினாள்.

"ஆட்டோவுல ஏறினதுல இருந்து நீங்க எதைப் பார்த்தீங்க... என்ன நினைச்சீங்கன்னு சொல்லட்டுமா?"

"அக்கா! இன்னும் என்ன பண்ற?"– தம்பி குறுக்கிட்டான்.

"இதோ... வந்துட்டேன்."

"ஓ.கே. பை. நாளைக்கு காலையில பார்ப்போம். அப்ப இதைப் பத்தி பேசலாம்"– அவன் அதே மெல்லிய குரலில் சொல்ல, பதில் பேசாமல் வெலவெலத்துப் போனவளாய் இறங்கினாள்.

"சார்! இவ்வளவு தூரம் வந்திட்டீங்க. வீட்டுக்கு வந்துட்டு போங்களேன்" கோபி தயக்கமாய் அழைத்தான்.

"இல்ல கோபி! இப்படி நேரம் கெட்ட நேரத்துல வர்றது நல்லா இருக்காது. இன்னொரு நாள் பகல்ல வர்றேன்."

"வருவீங்களா சார்?"

"கண்டிப்பா. உங்க அக்கா ஓ.கே. சொன்னா வருவேன்."

"என்ன?"– வெடுக்கெனக் கேட்டாள் அன்பரசி.

"நீங்க கூப்பிட்டா வருவேன்னு சொன்னேன்."

"அக்கா! நீயும் கூப்பிடுக்கா."

"சும்மா இருடா. நேரமாகுது. அவர் போகட்டும்! நீ போய் 'கேட்'டைத் திற."

"போக்கா! உனக்கு 'மேனர்ஸே' தெரியல. சார்! கண்டிப்பா எங்க வீட்டுக்கு வரணும்.

"கண்டிப்பா வர்றேன். பை."

"பை சார்."

"அன்பு! மறந்திடாதீங்க."

"என்ன?"

"அதான்... அந்த போட்டோவை... நாளைக்கு காலையில வருவேன்."

"ம்...ம்."

"வரட்டுமா?"

"ம்."

"கொஞ்சம் சிரிக்கலாமே. பை. குட் நைட்" என்றவன், டிரைவரிடம்

தலையசைக்க... ஆட்டோ புறப்பட்டுச் சென்றது. அது அரை வட்டமடித்துத் திரும்பும் வரை நின்றவள், அவன் புன்னகையோடு கையசைக்க, தானும் புன்னகைத்தாள்.

ஆட்டோ கண்ணைவிட்டு மறையும் வரை நின்றிருந்தவள், அன்னையின் குரல் கேட்ட பிறகே இயல்புக்கு வந்தாள். அனைவரும் விழித்தே இருக்க, அவர்கள் கேட்ட கேள்விக்கு கடனே என்று பதில் அளித்துவிட்டு... தன் அறைக்குள் நுழைந்து படுக்கையில் சரிந்தாள்.

கண்கள் மூட மறுத்தன. உடல் முழுக்க களைத்துப் போயிருந்தும், உறங்க தோன்றவில்லை. கண்களுக்குள் இளமாறனின் உருவம் அழுத்தமாய் பதிந்து போயிருந்தது.

இனம்புரியாத உணர்வு ஆட்டிப்படைக்கத் தொடங்கியது. அவனது புன்னகை விடாமல் இம்சித்துக்கொண்டிருந்தது. அவனுடைய மெல்லிய குரல், காதில் ஒலித்து மடல்களை சிலிர்க்க வைத்தது.

'நாளைக்கு பார்க்கலாம்' என்ற வார்த்தை தேனாய் பாய்ந்தது. உறங்க மனமின்றி எழுந்து காலைக் கட்டிக்கொண்டு படுக்கையில் அமர்ந்தாள்.

'எப்போது விடியும்? எப்போது அவனை மீண்டும் பார்ப்போம்?' என மனம் ஏங்கத் தொடங்கியது.

விடிய விடிய விழித்திருந்து... விடிந்ததும் முதல் ஆளாய் எழுந்து குளித்து– வேலைகளைக் கவனித்து– ஏழு மணிக்கே தயாரான மகளை வியப்பாய் ஏறிட்டாள் அம்பிகை.

"என்னம்மா! ஒன்பது மணிக்கு போறதுக்கு இப்பவே கிளம்பி நிக்கிற?"

"இல்லம்மா! இன்னிக்கு சீக்கிரம் போகணும்."

"ஏன்?"

"அது... வந்து... நேத்து சாந்திகிட்ட எதுவும் பேச முடியல. இப்ப கண் விழிச்சிருப்பா. முதல்ல அவளைப் பார்த்து பேசிட்டு, மத்த வேலையைக் கவனிக்கணும்! அதான்."

"சரி! சாப்பிடு. தோசை வார்த்துத் தரட்டுமா?"

"இல்லம்மா! சாப்பிட நேரமில்லை. நான் கிளம்புறேன்."

"ஏய்! அப்பா ரெடியாக வேண்டாமா? இப்பத்தான் குளிக்க போயிருக்காங்க."

"பரவாயில்லம்மா. இன்னிக்கு பஸ்ல போயிடுறேன்."

"சரி! சாப்பிட்டுட்டாவது போயேன்."



"'கேண்டீன்'ல பார்த்துக்கறேன். இப்பப் போனாத்தான் பஸ்ல கூட்டம் இல்லாம இருக்கும்மா. அப்பாகிட்ட சொல்லிடுங்க. பை" என்றவள், மறக்காமல் புகைப்படத்தைப் பத்திரப்படுத்திக்கொண்டே, தாயிடம் கையசைத்துவிட்டு வெளியேறினாள்.

**சா**ந்தியின் முகம் தெளிவாய் இருந்தது. அன்பரசி சொன்னவற்றைக் கேட்டு கைகூப்பினாள்.

"நன்றி நர்சம்மா. எனக்காக நீங்க ரொம்ப சிரமப்படுறீங்க! இதுக்கெல்லாம் நான் என்ன கைமாறு செய்யப்போறேன்?"

"இதுல என்ன இருக்கு சாந்தி? எப்படியோ நீ உம்புருஷன்கூட வாழ்ந்தாப் போதும்."

"ஏம்மா! என்னைப் பார்த்ததும் நின்னு ஒரு வார்த்தைக்கூட பேசாம போனானே... அவன் எப்படி என்னை ஏத்துக்குவான்?"

"ஏத்துக்கிட்டுதான் ஆகணும். உன்னை ஏமாத்திட்டு, அவன் மட்டும் தப்பிக்கலாமா? கடைசி வரை உன்கூட வாழ்ந்துதான் ஆகணும். உன் குழந்தைக்கு தகப்பனா இருக்கணும்."

"அந்த போலீஸ்காரர் எப்படியும் கண்டுபிடிச்சிடுவாராம்மா?"

"கண்டிப்பா! போட்டோவைக் கேட்டார். கொண்டு வந்திருக்கேன். இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவார். உன்கிட்டக்கூட ஏதோ விசாரிக்கணும்னு சொன்னார்.

வந்து கேட்டா அவனைப் பத்தி என்னென்ன தெரியுமோ... எல்லாத்தையும் சொல்லிடு. அப்பத்தான் கண்டுபிடிக்க சுலபமா இருக்கும்."

"சரிங்கம்மா."

"நீ நல்லா ஓய்வெடு. படுக்கையைவிட்டு அசையாதே! 'பேஷண்ட்' வர ஆரம்பிச்சிருப்பாங்க. நான் போகட்டுமா?"

"சரிங்கம்மா."

"அப்புறமா வந்து பார்க்கிறேன்" என்றவாறு தன் பிரிவுக்குச் சென்றாள். காலையிலேயே பல நோயாளிகள் வந்து, வரிசையில் காத்திருந்தனர்.

மருத்துவரின் அறையை அடைந்து– பார்க்க வேண்டிய நோயாளிகளின் மருத்துவ அறிக்கையை எடுத்து வைத்துக்கொண்டு காத்திருந்தாள். மருத்துவர் வந்ததும் பணி ஆரம்பமாயிற்று.

வருகிற நோயாளிகளின் கையிலிருந்த மருந்துச் சீட்டை வாங்கி, அதில் கிறுக்கி இருந்த மாத்திரைகளைத் தேடித் தருவதும், ஊசி போடுவதும், மருந்து வைத்துக் கட்டுவதுமாய் இடைவெளியின்றி

வேலை நடந்துகொண்டிருந்தாலும், கண்கள் அவ்வப்போது வாசலை பார்த்தன.

மணி பத்தாகி, பதினொன்றாகி... மதிய உணவு வேளையை அடைந்த பிறகும் அவன் வரவே இல்லை. 'என்ன ஆயிற்று...? ஏன் வரவில்லை! எதுவும் வேலையாய் இருந்திருக்கும். மாலைக்குள் வந்துவிடுவான்' என தன்னையே தேற்றிக்கொண்டபோதும் மனம் ஏமாற்றமாய் சுருங்கியது.

மாலையிலும் கண்கள் அவனையே தேடி வாட, இருட்டிய பிறகும் அவன் வரவே இல்லை. இரவுப் பணிக்கான நர்சிடம் பொறுப்புகளை நிதானமாகவே ஒப்படைத்துவிட்டு, வழக்கத்தைவிடவும் தாமதமாகவே மருத்துவமனையைவிட்டு அவள் வெளியேற- இறுதி வரை அவன் வரவே இல்லை!

## 9

*ஒவ்வொரு நொடியும் உன்னை*
*நினைத்துக்கொண்டிருக்கிறேன்...*
*ஒரு நொடியாவது நீ என்னை*
*நினைப்பாயா என்று!*

முழுதாய் இரண்டு நாட்கள் எதிர்பார்த்து, அவனைக் காணாமல் தொய்ந்து போனாள் அன்பரசி. சில முறையே பார்த்த ஒருவனை எண்ணி இப்படி பைத்தியம் போல் ஆகிவிட்டதை நினைத்து தன்னையே கடிந்துகொண்டாள்.

கண்முன்னே ஒருத்தி பாடமாய் இருந்தும், இந்தப் பாழும் மனம் தடுமாறிவிட்டதே! 'இனி அவனைப் பார்க்கவேகூடாது' என திடமாய் முடிவெத்து, அன்றைய தினம் விடுப்பு கேட்டுவிட்டு வீட்டில் இருந்தாள் அன்பரசி.

அம்பிகை கையில் பணத்தோடு மகளை நெருங்கினாள்.

"அன்பு! எதுவும் வேலையா இருக்கியா?"

"இல்லம்மா! சொல்லுங்க."

"இல்ல! பக்கத்து வீட்டு உமா பொண்ணுக்கு இன்னிக்கு பொறந்த நாளாம். சாயந்திரம் 'பார்ட்டி' வைக்கிறாங்களாம்."

"சரி."

"அதுக்கு போகணும். ஏதாவது ஒரு 'சிம்ப்ளான கிப்ட்' வாங்கிட்டு



வர்றியா?"

"எவ்வளவு பணத்துலம்மா?"

"ஒரு இரு நூறு ரூபாய்க்குள்ள பாரேன்."

"சரிம்மா!" என்றவாறே படித்துக்கொண்டிருந்த வார இதழை மூடி வைத்துவிட்டு எழுந்தாள். அணிந்திருந்த இரவு உடையை மாற்றிவிட்டு, தலையை பின்னலிட்டுக்கொண்டு புறப்பட்டாள்.

"கூட நாலு கடை ஏறினாலும் பரவாயில்ல. 'மெயின் ரோட்'டுக்குப் போய் நல்லதா பார்த்து வாங்கிட்டு வா."

"சரிம்மா!" என்றவாறு வீட்டைவிட்டு வெளியேறி மெதுவாய் நடக்க ஆரம்பித்தாள். பத்து நிமிட பயணம். பிரதான சாலையை அடைந்து, ஒரு குறிப்பிட்ட கடையை நோக்கிச் சென்றபோது கண்ணில்பட்டான் அவன்.

அன்பரசி ஒரு கணம் தன் கண்ணை நம்ப முடியாமல் மீண்டும் பார்த்தாள். இளமாறன்தான்! 'மப்டி'யில் நின்று கொண்டிருந்தான். இவள் செல்ல வேண்டிய கடை வாசலுக்கு அருகே 'பைக்'கை நிறுத்தி, அதன் மீது சாய்ந்துகொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் துள்ளிய மனதை தட்டி அடக்கினாள். காணாதவள் போல் பார்வையை வேறுபுறமாய் திருப்பிக்கொண்டு நடக்க, இளமாறன் அவளைக் கவனித்துவிட்டான்.

"ஹலோ... நர்சம்மா! இங்கே..." கைதட்டி அழைத்தவனைக் கடுப்பாய்ப் பார்த்தாள்.

"நான் என்ன ஆட்டோவா? கைதட்டிக் கூப்பிடுறதுக்கு...?"

"ஸாரி நர்சம்மா. ஆமா, வேலை நேரத்துல ஏது இவ்வளவு தூரம்?"

"ஏன்... நீங்க மட்டும் வேலை நேரத்துல 'ஷாப்பிங்' வரும்போது நாங்க வரக்கூடாதா?"

"நான் இன்னிக்கு லீவு" என்றான், புன்னகையோடு.

"நாங்களும்தான்" விரைப்பாய்ச் சொன்னவளைக் கண்டு அடக்கமாட்டாமல் சிரித்தான்.

"என்ன? மென்மையான நர்ஸ் மேடம், இன்னிக்கு ரொம்ப சூடா பேசுறாங்க? யார் மேல உள்ள கோபம்? எதற்காக இவ்வளவு வேகம்?"

"இதைக் கேட்கத்தான் கூப்பிட்டீங்களா? எனக்கு வேலை இருக்கு" என நடக்க முயன்றவளை, குரல் கொடுத்து தடுத்தான்.

"ஒரு நிமிஷம்!"

"என்ன?"

"காலையில வர்றேன்னு சொன்னவன், ரெண்டு நாளா வரலையே! ஏன்... எதுக்குன்னு கேட்போம்னு தோணிச்சா?"

"ஏன்... ஏன் கேட்கணும்? நீங்கதான் பெரிய போலீஸ் ஆபீசராச்சே.! உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். இதுல எங்க நினைப்பு வருமா?"

"வந்தது."

"எ...ன்...ன?"

"ரெண்டு நாளாவே உன் நினைப்பு மட்டும்தான் வந்தது. ஆனா, பேசத்தான் முடியல"– கைகளைக் கட்டிக்கொண்டு அவன் அடக்கமாக சொல்ல... திகைத்தாள்.

"ஏன்... என்னாச்சு?"– அவனை நேராய் பார்க்க முடியாமல் தடுமாறினாள்.

"ஒரு வழக்கு விஷயமா வெளியூர் போயிட்டு, இன்னிக்கு காலையிலதான் வந்தேன். வந்ததும், உன்னைப் பார்க்கத்தான் ஆஸ்பத்திரிக்குப் போனேன். நீ 'லீவு'ன்னு சொன்னாங்க. அதான் அந்தப் பொண்ணை மட்டும் பார்த்துட்டு வந்திட்டேன்."

"யாரு... சாந்தியையா?"

"ம்."

"வந்து... ஸாரி."

"எதுக்கு?"

"நீங்க வரலன்னதும்... கொஞ்சம் கோபமா பேசிட்டேன்."

"கொஞ்சம் இல்ல... நிறையவே. அப்பப்பா! கோபப்படும்போது இந்த முகத்தைப் பார்க்கணுமே! என்ன ஒரு சிடுசிடுப்பு."

"அதான் 'ஸாரி' சொல்லிட்டேனே!"

"சரி, இப்ப எங்கே போறீங்க?"

"சும்மா... பக்கத்து வீட்டு குழந்தைக்கு ஒரு 'கிப்ட்' வாங்கலாம்னு வந்தேன்."

"ரொம்ப நல்லதாப் போச்சு. இல்லேன்னா எனக்கு பைத்தியமே பிடிச்சிருக்கும்."

"ஏன்?"

"வெளியூர்ல இருந்துட்டு பார்க்காம இருந்தப்பவே ரொம்ப அவஸ்தைப்பட்டேன். இப்ப பக்கத்துல இருந்தும், பார்க்க முடியலைன்னா பைத்தியம் பிடிக்காதா?"

"யாரை?"



"ம்! எங்க பாட்டியை."

"உங்க பாட்டி மேலே அவ்வளவு பிரியமா?"

"நான் பிரியம் வெச்சு என்ன பிரயோஜனம்? எங்க பாட்டிக்கு எம் மனசு புரியலையே!"

அவன் கடுப்பாய்ச் சொல்ல, அவள் கலகலவென சிரித்தாள். அந்த சிரிப்பை ரசனையாய் பார்த்தான்.

"நன்றி."

"எதுக்கு?"

"சிரிச்சதுக்கு. சிரிக்கும்போது நீ... நீங்க ரொம்ப அழகு."

அவனது பாராட்டில் கன்னம் சிவந்தது. பேச்சை மாற்ற எண்ணியவாறே கேட்டாள்.

"ஆமா! நீங்க எங்கே இங்கே?"

"'ஷாப்பிங்'தான் வந்தோம்."

"பிறகு ஏன் வெளியே நிற்கிறீங்க?"

"நானும், என் தம்பியும் வந்தோம். தம்பி 'பர்சேஸ்' பண்ணிட்டு இருக்கான். எனக்கு இந்த 'ஷாப்பிங்'ல எல்லாம் ஆர்வம் கிடையாது. அதான் அப்படியே வெளியே நின்று வேடிக்கை பார்த்திட்டு இருக்கேன்."

"ஆமா! நீங்க ஏன் இன்னிக்கு லீவு?"

"அதுவா... எங்க வீட்ல விசேஷங்க."

"என்ன விசேஷம்?"

"பொண்ணு பார்க்கப் போறோம். இன்னிக்கு சாயங்காலம்."

அன்பரசியின் முகம் மாறியது. "பொ...ண்...ணா?"

"ஆமாங்க! நானும் வரணும்னு வீட்ல ரொம்ப 'கம்ப்பெல்' பண்ணினாங்க. அதான்..."

"ஓஹோ! மாப்பிள்ளையும் போகணுமில்ல. அதானே முறை"– ஏமாற்றமும், வருத்தமுமாய்ச் சொன்னவளைப் பார்த்து பெரிதாய் புன்னகைத்தான்.

"அதான் தம்பி போறானே!"

"எ...ன்...ன?"

"அவன்தானே மாப்பிள்ளை?" என்ற பதிலில் மேலும் அதிர்ந்தாள். 'ஐயோ! இவன் திருமணமானவனா? இவன் மீதா ஆசைப்பட்டேன்... கடவுளே!'

"என்ன அன்பு? அடிக்கடி இந்த முகம் பல விதமா மாறுது?"

"உ...ங்க... தம்பிக்கா பெண் பார்க்கப் போறீங்க!"

"ஆமா."

"அப்போ... உங்களுக்கு... கல்யாணம்..."

"எனக்கு கல்யாணத்துல எல்லாம் ஆர்வம் கிடையாதுங்க. நான் கட்டை பிரமச்சாரி"– அவன்





வார்த்தையில் பாலாய் கொதித்த மனம், பனியாய் உருகியது. லேசாய் துளிர்த்த கண்ணீரோடு புன்னகைத்தாள்.

"என்ன சார் சொல்றீங்க?"

"ஆமா! எனக்கு என் வேலைதான் 'பர்ஸ்ட் வொய்ப்'. அதுகூட குடும்பம் நடத்தவே நேரம் போதல. இதுல இன்னொரு கல்யாணம் வேணுமான்னு அதைப் பத்தி யோசிக்கிறதே இல்ல. அதனாலதான் எனக்காக பேசி வெச்சிருந்த என் மாமா பொண்ணை... இப்ப என் தம்பிக்கு முடிச்சிருக்கோம்."

"ஓ! அப்போ... நீங்க... கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லையா?"

"அப்படித்தான் முடிவு பண்ணி வெச்சிருந்தேன். ஆனா, இப்ப அந்த முடிவு ஆட்டம் கண்டுபோச்சு."

"அப்படின்னா?"

"ஆனானப்பட்ட விசுவாமித்திரரையே மேனகை மயக்கிடலையா? அதே மாதிரி ஒரு மேனகை, என் தவத்தையும் கலைச்சிடுவா போலிருக்கு."

"யா...ரு?"

"உனக்குத் தெரியாதா?"

"நீங்க... சொன்னாத்தானே தெரியும்" என்றாள் படபடப்பாய்.

"நிஜமாவே தெரியலையா?"

"ம்ஹூம்."

"சரி! தெரியாமலே இருக்கட்டும்" என்றான் கடுப்பாய்.

"கோபமா?"

"உனக்கு எப்போ தெரியுதோ அப்பத் தெரியட்டும். நாங்க இன்னிக்கு பொண்ணு பார்த்துட்டு வந்தபிறகு, யார்கிட்ட பேசணுமோ அவங்ககிட்ட பேசிக்கிறோம்."

"புரியலையே!"

"ஒரு சில விஷயங்கள் புரியாம இருக்கிறதுகூட நல்லதுதான்" என்றான் மர்மமாய்.

"சரி! நான் கிளம்பட்டுமா?"

"ஒரு விஷயத்தை மறந்திட்டீங்களே!"

"என்ன?"

"அந்த போட்டோ..."

"ஓ! ஸாரி சார். உங்ககிட்ட கொடுக்கிறதுக்காக என் கைப்பையிலேயே

வெச்சிருக்கேன்... ஒரு நிமிஷம்" என்றவாறு பையை திறக்க முயன்றவளின் பார்வை, அவன் நின்ற 'பைக்'கில் பதிய... துல்லியமாய் அதிர்ந்தாள்.

'பைக்'கின் முன் சிவப்பு நிற மண்டை ஓடு படம் வரையப்பட்டிருந்தது.

'அவர் 'பைக்'லகூட சிகப்பு கலர்ல மண்டை ஓடு படம் வரைஞ்சிருக்கும்'– சாந்தியின் குரல் இடற, திகைப்பாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"சார்! இ...இந்த... 'பைக்?' "

"எங்களதுதான்."

"உங்களோடதா?"– மனம் எரிதணலாய் தகித்தது.

"ஆமா! என் தம்பியோட 'பைக்'. ஏன் கேட்கிறீங்க?"

"வந்து... உங்க தம்பி... பேர்... என்னன்னு தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா. தம்பி பேர் மணிமாறன்"– அவன் இயல்பாய்ச்சொன்னதும், மனதில் குமுறிய எரிமலை சட்டென தணிந்தது. நிம்மதி மூச்சோடு புன்னகைத்தாள்.

"என்னாச்சு? ஏன் இந்த முகத்தில் இவ்வளவு குழப்பம்... கலக்கம்?"

"அது... வந்து சார்... சாந்தியோட புருஷன் 'பைக்'லகூட இந்த மாதிரி படம் வரைஞ்சிருக்கும்ன்னு எங்கிட்ட சொல்லியிருக்கா."

"ஓஹோ! அதனால... என் தம்பியா இருக்கும்னு..."

"சந்தேகப்படல. கேட்டு வெக்கலாமேன்னு..."

"தப்பு இல்ல. ஆமா! அவன் பேரு என்னவாம்?"

"நாகராஜன்."

"போட்டோவைக் கொடுங்க. பார்க்கலாம்" அவன் கேட்டதும், புகைப்படத்தை எடுத்து நீட்டினாள். அதே நேரம்–

"ஹலோ இளமாறன்... என்ன ஆச்சர்யம்? உன்னைப் பார்க்கிறதே குதிரைக் கொம்பா இருக்கே"– ஆர்ப்பாட்டமாய் இளமாறனின் முதுகில் தட்டினான் அவன் நண்பன் ராஜேஷ்.

"ஹாய்டா! எப்படி இருக்கே? பார்த்து ரொம்ப நாளாகுது."

இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டனர்.

"அப்புறம்... எப்படிடா இருக்கே?"

"நல்லா இருக்கேன். என்னடா... தொப்பையெல்லாம் போட்டிருக்கு?"

"டேய்! நாம ஒண்ணாத்தான் படிச்சோம். நான் இப்ப ரெண்டு புள்ளைக்கு அப்பா. நீ இன்னும் இளைஞனாகவே இருக்கே. எப்படா



கல்யாண சாப்பாடு போடப்போற?"

"ம்... போடணும். சீக்கிரமா போடணும்"– இளமாறன் வெட்கப் புன்னகையோடு அன்பரசியைப் பார்த்துக்கொண்டே சொல்ல, அவள் அவஸ்தையாய் நெளிந்தாள்.

"சார்... நான் கிளம்புறேனே!"

"யா! ஷ்யூர். நாம அப்புறமா சந்திப்போம்."

"ம்... போட்டோ?"

"கொடுங்க" வாங்கிக்கொண்டவன், அதைப் பார்ப்பதற்குள் ராஜேஷ் சீண்டினான்.

"டேய்! யாருடா இது? புதுசா இருக்கு!"

"அதுவா... தெரிஞ்சவங்க."

"தெரிஞ்சவங்கன்னா?"

"தெரிஞ்சவங்க. நோண்டாதே! சரி... ஏதாவது சாப்பிடலாமா?"

"இல்லடா! மனைவியோடு வந்திருக்கேன். அவ கார்ல காத்திட்டிருக்கா. உன்னைப் பார்த்ததும் வந்துட்டேன்."

"சரி! நீ போ. நானும் புறப்படுறேன்."

"சரிடா" அவன் கையசைத்துவிட்டு புறப்பட, இளமாறனின் கண்கள் அன்பரசியைத் தேடின. அவள் போய்விட்டிருந்தாள்.

சலிப்பாய் திரும்பியவன், தன் கையில் இருந்த புகைப்படம் நினைவு வர... அசுவாரசியமாய் அதைப் பார்த்தான், சட்டென இதயம் அதிர்ந்தது.

திடுக்கிட்டுப் போனவனாய் நிமிர்ந்து மீண்டும் பார்த்தான். காலையில் மருத்துவமனையில் பார்த்த அதே பெண். அழகாக இருந்தாள். கூடவே அவளுடைய தோளில் கை போட்டபடி நின்றிருந்தான் மணிமாறன்.

கையிலிருந்த புகைப்படம் அதிர்ந்தது. 'இவன் என் தம்பிதானா? நாகராஜன் என்றாளே? ஒருவேளை உருவ ஒற்றுமை உள்ளவர்களா? சேச்சே... அதெல்லாம் சினிமாவில் மட்டுமே சாத்தியம். இது மணிமாறன்தான்!

இந்த உடைகூட அவனுடையதுதான். அப்படியென்றால் குற்றவாளி தன்னுடைய தம்பிதான். தன் பெயரைக்கூட மாற்றி– ஒரு பெண்ணின் வாழ்க்கை அழித்தவன் என்றால், அவன் எவ்வளவு பெரிய ஏமாற்றுக்காரனாய் இருக்க வேண்டும்?

போலீஸ்காரன் வீட்டிலேயே திருடனா? உனக்குப் போய் திருமணம் செய்துவைக்க இருந்தேனே! வா... மொத்தமாய் விருந்து வைக்கிறேன்.

தாலி கட்டிய மனைவி, வயிற்றில் பிள்ளையோடு மருத்துவமனையில் உயிருக்கு போராடிக்கொண்டிருக்கிறாள். உனக்கு இன்னொரு திருமணமா? வாடா... வா!' பற்களைக் கடித்துக்கொண்டு தம்பியின் வருகைக்காக ஆத்திரமாய் காத்திருந்தான்.

## 10

*இரவும், பகலும் இருக்கும் வரை*
*உன் கனவும், நினைவும் மறையாது*
*என் உடலும், உயிரும்*
*இருக்கும் வரை- உனது*
*நினைவுகள் அழியாது!*

இரண்டு கைகளிலும் பெரிய பெரிய 'பாலித்தீன்' உறையோடு வெளியே வந்தான் மணிமாறன். 'பைக்'கோடு நின்றுகொண்டிருந்த இளமாறனை நெருங்கி புன்னகையோடு கேட்டான்.

"யாருண்ணா அது?"

"எது?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால ஏதோ ஒரு பெண்ணோட பேசிட்டு இருந்திங்களே?"- மணிமாறன் ஆர்வமாய்க் கேட்க, யோசனையாய் அவனை ஏறிட்டான்.

"நீ எப்பப் பார்த்தாய்?"

"மாடியில நின்னு 'பர்சேஸ்' பண்ணும்போது பார்த்தேன்."

" 'பர்சேஸ்' முடிஞ்சதா? வண்டியில ஏறு."

"இல்லண்ணா! இன்னும் 'ஷு' வாங்கல. இந்தக் கடையில எதுவும் பிடிக்கல."

"அப்ப பிறகு வாங்கிக்கலாம். வண்டியில ஏறு" என்றவாறே இருசக்கர வாகனத்தைக் கிளப்பினான்.

"ஒரு பத்து நிமிஷம் 'வெயிட்' பண்ணுண்ணா. இதோ இந்தக் கடையில போய் வாங்கிட்டு..."

"ஏறுன்னு சொன்னேன்"- இளமாறனின் குரலில் கடுமை கூடியிருக்க, மணிமாறனின் முகம் மாறியது. குழப்பமாய் பின் இருக்கையில் ஏறி அமர்ந்ததும், வண்டி சீறிப் புறப்பட்டது.

"அண்ணே..."



"ம்..."

"எதுவும் பிரச்சினையா?"

"ஏன் கேட்கிற?"

"இல்ல... உம் முகமே சரியில்லையே! யார் அவங்க? உங்கிட்ட என்ன பேசினாங்க?"

"நிறைய பேசினாங்க. வீட்டுக்கு வா. எல்லாம் விபரமா சொல்றேன்"- அதோடு பேச்சை நிறுத்திட்டு, வழக்கத்தைவிடவும் வேகமாய் 'பைக்'கை விரட்ட... மணிமாறனுக்குள் ஏதோ நிரடியது.

'யார் அவள்... என்ன பேசி இருப்பாள்? அண்ணனின் முகமோ... பேச்சோ சரியில்லையே! என்ன நடந்திருக்கும்? ஒருவேளை வந்தவள்... தன்னைப் பற்றி எதுவும் போட்டுக் கொடுத்திருப்பாளோ? ச்சே! அவள் முகம்கூட சரியாய் தெரியாமல் போயிற்றே...'

"இறங்கு"- இளமாறனின் மிரட்டும் தொனியில் திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

'அட... வீடு வந்துவிட்டதா?'

கைகளில் பொருள்களோடு மணிமாறன் வீட்டுக்குள் நுழைய- 'பைக்'கை பூட்டிவிட்டு உள்ளே போனதும், முதல் வேலையாய் கதவைப் பூட்டினான் இளமாறன்.

மகன்களின் வருகையை உணர்ந்து வெளியே வந்த மீனாட்சி, மூத்தவனின் செயல்கண்டு முகம் மாறினாள்.

"என்னப்பா! கதவை ஏன் பூட்டின?"

"காரணமாத்தான். அப்பா எங்கேம்மா?"

"உங்க மாமாகிட்ட போன்ல பேசிட்டு இருக்காங்க. சாயந்தரம் பொண்ணு பார்க்கப் போறதைப் பத்தி..."

"அப்பா... அப்பா!"- மகனின் உரத்த குரலில் காதில் செல்போனோடு வந்த கங்காதரனிடம் இருந்து போனை வாங்கி 'கட்' பண்ணினான்.

"ஏய்! மாமா 'லைன்'ல இருக்காருப்பா."

"இங்கே அதைவிட முக்கியமான விஷயம் பேச வேண்டியது இருக்கு. மணி! வெளியே வா"- மணிமாறனின் அறையை நெருங்கிக் குரல் கொடுத்தான்.

மகனின் செய்கையைக் கண்டு குழப்பமாய் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

"மாறா! என்னப்பா... எதுவும் பிரச்சினையா?"

"ஒரு நிமிஷம்ப்பா! மணி, வர்றியா... இல்லையா?"

"இதோ வர்றேன். ஏண்ணா 'பாத்ரூம்'கூட போக விடமாட்டியா?

அப்படியென்ன தலை போகுற அவசரம்?"

சட்டையைக் கழற்றிவிட்டு, பனியனோடு வெளியே வந்தான் மணிமாறன்.

"மணி! உனக்கு சாந்தின்னு யாரையாவது தெரியுமா?" சுற்றி வளைக்காமல் நேரடியாய் கேட்ட கேள்வியில் மணிமாறனின் முகம் வெளிறியது. விரிந்த கண்களில் பயம் தெரிய, இளமாறனின் நரம்புகள் முறுக்கேறின.

ஒரு கணம்தான்... அடுத்த கணமே இயல்பானான் மணிமாறன். அலட்சியமான புன்னகையோடு தோளைக் குலுக்கினான்.

"சாந்தியா? அந்தப் பேர்ல... யாரையும் தெரியாதே!"

"அப்படியா? அப்போ நாகராஜன்னு யாரையாவது தெரியுமா?"

இந்தக் கேள்வியில் அடிவயிறு கலங்கிப்போனது. 'அண்ணனுக்கு ஏதோ தெரிந்துவிட்டது. இனி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்'- தனக்குள்ளே சுதாரித்துக் கொண்டிருக்கையில் இளமாறன் மீண்டும் கேட்டான்.

"சொல்லுடா! நாகராஜன்னு யாரையும் தெரியுமா?"

"அண்ணே... உனக்கு என்னாச்சி? முகத்தைக் கழுவிட்டு இருந்தவனைக் கூப்பிட்டு சம்பந்தமில்லாத கேள்வியெல்லாம் கேட்டுட்டு இருக்கே?"

"மணி! கேட்டதற்கு ஒழுங்கா பதிலைச் சொல்லு."

"நீ சொல்ற பேரை நான் கேள்விப்பட்டதில்லை."

"எனக்கு பொய் சொல்றது பிடிக்காது."

"எப்பா மாறா! என்னய்யா ஆச்சு? ஒரே குழப்பமா இருக்கே..."

"இப்ப எல்லாம் தெளிவாகிடும்ப்பா" என்றவன் தன் சட்டைப் பையிலிருந்த படத்தை எடுத்துத் தம்பியின் முகத்தின் முன்னே காட்டினான்.

"இப்ப... சாந்தி யாருன்னு தெரிஞ்சிருக்கணுமே!"

தன் முன் நீட்டப்பட்ட புகைப்படத்தைப் பார்த்து வெலவெலத்துப் போனான்.

'இதை எப்படி மறந்தேன்?'- அவசரமாய் மூளையைத் தட்டி யோசித்தவனின் சட்டையைக் கொத்தாய் பற்றி தன்புறமாய் இழுத்தான் இளமாறன்.

"என்னடா முழிக்கிற? 'இது நான் இல்ல. யாரோ 'கிராபிக்ஸ்' பண்ணி இருக்காங்க'ன்னு முட்டாள்தனமா உளறினே... பல்லு அத்தனையும் கொட்டிடும்... ராஸ்கல்."



மீனாட்சி பதறினாள். "ஐயோ! என்ன நடக்குது இங்கே? மணி... என்னடா தப்பு பண்ணின?"

"நான் எந்தத் தப்பும் பண்ணலம்மா. அண்ணன் சும்மா என்னை மிரட்டுது"- சொல்லி முடிப்பதற்குள் பளாரென அறைந்தான் இளமாறன். மூவரும் அதிர்ந்து போய் நிற்க, தம்பியை இழுத்தான்.

"நீ எந்தத் தப்பும் பண்ணல?"

"இல்ல... இல்ல."

"அப்ப இவ யாரு?"

"என்னைக் கேட்டால்...? நான் இவளைப் பார்த்ததுகூட கிடையாது" என்றவனை மீண்டும் அறைந்தான்.

"இப்ப ஏன் சும்மா என்னை அடிக்கிற?" என எகிறியவனின் கன்னத்தில் மறுபடியும் அடி.

"செய்யுற தப்பெல்லாம் செய்துட்டு... எங்கிட்டயே முறைக்கிறியா? தோலை உரிச்சிடுவேன் ராஸ்கல்" என்றவனிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு தாயை நெருங்கினான் மணிமாறன்.

"அம்மா! உங்க புள்ள போலீஸ்காரன்னா... அவன் அதிகாரத்தையெல்லாம் ஸ்டேஷனோட வெச்சுக்கச் சொல்லுங்க. என்கிட்ட வேண்டாம்."

"என்னடா சொன்ன?"- எனப் பாய்ந்தவனை கைநீட்டி தடுத்தாள் மீனாட்சி.

"மாறா! என்னய்யா இது? தோளுக்கு மேலே வளர்ந்த தம்பியை கைநீட்டி அடிக்கிற அளவு என்ன நடந்துப்போச்சு?"

"அம்மா! அவன் என்ன காரியம் பண்ணி இருக்கான் தெரியுமா?"

"என்ன பண்ணினான்?"

"ஒரு பொண்ணை ஏமாத்தி கல்யாணம் பண்ணி, அவ வயித்தில குழந்தையைக் கொடுத்திருக்கான்."

"எ...ன்...ன?"- பெற்றவர்கள் அதிர்ச்சியாய் இளைய மகனைப் பார்க்க, அலட்சியமாய் சீறினான்.

"நீ பார்த்தியா? நான் அவளை ஏமாத்தினதுக்கு என்ன சாட்சி இருக்கு?"

"கையிலே வெச்சிருக்கேனே இந்த படம். இதைவிட வேறென்ன சாட்சி வேணும்?"

"போட்டோவுல என்ன அவ கழுத்துல தாலி கட்டிட்டு இருக்கேனா...? இல்ல, குடும்பம் நடத்திக்கிட்டு இருக்கேனா? எதை வெச்சு அவளை

ஏமாத்தினேன்னு பழி போடுற?"

"டேய்! ரொம்ப சாமர்த்தியமா பேசுறதா நினைச்சு தப்புக்கு மேல தப்பு பண்ணாதே! பேசாம உண்மையை ஒத்துக்க. அந்தப் பொண்ணு இப்ப உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரியில இருக்கா. வா! நேரில் போய்ப் பார்த்து, செய்த தப்புக்கு மன்னிப்புக் கேட்டு அவளை ஏத்துக்க. அதுதான் உனக்கும், நம்ம குடும்பத்துக்கும் நல்லது."

"தப்பே பண்ணலைன்னு சொல்றேன். நான் ஏன் மன்னிப்பு கேட்கணும்? இவளுக்கும், எனக்கும் சம்பந்தமே கிடையாது."

"சம்பந்தம் இல்லாமலா இவ தோள் மேல கை போட்டு 'போஸ்' கொடுக்கிற?"– இளமாறன் ஆவேசமாய்க் கேட்க, மணிமாறன் கைகளைக் கொட்டியவாறே சிரித்தான்.

"சபாஷ்! நான் நினைச்சது சரியாப் போச்சு. இதெல்லாம் உன் வேலையா? நீ பெரிய ஆள்தாண்ணா. அப்பா! உங்க மூத்த மகன் 'கேடி'ங்களோடு பழகிப் பழகி 'கிரிமினலா'வே ஆகிட்டான்."

"என்னடா சொன்ன?" என்றவாறே தம்பியின் சட்டையைப் பற்றி இழுக்க, அவனை அலட்சியமாய் ஒதுக்கினான் மணிமாறன்.

"அப்பா! உங்க மூத்தப் புள்ள செய்த 'கிரிமினல்' வேலையை நான் சொல்றேன். 'எனக்கு கடமை, கண்ணியம், என் சிருடை... இது மட்டும்தான் முக்கியம். கல்யாண வாழ்க்கை மேலே விருப்பம் இல்ல'ன்னு இவர் சொன்னதெல்லாம் பொய்."

"ஏய்..."

"சும்மா கத்தாதே! அம்மா... இவனுக்காக நீங்க பேசின பெண்ணை தவிர்க்கிறதுக்காக சொன்ன பொய், அது. சார், யாரையோ தீவிரமா 'லவ்' பண்ணிட்டு இருக்காரு. இன்னிக்குக்கூட அந்தப் பொண்ணை சந்திச்சதை நானே பார்த்தேன்."

"டேய்! உன் இஷ்டத்துக்கு உளறாதே. பேச்சை மாத்தி தப்பிக்கலாம்னு பார்க்கிறியா?"

"நான்தான் தப்பே பண்ணலைன்னு சொல்றேனே? பிறகேன் தப்பிக்க முயற்சிக்கணும்? நீ செய்கிற வேலையெல்லாம் அம்மா– அப்பாவுக்கு தெரிய வேண்டாம்?"

"நான் என்ன பண்ணினேன்?"

"எல்லாம் நீதான் பண்ணினே! அப்பா, இந்த போட்டோ... என் நண்பன் வேதாகூட 'பீச்'ல எடுத்தது. இதுல நான், அவன் தோள்லதான் கை போட்டிருந்தேன். இதை ஏதோ 'டிரிக்' பண்ணி அண்ணன்தான்



மாத்தி இருக்கான்."

"யூ... இடியட்! நான் ஏன்டா மாத்தணும்?"

"பொறு... சொல்றேன். எவளோ ஒருத்தியோட படத்தை 'செட்' பண்ணி– அதை உங்களையெல்லாம் நம்ப வெச்சு– எனக்கு நடக்கப்போற கல்யாணத்தை நிறுத்தணும்னுதான் உங்க மூத்த புள்ள இவ்வளவு 'கிரிமினல்' வேலை செய்திருக்கான்."

மணிமாறன் அடுக்கிய அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளில் இளமாறனே மிரண்டுதான் போனான். 'எப்போதும் கேலியும், கிண்டலுமாய் ஜாலியாய் சுற்றித்திரியும் விளையாட்டுப் பிள்ளை என்றல்லாவா இவனை நினைத்தோம்? தன் மீதுள்ள தப்பை மறைக்க, சற்றும் தயங்காமல் அடுத்தவர் மேல் இத்தனை பழிகளை கூசாமல் சுமத்துகிறான் என்றால்... இவனுக்கு பொய் பேசுவது புதிதில்லையோ?

சர்வ சாதாரணமாய் பொய்– புரட்டு செய்கிறவனால் மட்டுமே இது சாத்தியம்? சற்றும் தடுமாறாமல் பொய்யை அள்ளி வீசுகிறானே?' அண்ணன் மிரண்டு நிற்க, அந்த மவுனத்தையே தனக்கு சாதகமாக்கிக்கொண்டான் தம்பி.

"இப்படி எல்லாத் தப்பையும் இவன் பண்ணிட்டு, பெரிய யோக்கியன் மாதிரி என்னை அடிக்கிறான்."

"மணி! அவன்தானேப்பா மாமாகிட்ட பேசி மேகலாவை உனக்கு கட்டி வைக்க சம்மதிச்சான்? அவன் எப்படி உன் கல்யாணத்தை நிறுத்துவான்?"

"அத்தனையும் நடிப்பும்மா! அப்பத்தானே அவன் மேலே உங்களுக்கு நம்பிக்கை வரும்? மாமாவோட தொந்தரவு தாங்காம எனக்கு மேகலாவை விட்டுத் தர்ற மாதிரி தள்ளி விட்டுட்டான்.

என் கல்யாண விஷயம் எப்படியோ இவனது காதலிக்கு தெரிஞ்சிருக்கும். வீட்ல அண்ணனை வெச்சிக்கிட்டு தம்பிக்குக் கல்யாணம் பண்ணின்னா, இவனுக்கு அவமானம்தானே? நாளைக்கு இவனுக்கு பெண் கொடுப்பவன் யோசிப்பானில்ல?

அதை அவ சொல்லிக் கொடுத்திருப்பாள். உடனே இவன் எங்கிட்ட வந்து சாமியாடறான். 'தம்பி! இப்ப இந்தக் கல்யாணம் வேண்டாம். என் கல்யாணம் முடிஞ்சு பிறகு, நீ பண்ணிக்கடா'ன்னு சொன்னா கையைக் கட்டிக்கிட்டு 'சரி'ன்னு சொல்லப்போறேன். அதை விட்டுட்டு ஏன் இவ்வளவு தில்லுமுல்லு வேலை செய்து என்னை அசிங்கப்படுத்துறான்? மாமா வீட்டுக்குத் தெரிஞ்சா என்னாகும்? யாராவது என்னை மனுஷனா மதிப்பாங்களா?

இவனது புத்தி ஏம்மா இப்படிப் போகுது? நான் இவன் கூடப் பிறந்த

தம்பிதானே? என்னை ஏன் இப்படி கேவலப்படுத்த நினைக்கிறான்?"

"போதும்டா"- கங்காதரன் உரத்த குரலில் தடுத்தார். மணிமாறன் திடுக்கிட்டான்.

"அ...ப்...பா."

"எனக்கு எம் புள்ளையப் பத்தி தெரியும்டா. அவனை நீ ஒண்ணும் சொல்ல வேண்டாம்? பொய் சொல்[illegible] புதுசா என்ன?"

"இல்லப்பா! அவன் சொன்னது நிஜம்"- இளமாறனின் பதிலில் பெற்றவர் மட்டுமல்ல மணிமாறனே திடுக்கிட்டுப் போனான்.

"மாறா! என்னப்பா... சொல்றே?"

"ஆமாப்பா! நான் ஒரு பொண்ணை விரும்புறேன். இன்னிக்கு மணி, எங்கூட பார்த்தது அவளைத்தான்"- உறுதியான குரலில் இளமாறன் சொல்ல, தம்பியின் மூளைக்குள் மின்னல் வெட்டியது.

'அப்படிப் போடு! குத்துமதிப்பா ஏதோ ஒண்ணை இழுத்துவிட்டா... அதுகூட 'ஓர்க் அவுட்' ஆகுதே மணி! இனி உன்னை யாரும் அசைச்சுக்க முடியாதுடா' தன்னையே மெச்சிக்கொண்டிருந்தபோது, இளமாறன் அவனைவிட்டு விலகி நடந்தான்.

"ஆனா... மணி சொன்னதுல இது மட்டும்தாம்ப்பா உண்மை. நானே இதைப் பத்தி உங்ககிட்ட பேசணும்னு இருந்தேன். அதுக்குள்ள மாமா வந்து பெண் பார்க்க நாள் குறிச்சிட்டாங்க.

'சரி! நல்ல காரியம்... நம்மால தடைபட வேண்டாம். முதலில் பெண்ணை பார்க்கட்டும். பிறகு, உங்ககிட்ட சொல்லி எங்க ரெண்டு பேர் கல்யாணத்தையும் ஒரே மேடையில வெக்கச் சொல்லாம்னு இருந்தேன்.

ஆனா, தம்பியே சொல்லிட்டான். சரி! என் விஷயத்தை பிறகு பேசலாம்ப்பா. முதல்ல மாமாகிட்ட போன் பண்ணி, நடக்கிற விசேஷத்தை நிறுத்தச் சொல்லிடுங்க" என்றவாறே சுவரில் சாவியோடு தொங்கிய பித்தளைப் பூட்டை கையில் எடுத்தான்.

மீனாட்சி பதறினாள். "ஏம்பா நிறுத்தணும்? நீயே சொல்லிட்டியே... 'ஒரே மேடையில ரெண்டு கல்யாணத்தையும் வெச்சிடலாம்'னு."

"அம்மா! உங்க இளைய மகனுக்கு ஏற்கெனவே கல்யாணம் முடிஞ்சாச்சு. மருமக இப்ப ஏழு மாசக் கர்ப்பிணி. நாம சீமந்தம்தான் பண்ணணும்."

"ஏய்! ஏன் திரும்பவும் உளறுறே?" என பதறிய மணிமாறனின் கழுத்தைப் பிடித்து இழுத்து, தன் அறைக்குள் தள்ளி கதவைப் பூட்டி சாவியை எடுத்துக்கொண்டான்.



"ஏய்! கதவைத் திறடா. என்னை ஏன் பூட்டுறே? மரியாதையா கதவைத் திற."

"மாறா! என்னப்பா இது? அவனை ஏன் அடைச்சி வைக்கிற?"

"பூட்டி வைக்கலன்னா தப்பிச்சிடுவாம்மா."

"மாறா?"

"நாமதாம்மா அவனை இன்னும் குழந்தையாவே நினைச்சிட்டு இருக்கோம். ஆனா, அவன் பெரிய பெரிய காரியமெல்லாம் பண்ணி இருக்கான். இனியும் இப்படியே விட்டுட்டா... இவன் இதைவிட மோசமான ரவுடி ஆகிவிடுவான்."

"மாறா! என்னய்யா சொல்றே?"

"அப்பா... எம் மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்குல்ல?"

"இருக்குய்யா. நிறைய இருக்கு."

"அப்போ எனக்காக கொஞ்ச நேரம் இவன் கத்துறதை பொறுத்துக்கோங்க. நான் இப்ப வந்துடுறேன்."

"எங்கப்பா போற?"

"அவன் செய்த தப்புக்கு சாட்சி கேட்டானே! அதைக் கொண்டு வரப் போறேன். தயவுசெய்து நான் வர்ற வரைக்கும் அந்தக் கதவை யாரும் திறக்க முயற்சி பண்ணாதீங்க."

"அண்ணே! உனக்கு என்னைப் பத்தித் தெரியாது. மரியாதையாக் கதவைத் திறந்துடு. திறடா."

"அடுத்து என்ன பொய் சொல்லி தப்பிக்கலாம்னு யோசி மணி. நான் இப்ப வந்துடுறேன்" என்றவாறு 'பைக்' சாவியை எடுத்துக்கொண்டு வெளியேறினான் இளமாறன்.

மணிமாறன் கத்தல் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்க, மீனாட்சி கண்களில் நீரோடு தரையில் அமர்ந்தாள்.

'இரண்டுமே நான் பெற்ற பிள்ளை! இதில் எந்தப் பிள்ளை சொல்வது உண்மை... யார் சொல்வதை நம்புவது?'- குழப்பமாய் தலையைப் பற்றிக்கொண்டார் கங்காதரன்.

## 11

***உனக்காக எதையும் இழப்பவர்களைவிட...***

**எதற்காகவும் உன்னை**
**இழக்காதவர்களை நேசி!**

மதிய உணவில் கை வைத்த நேரம். அன்பரசியின் கைப்பேசி அழைத்தது. அம்பிகை அலுத்துக்கொண்டாள்.

"அடடா! இது ஒண்ணு... எப்பப் பார்த்தாலும் சிணுங்கிகிட்டே இருக்கு. ஏய்! சாப்பாட்டுல கைவெச்சிட்டு எழுந்திடாதே. நான் எடுத்துட்டு வர்றேன்."

"சீக்கிரம்மா! 'கட்'டாகிடப் போகுது."

"போனாப் போகுது... விடு. நீ லீவு போடுறதே அதிசயம். விடுமுறை அன்னிக்காவது ஒரு பிடி சோறு நிம்மதியா சாப்பிட முடியுதா?" என்றவாறே வீறிட்டுக்கொண்டிருந்த போனை எடுத்து மகளிடம் கொடுத்தாள்.

"ஹலோ."

"அன்பரசி சிஸ்டர்தானே?"

"ஆமா... சொல்லு காயத்திரி."

"சிஸ்டர்! சாந்தின்ற 'பேஷண்ட்' இருக்காங்கல்ல..."

"ஆமா! என்னாச்சு? எதுவும் பிரச்சினையா?"

"இல்ல. அவங்ககிட்ட ஏதோ விசாரிக்கணும்னு அந்த இன்ஸ்பெக்டர்..."– காயத்திரி பேசும்போதே போன் கைமாறியது.

"காயத்திரி?"

"அன்பு! நான் இளமாறன்" என்ற குரலில் நரம்புகள் இனிமையாய் தந்தியடித்தன. உள்ளம் துள்ளியது.

"சார்! நீங்...களா?"

"அன்பு! கொஞ்சம் ஆஸ்பத்திரி வரை வர முடியுமா?"

"என்ன சார்... ஏதாவது பிரச்சினையா?"

"ஆமா! கொஞ்சம் நீங்களும் வந்தா நல்லா இருக்கும். அந்தப் பொண்ணு, என்னைப் பார்த்தாலே ரொம்ப பயப்படுறா."

"சாந்தியா?"

"ம்... அவகிட்ட கொஞ்சம் விசாரிக்கணும். ஆனா, எது கேட்டாலும் மிரண்டு போயிடுது. பயப்படுது."

"எதைப் பத்தி சார் விசாரிக்கணும்?"

"அவ கல்யாணத்தைப் பத்தி... நாகராஜனைப் பத்தி."

"அதான் நானே எல்லாத்தையும் சொல்லிட்டேனே?"



"இல்ல. எனக்கு அதைவிட நிறைய தகவல்கள் தேவை. ஏதாவது ஆதாரம் வேணும். அப்பத்தான்..."

"சார்... ஒரு நிமிஷம்!

"என்ன?"

"நீங்க பேசுறதைப் பார்த்தா... அவனை கண்டுபிடிச்சிட்டீங்களா? யார் சார்? இப்ப உங்கக்கூடவா இருக்கான்?"

"இல்ல. வீட்டுல பூட்டி வெச்சிருக்கேன்."

"எ...ன்...ன?"

"நமக்கு பயம் இல்ல அன்பு. நீங்க வந்தால்தான் அடுத்த நடவடிக்கை எடுக்க முடியும்."

"இதோ கிளம்பிட்டேன். ஒரு பத்து நிமிஷத்துல அங்கே இருப்பேன். வெச்சிடுறேன்" என்றவாறு இணைப்பை துண்டித்து, ஓடிச்சென்று கையைக் கழுவினாள்.

"ஏய் அன்பு! என்ன பண்றே?"

"அம்மா! சாந்தியோட கணவன் கிடைச்சிட்டான் போல இருக்கும்மா, இளமாறன் சார்தான் போன் பண்ணினார்!"

"அது யாருடி?"

"அதான்... அன்னிக்கு கோபி சொன்னானே."

"ஏய்! போலீஸ்காரனா? அவன் ஏன்டி உனக்கு போன் பண்ணினான்?"

"ம்மா! ஏன் பதறுறீங்க? ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வந்து, எல்லாம் விபரமாச் சொல்றேன். பை... ம்மா"– மளமளவென தன் கைப்பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்.

"ஹூம்! என்ன வேலை இது? இப்படியே சாப்பிடாம ஓடினா, இருக்கிற உடம்பும் தேய்ஞ்சு போயிடும். முதல்ல இந்த வேலையை விட்டொழி"– அம்பிகையின் வார்த்தைகள் காற்றில் கலந்தன.

அதற்குள் பிரதான சாலையை அடைந்திருந்தாள் அன்பரசி. பேருந்துக்கு காத்திருந்தால் நேரம் வீணாகிவிடும் என முடிவெடுத்து, சாலையில் காலியாய் போய்க்கொண்டிருந்த ஆட்டோவை நிறுத்தி ஏறிக்கொண்டாள்.

மனம் வெகு பதற்றமானது. 'அவன் யாராக இருக்கும்? புகைப்படம் கொடுத்த கொஞ்ச நேரத்திலே கண்டுபிடித்துவிட்டாரே! கோபி சொன்னது போல் இவர் பெரிய ஆள்தான். எப்படியோ சாந்தியின் வாழ்வு திரும்ப கிடைத்தால் போதும்.

அவன் மட்டும் நேரில் கிடைத்தால், ஒரு நாலு வார்த்தையாவது நறுக்கென கேட்க வேண்டும். பெண்கள் என்றால் விளையாட்டுப் பொருளென்று நினைத்தானா? முடிந்தால் இளமாறனிடம் சொல்லி, நாலு சாத்து சாத்தச் சொல்ல வேண்டும்.

அப்போத்தான் உடம்புல பயம் இருக்கும். திரும்பவும் விட்டுட்டு ஓட நினைக்க மாட்டான். ஒருவேளை... சாந்தி சொன்னதுபோல் அவனுக்கு இன்னொரு திருமணம் ஆகியிருந்தால்...?'

"அம்மா! ஆஸ்பத்திரி வந்திருச்சும்மா"– ஆட்டோ டிரைவர் குரல் கொடுத்த பிறகே சுய உணர்வுக்கு வந்தாள். பணத்தைக் கொடுத்துவிட்டு, புயல் வேகத்தில் சாந்தி இருந்த 'வார்டை' நோக்கிச் செல்ல... அவளது படுக்கை அருகே நின்று ஏதோ கேட்டுக்கொண்டிருந்தான் இளமாறன்.

மூச்சு வாங்க உள்ளே நுழைந்தாள். "எக்ஸ்கியூஸ் மீ சார்."

"ஹலோ... வாங்க அன்பு. ஸாரி! உங்களை தொந்தரவு பண்ணிட்டேனா?"

"இல்ல... இல்ல. சாந்தி விஷயத்துல நல்லது நடந்தா போதும் எனக்கு. சொல்லுங்க சார்... அவனைக் கண்டுபிடிச்சுட்டீங்களா?"

"கிட்டத்தட்ட!"

"அப்படின்னா?"

"நீங்க கொடுத்த படம், சொன்ன அடையாளத்தை எல்லாம் வெச்சு ஒருத்தனை பிடிச்சி விசாரிச்சேன். ஆனா... இந்த பேர்தான் உதைக்குது."

"ஏன் சார்?"

"நான் பிடிச்சி வெச்சிருக்கிறவன் பேரு நாகராஜன் இல்ல."

"வேற?"– குழப்பமாய் அன்பரசி கேட்க, பெருமூச்சு ஒன்றை வெளியிட்டான் இளமாறன்.

"அவன் பேரு... மணிமாறன்."

"என்ன? மணி..." என்றவள், லேசாய் அதிர்ந்து அவனது முகத்தை ஊடுறவியவாறே கேட்டாள்:

"அது... உங்க... தம்..."

"ம்"– மவுனமாய் தலையாட்டினான்.

"அப்படியா! இது... எப்படி? என்னால நம்பவே முடியல."

"என்னாலயும்தான்! இந்தப் பொண்ணுகூட நாலு மாசம் குடும்பம் நடத்தி இருக்கான். ஆனா, வீட்ல எங்க யாருக்கும் 'எந்த சந்தேகமும்



வந்ததில்ல. எப்பவும்போல வருவான்... போவான்.

பாதி நாள், 'இரவு வேலை'ன்னு சொல்வான். 'ஐ.டி.'யில வேலை பார்க்கிறதால அவன் மேலே குடும்பத்துல யாரும் சந்தேகமும் படல. அது 'அவனுக்கு ரொம்ப வசதியாப் போச்சு. ம்ப்ச்! அம்மா– அப்பா ரொம்ப நொந்துட்டாங்க."

வருத்தம் தோய்ந்த முகத்தோடு சொன்னவனைக் கண்டு படுக்கையில் இருந்த சாந்தி இன்னும் மிரண்டாள்.

'என்ன... இவரோட தம்பியா அவன்? பேரைக்கூட மாத்தி இருந்தானா? எத்தனை ஏமாளியாய் இருந்துவிட்டேன்.'

"இப்ப உங்க தம்பி என்னதான் சொல்றார்?"

"என்னென்னவோ சொல்றான். இந்த போட்டோவே உண்மை இல்லைங்கறான். 'நான் அவளை ஏமாத்தினதுக்கு– கல்யாணம் பண்ணினதுக்கு என்ன சாட்சி?'ன்னு கேட்கிறான்..."

"சாட்சி... சாட்சிக்கு இப்போ எங்கே போறது?"– அன்பரசி குழம்பித் தவிக்க, சாந்தியிடம் திரும்பினான்.

"ஏம்மா! அவனை நம்பி வந்தியே! 'ரிஜிஸ்டர் ஆபீஸ்'லயாவது கல்யாணம் பண்ணிக்குவோம்னு சொல்லி இருக்கலாமில்ல?"

"சொ...ன்னேன் சார்! அவர்தான், 'அண்ணனை வீட்ல வெச்சிட்டு இப்படி கல்யாணம் பண்ணினா... மரியாதை கெட்டுடும்'னு சொல்லிட்டார்."

"அவன் சொன்னா நீ விட்டுறதா? எந்த நம்பிக்கையில அவன் பின்னால வந்தே? நீங்க கல்யாணம் பண்ணினதுக்கும்கூட சாட்சி இல்லையே! இப்ப எப்படி உங்களை சேர்த்து வைக்கிறது?"

"சார்! சாந்தியே நேர்ல வந்து உங்க அம்மா– அப்பாகிட்ட சொன்னால்?"– அன்பரசி ஆர்வமாய்க் கேட்க, மறுப்பாய் தலையசைத்தான்.

"நான்கூட அந்த யோசனையிலதான் வந்தேன். ஆனா, இந்தப் பொண்ணு படுக்கையைவிட்டு எழக்கூடாதுன்னு டாக்டர் கண்டிப்பா சொல்லிட்டாங்க."

"ஆமா. அவ உடல்நிலை அப்படி இருக்கு. ஏன் சார்?. பேசாம... அவங்களை இங்கே கூட்டிட்டு வந்துட்டா என்ன?"

"என்ன அன்பு நீங்க? இங்கே எத்தனை 'பேஷண்ட்' இருக்காங்க? இவங்க முன்னாடி வெச்சு கோர்ட்டுல விசாரிக்கிற மாதிரி விசாரிக்கச் சொல்றீங்களா? அது சாந்திக்கும் சங்கடம். எங்க பெற்றோருக்கும் வருத்தம்.

அதோடு, அம்மா- அப்பாவை நம்ப வைக்கிறதுக்காக நான் சாட்சியைத் தேடல. 'எந்தத் தப்புமே செய்யலை'ன்னு சொல்றவனோட குட்டை உடைக்கிறதுக்காகத்தான் பாடுபடுறேன்.

நிச்சயமா ஏதாவது ஒரு தடயமாவது விட்டிருப்பான். அது மட்டும் கிடைச்சாப் போதும். சாந்தி! நல்லா யோசனை பண்ணிப் பாருங்க. உங்க கல்யாணம் நடந்ததை யாராவது நேர்ல பார்த்தாங்களா? அதாவது, அந்தக் கோவில்ல இருந்த அர்ச்சகர்... இல்ல... வேற யாராவது... பிளீஸ்! கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க."

"இல்ல சார்! அது ஒரு சின்னக் கோவில். சும்மா ரோட்டு பக்கமா இருந்த பிள்ளையார் கோவில். மேள- தாளம், அட்சதை சொந்த- பந்தம் எதுவுமே இல்லாமத்தான் கல்யாணம் நடந்தது. அதுக்கு அந்த பிள்ளையார்தான் சாட்சி"- சாந்தி கண்ணீரோடு சொல்ல, அன்பரசியின் முகம் மலர்ந்தது.

"ஏய் சாந்தி! மறந்துட்டியா? உன் கல்யாணத்தப்ப கூட ஒரு 'பிரெண்ட்' நின்னாருன்னு சொன்னியே?"

"அட! ஆமா நர்சம்மா! சார்! ஒரே ஒருத்தர் இருந்தார் சார். அவர்தான் இந்த மஞ்சக் கயிறை வாங்கிட்டு வந்தார்" என்றதும், உற்சாகமானான் இளமாறன்.

"அப்படியா? அவன் பேரென்ன தெரியுமா?"

"பேரு... ஏன் சார்? இவர் பேரே நிசமில்லையே! அந்த ஆள் பேர் மட்டும் உண்மையானதா இருக்குமா?"

"இருக்கலாம். ஏன்னா... என்னதான் திறமையா ஒரு குற்றத்தை மறைச்சாலும், எப்படியும் சில தவறுகள் இருக்கும். சொல்லு... அவன் பேர் என்ன?"

"வேதான்னு கூப்பிட்டார் சார். ஆனா, முழுப் பெயர் தெரியாது."

"வே...தா..."- யோசனையாய் முகம் சுருக்கினான்.

'இதை சமீபத்தில்தானே கேட்டிருக்கிறேன். எங்கே... யார் சொன்னது?' நெற்றியைத் தட்டி யோசித்தான்.

'இந்த போட்டோ என் நண்பன் வேதாவோடு 'பீச்'ல எடுத்தது'- சட்டென மணிமாறன் சொன்னது நினைவு வர, மலர்ந்தான்.

"ஆமாம்! இது அவன் நண்பன்தான்."

"சார்!"

"அன்பு! இது போதும். இந்த வேதா மட்டும் கிடைச்சாப் போதும். எல்லாப் பிரச்சினையும் நல்லபடியா முடிஞ்சிடும்."

"சார்! அந்த வேதாவை எப்படி சார் கண்டுபிடிப்பீங்க?"



"அது ஒண்ணும் சிரமமில்லை. மணியோட செல்போன்ல அவன் 'நம்பர்' இருக்கும். அதுல இருந்தே போன் பண்ணி, அவனை எங்க வீட்டுக்கு வர வைக்க முடியும்."

"ஆனா... அதுக்குள்ள உங்க தம்பி சொல்லிட் டாருண்ணா?"

"நோ சான்ஸ்! அவனை இப்ப என் அறையிலதான் அடைச்சி வெச்சிருக்கேன். என் அறையில 'லேண்ட் லைன்' கிடையாது. செல்போன் நிச்சயமா அவன் அறையிலதான் இருக்கும். அவன் போட்டிருந்த சட்டையிலதான் வெச்சிருப்பான்."

"அப்ப உடனே கிளம்புங்க சார்."

"கிளம்புவோம், நம்ம ரெண்டு பேரும்."

"நா...னா? நான் எதுக்கு?- தடுமாறினாள் அன்பரசி.

"அன்பு பிளீஸ். இது மறுக்க வேண்டிய நேரமில்ல. சாந்தியை உங்களுக்கு நாலஞ்சி மாசமாத் தெரியும். அவ எவ்வளவு கஷ்டங்களை அனுபவிச்சாள்னு புரியும்.

இப்ப அவளோட நிலையும் உங்களுக்குத் தெரியும். அதனால அவளைப் பத்தி நான் சொல்றதைவிட, அவ சார்பாக நீங்க பேசினா நல்லா இருக்கும். என் வார்த்தைகளைவிட, சாந்தியை கவனிச்சுக்கிற ஒரு நர்ஸோட வார்த்தையை எங்க வீட்ல எல்லாரும் நம்புவாங்க.

குறிப்பா, மணியோட நாடகத்தை முறிக்க நீங்க வந்தே ஆகணும். பிளீஸ்! எனக்காக இல்லாட்டியும், உங்க 'பேஷண்ட்'டுக்காக... பிளீஸ் அன்பு"- அவனது வேண்டுதலை மறுக்க முடியாமல் பார்வையைத் திருப்பினாள்.

சாந்தியின் பரிதாப முகமும், அதில் தெரிந்த ஏக்கமும் மனதைச் சுட, தயக்கமாய் சம்மதித்தாள். "போலாம்."

இளமாறனின் முகம் மலர்ந்தது. " 'தேங்க்யூ ஸோ மச். பிளீஸ் கம்' "என நடக்க ஆரம்பித்தான். உள்ளே எழுந்த கலக்கத்தோடு அவனைப் பின்தொடர்ந்தாள் அன்பரசி.

மளமளவென கீழே இறங்கி தன் 'பைக்'கை நெருங்கியவன், ஒரு கணம் தயங்கிவிட்டு அவளை வெளியே அழைத்து வந்து ஆட்டோவில் ஏற்றினான்.

"அன்பு! நீங்க ஆட்டோவுல போங்க.. நான் என் வண்டியில வர்றேன்" என்றபோது, அன்பரசியின் மனதில் இளமாறன் மலையளவு உயர்ந்துவிட்டான். திருப்தியாய் புன்னகைத்தாள்.

இருவருமாய் வீட்டை அடைந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்து இறங்கினான் ஓர் இளைஞன். இளமாறனைக் கண்டதும் நெருங்கி

வந்தான்.

"ஹலோ! அண்ணா... எப்படி இருக்கீங்க?"

"நல்ல இருக்கேன். நீங்க யாருன்னு... தெரியலையே" யோசனையாய் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினான்.

"நான்தான் வேதா. மணியோட நண்பன்."

"ஓ! நீங்கதானா? உங்களைத்தான் தேடிட்டு இருந்தோம். வாங்க... வாங்க" என்றவாறே அன்பரசியைப் பார்த்தான்.

"மணி 'ரெடி'யாகிட்டானாண்ணா? போன் பண்ணினா எடுக்கவே மாட்டேங்கிறான்."

"அவன் கொஞ்சம் 'பிஸி'யாக இருக்கான்! ஆமா, எங்கே போக கிளம்பி இருக்கீங்க?"

"என்னண்ணா! இன்னிக்கு அவனுக்கு பெண் பார்க்க போகணுமில்ல. அதுக்குத்தான் கூப்பிட்டான். அதான் தயாராகி வந்தேன்."

"ஓஹோ! அவனுக்கு பெண் பார்க்கிறது... கல்யாணம் பண்ணி வைக்கிறது... இதெல்லாம் உன் வேலைதானா?"– இளமாறன் கடுமையான குரலில் கேட்க, வேதாவின் முகம் மாறியது.

## 12

*நீ பேசும் வார்த்தை*
*அனைவருக்கும் புரியும்*
*ஆனால் உன் மவுனம்*
*உன்னை நேசிக்கும்*
*எனக்கு மட்டுமே புரியும்!*

**வே**தாவின் கன்னங்கள் வீங்கி தெரிந்தன. அவற்றில் இளமாறனின் கைரேகை பதிந்து போயிருக்க, தலையைக் குனிந்தவாறே அவன் சொன்ன உண்மைகளைக் கேட்டு சிலையாய் உறைந்து போனாள் மீனாட்சி.

கங்காதரனும், இளமாறனும் பற்களைக் கடித்துக்கொண்டு நிற்க... மணிமாறனின் கண்கள்; நண்பனைக் கொலை வெறியோடு முறைத்துக் கொண்டிருந்தன. மீனாட்சியின் அருகே கைகளைக் கட்டிக்கொண்டு மவுனமாய் நின்றாள் அன்பரசி.

வேதா இன்னும் அதே பாவ்னையோடு பேசிக்கொண்டிருந்தான்.



"தப்புதான். மணிமாறன் செய்ததுக்கெல்லாம் துணை போனது தப்புதான்! ஆனா, அவன் உண்மையாவே சாந்தியை விரும்புறான்னு நினைச்சித்தான், அவங்க கல்யாணத்தை நடத்தி வெச்சேன். ஆனா, இப்படி பாதியில விட்டுட்டு போவான்னு நினைக்கல.

சாந்தி இவனை நம்பித்தான் வந்தாள். அவ நிறைய படிக்காதவ. கொஞ்சம் கஷ்டப்பட்ட குடும்பம். யார்கிட்டயும் அதிகம் பேசமாட்டாள். அதனால மணிமாறன் சொன்னதை எல்லாம். அப்படியே நம்பினாள்.

ஆனா, சத்தியமாச் சொல்றேன் அண்ணா. இவன் பேரை மாத்திச் சொன்ன விஷயம் எனக்குத் தெரியவே தெரியாது. ஒரு நாலு மாசம் முன்னாலதான் சாந்தி வீட்டுக்கு போகாம இருக்கான்னு தெரியும்.

'ஏன்?'னு கேட்டேன். 'எனக்கும், அவளுக்கும் ஒத்துவரல. அவங்க வீட்டுக்கே போயிட்டாள்'னு சொன்னான். நானும் அது உண்மையா... பொய்யான்னு ஆராயல. என் வேலையைப் பார்த்துட்டு இருந்தேன்."

"அந்தப் பொண்ணு அதே வீட்ல இருக்காளா... இல்லையான்னு போய் பார்க்கல?"

"இல்லண்ணா! மணி மேலே எனக்கு எப்பவும் சந்தேகம் வந்ததில்ல. ஆனா, போன மாசம் அரசாங்க ஆஸ்பத்திரியில இருந்து அவ வெளியே வரும்போது பார்த்தேன். அடையாளமே தெரியாம மாறிப் போயிருந்தா. கர்ப்பமாவும் இருந்தா.

உடனே மணிகிட்ட வந்து சொன்னேன். 'அவ வேற எவனையாவது கட்டி இருப்பா. நமக்கேன்டா அவ பிரச்சினை?'ன்னு அலட்சியமா சொல்லிட்டான்."

இளமாறனின் பார்வை தன் தம்பியைப் பொசுக்கியது. அவமானமாய் தலையைக் குனிந்துகொண்டான் மணிமாறன்.

"ஆனா, அப்பத்தான் எனக்கு மணி மேல சந்தேகம் வந்தது. அதோடு, உங்க வீட்ல அவனுக்கு கல்யாண ஏற்பாடு நடக்கிறதும் தெரிஞ்சது. அதனால மணிகிட்டக்கூட சொல்லாம நான் சாந்தியைப் பார்க்கப் போனேன்.

அவ சொல்லித்தான், இவன் விட்டுட்டு ஓடி வந்தது தெரிஞ்சது. சாப்பாட்டுக்குக்கூட வழி இல்லாம– வயித்துப் புள்ளையோட அவ நின்ன கோலம் ரொம்ப வருத்தமா இருந்தது. கைச் செலவுக்குக் கொஞ்சம் பணம் கொடுத்துட்டு வந்தேன்."

"இவன்கிட்ட கேட்டியா?"

"கேட்டேன்... 'ஏன்டா இப்படிச் செய்தே?'ன்னு கேட்டேன். 'பத்து பைசா இல்லாதவனைக் கட்டிக்கிட்டு என்ன பண்ணச் சொல்றே? என் மாமா, வாரிசு இல்லாத கோடீஸ்வரர். அவர் பொண்ணைக் கட்டிகிட்டு, அவரோட மொத்த சொத்துக்கும் வாரிசாகப் போறேன். இந்த மாதிரி நேரத்தில் அவனைப் பத்தி பேசி எரிச்சலை உண்டாக்காதே'ன்னு சொல்லிட்டான்.

பணத்தாசை மணியோட கண்ணை மறைச்சிட்டிருக்கு. இனி நிச்சயமா சாந்திகூட சேர மாட்டான்னு தெரிஞ்சது. அதனால போன மாசத்தில ஒரு நாள்... திரும்பவும் அவ வீட்டுக்குப் போனேன்."

"போய்... 'உன் புருஷனுக்கு வேற இடத்துல கல்யாணமாயிடுச்சி. நீ பேசாம உன் வீட்டுக்குப் போயிடு'ன்னு சொன்னீங்க இல்ல?"– அன்பரசி கோபமாய்க் கேட்க, அமைதியாய் தலையாட்டினான்.

"ஏம்ப்பா... அவ மேலே இவ்வளவு அக்கறை வெச்சிருக்கியே! இப்படி கஷ்டப்படுறதப் பார்த்துட்டு, இவங்க வீட்ல வந்து பெரியவங்ககிட்ட சொல்லி இருக்கலாமில்ல?"

"ஐயோ! மணி என்னைக் கொன்னே போட்டுடுவான்."

"எங்கிட்டயாவது சொல்லி இருக்கலாமேடா"– இளமாறன் கேட்க, அவஸ்தையாய் விழித்தான்.

"இல்லண்ணா! உங்களைப் பார்த்தாலே எங்களுக்கெல்லாம் ரொம்ப பயம். அதோட... உங்களை முரட்டு ஒரு போலீஸ்ன்னுதான் மணி எங்கிட்ட சொல்லுவான்."

"சொல்லி இருப்பான். அஞ்சே நிமிஷத்துல எம் புள்ள மேலே ஆயிரம் பழி போட்டவனாச்சே! வாய் கூசாம எவ்வளவு பொய்? எவ்வளவு சாமர்த்தியம்? மீனாட்சி! உன் செல்லப்பிள்ளை செய்த காரியத்தையெல்லாம் காது குளிரக் கேட்டியா?

எல்லாத் தப்பையும் இந்த நாய் பண்ணிட்டு, எத்தனை சுலபமா மாறன் மேலே பழியப் போட்டுட்டான்? சொல்லு! இவனை என்ன பண்றது? பேசாம மாறன்கிட்ட சொல்லி உள்ளே போட்டுடலாமா? ஆயுசுக்கும் களியைத் திங்கட்டும்"– கங்காதரன் ஆத்திரமாய்ச் சொல்ல, மீனாட்சியிடம் துளியும் அசைவில்லை.

கண்களில் மட்டும் நீர் நிற்காமல் வழிந்தோடியது. அன்பரசி தொண்டையைச் செருமிக்கொண்டாள்.

"சார்! இவரை உள்ளே போடுறதால யாருக்கு என்ன லாபம்?"

"என்னம்மா சொல்ற?"



"இவரோட புள்ளைய– உங்க வீட்டு வாரிசை சுமந்துட்டு ஒருத்தி அநாதையா நிக்கிறாளே! அவளுக்கு என்ன செய்யப்போறீங்க?"

மீனாட்சி மெல்ல நிமிர்ந்தாள்.

"உங்க பையனுக்கு அவகூட வாழ விருப்பமா... இல்லயான்றது முக்கியமில்ல. உங்க வீட்டு வாரிசு அநாதை ஆகிடக்கூடாது."

"என்னது?"

"சாந்தி சொன்னதைத்தான் சொல்றேன். பாவமும், பழியும் பெண்கள் தலையிலதானே விடியுது? உங்க பிள்ளை எதுவும் தெரியாத மாதிரி ஒதுங்கிட்டாரு. ஆனா, அவ வயித்துல சுமையோட– ஊரார் கேட்கிற கேள்விக்கு பதில் சொல்ல முடியாம, வாழ வழி தெரியாம தற்கொலை செய்துக்கப் போறேங்கறா."

"இல்ல! இல்ல"– மீனாட்சி பதறினாள்.

"..................."

"அப்படி எதுவும் நடந்துடக்கூடாது. ஐயோ! அந்தப் பாவம் நமமைச் சும்மா விடுமா?"

"இனி எல்லாமே உங்க கையிலதாம்மா இருக்கு."

"என்னம்மா சொல்ல வர்றே?"– மீனாட்சியின் கைகள் அன்பரசியை பற்றிக்கொண்டன.

"சாந்தியோட உடல்நிலை இப்ப ரொம்ப மோசமா இருக்கு. அவளுக்கும், அவ குழந்தைக்கும்... நீங்களும், உங்க அரவணைப்பும்தான் தேவை. உங்க மருமகளா அவளை ஏத்துக்கிட்டு, அவளுக்கு இனிமேலாவது நிம்மதியான வாழ்க்கையைக் கொடுங்க."

"நிச்சயமா! எம் மருமகளை நான் கூட்டிட்டு வர்றேன். அவ இனிமே இந்த வீட்டுப் பொண்ணு."

"அம்மா..."– கோபமாய்க் கத்தினான் மணிமாறன்.

"என் நம்பிக்கையை மட்டுமில்ல... உன்னை நம்பி வந்தவ நம்பிக்கையையும் மண்ணாக்கிட்டே. இனி வாழ்நாள் முழுக்க நீ என்கிட்ட பேசக்கூடாது"– உறுதியான குரலில் சொன்னவளைக் கண்டு மிரண்டுபோனான் அவன்.

இளமாறன் தாயை அணைத்துக்கொண்டான். "என்னம்மா இது? ஏன் இப்படிப் பேசுறீங்க?"

"மாறா! நான் என் மருமகளைப் பார்க்கணும்ப்பா. என்னைக்



கூட்டிட்டுப் போறியா?"

"கண்டிப்பாம்மா! போலாமாப்பா..."

"போவோம்யா. ஏய்! நீ ஏன்டா இன்னும் நிற்கிற? போடா" என்றதும், பரிதாபமாய் விழித்துக்கொண்டிருந்த வேதா, 'விட்டால் போதும்' என்று ஓடினான்.

அனைவரும் வெளியேறி காரில் ஏற, அதுவரை கோபமாய் – அவமானமாய் முகத்தைத்



திருப்பிக்கொண்டு நின்ற மணிமாறன் தயக்கமாய் தானும் வந்து காரில் ஏறினான். கார் புறப்பட்டது.

மீனாட்சி தன் அருகே அமர்ந்திருந்த அன்பரசியை அப்போதுதான் நிதானமாய்ப் பார்த்தாள். காரை ஓட்டிக் கொண்டிருந்த மூத்த மகனை அழைத்தாள்.

"மாறா!"

"அம்மா."

"இந்தப் பொண்ணு யாருன்னு இதுவரை நீ சொல்லவே இல்லையேப்பா!"

"இதுவா? இது ஒரு தேவதைம்மா" என்றான், புன்னகையோடு.

"என்ன... தேவதையா?"

"ஆமாம்மா! அடுத்தவங்களுக்காக சிரமப்படுற... அடுத்தவங்களோட நல்லதையே நினைக்கிற தேவதை. கஷ்டப்படுற உயிரைப் பார்த்து கண்ணீர் சிந்துகிற ஓர் அற்புதமான இதயம் கொண்ட தேவதை! நான் சொன்னேனே... என் விரதத்தை கலைத்தவள்ன்னு...'!"

அன்பரசியின் முகம் செவ்வானமாய் மாறியது. கங்காதரன் மகனை அழைத்தார்.

"டேய்! நீ பேசுறதையும், இந்தப் பொண்ணு வெட்கப்படுறதையும் பார்த்தா... இது வேற மாதிரி தோணுதே. நீயும் இளையவன் மாதிரி..."

"சேச்சே! இவ உங்க மூத்த மருமகப்பா. உங்க சம்மதத்தோடத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு எம் மனசை இன்னும் அவகிட்ட சொல்லாம இருக்கேன்."

"சந்தோஷமா கட்டிக்கடா. பொண்ணு மகாலட்சுமியாட்டம் இருக்கா"– என்ற மீனாட்சி கட்டியணைத்து நெற்றியில் முத்தம் பதிக்க... பூரித்துப் போனாள், அன்பரசி. இளமாறனின் வெற்றிப் புன்னகை, அவள் மீது பூ மழை தூவியது.

(முற்றும்)

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ர.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்.
ராணி அச்சகம், 86. பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL: raniweekly@vsnl.net